தமிழ்

பாலபாரதி

வகுப்பு ஏழு

இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4A

குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு 51A

அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

அரசு தீர்மானம் எண் : கல்வி - 2116/(ப்ர. எண் 43/16) எஸ்டி-4 நாள் 25.04.2016 இன்படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 29.04.2022 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் இப்பாடநூலை 2022-23 கல்வி ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்

பாலபாரதி

வகுப்பு ஏழு

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே - 411004.

F3G9V2

உங்களது திறன்பேசியிலுள்ள DIKSHA APP மூலம் பாடநூலின் முன்பக்கத்திலுள்ள விரைவுக் குறியீடு (Q.R. Code) வழியாக மின்னணுப் பாடநூல் மற்றும் பாடப்பொருள் தொடர்பான கூடுதல் தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

முதல் பதிப்பு : 2022

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே - 411004.
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக்கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக் கூடாது.

தமிழ்ப் பாடநூல் குழு

திருமதி. தனலட்சுமி கணேசன் (தலைவர்)
திருமதி. ஜூலியட் ராஜன் (உறுப்பினர்)
திருமதி. பானுமதி சங்கர் (உறுப்பினர்)
முனைவர் துலசி பாரத் பூசன்
(உறுப்பினர் - செயலாளர்)

தமிழ்ப் பாடநூல் ஆய்வுக் குழு

திருமதி. கீதா கிறிஸ்டோபர்
திரு. அமல் ராஜரீகம் எல்.டி
திரு. இ. அமலசேகரன்
திரு. பி. ஜான் பீட்டர்
திருமதி. ஷீலா ஜஸ்டின்
திரு. ஜெபமணி தேவதாஸ்

நிபுணர் - ஆலோசகர்

திரு. ரெ. சிவா

தமிழ்ப் பாடநூல் ஒருங்கிணைப்பாளர்

முனைவர் துலசி பாரத் பூசன்
சிறப்பு அதிகாரி - தெலுகு
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் கழகம், புனே.

தயாரிப்பு

திரு. சச்சின் மேத்தா
முதன்மை தயாரிப்பு அதிகாரி
திரு. நிதின் வாணி
துணை தயாரிப்பு அதிகாரி

அச்சுக்கோர்ப்பு : ஜே. கே. ஆர்ட்ஸ், மும்பை
காகிதம் : 70 GSM Creamwove
அச்சாணை எண் : N/PB/2022-23/1,000
அச்சிட்டோர் : M/S. BOMBAY BINDING WORKS & PRINTERS, MUMBAI

அட்டைப் படம்
திருமதி. ஆபா பகவத்

படங்கள்
திரு. ஃபாருக் நதாப்

வெளியிடுவோர்

திரு. விவேக் உத்தம் கோசாவி
கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கக் கழகம்,
பிரபாதேவி, மும்பை - 400 025.

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

முகவுரை

அன்பு மாணவமணிகளே!

உங்கள் அனைவரையும் ஏழாம் வகுப்புக்கு அன்புடன் வரவேற்கிறோம். இப்புதிய ஏழாம் வகுப்பு தமிழ் பாலபாரதி பாடநூலை உங்கள் கரங்களில் தருவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

மாணவர்களே! உங்கள் எண்ணங்களையும் உணர்வுகளையும் சரியாகவும் திறமையாகவும் வெளிப்படுத்த வேண்டுமெனில், மொழியைப் பயன்படுத்துவதில் தேர்ச்சி பெறவேண்டும். இந்நூலைக் கற்பதன் மூலம் உங்கள் மொழிப்புலமை அதிகரிக்க வேண்டும் என்றும் மொழியை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்த முடியும் என்றும் நம்புகிறோம்.

இப்பாடநூல் பல்வேறு வகையான இலக்கியங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. நடைமுறையில் மொழி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் வெவ்வேறு பேச்சுவழக்குகளை அறிந்து கொள்ளும் வகையில் பேச்சுவழக்குப் பகுதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழ்மொழியின் சொல் அலங்காரம் பலதரப்பட்டதாக இருப்பதை உணர்வீர்கள். மொழி என்பது புதுமைக்கான ஓர் ஒப்பற்ற கருவியாகும். நீங்கள் புதுமையை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்நூலில் பல மொழியியல் செயல்கள் தரப்பட்டுள்ளன.

பாடநூலில் 'சிந்திப்போம், செயல்படுவோம்', 'உரையாடுவோம்', 'வாசிப்போம், வாசிப்பை நேசிப்போம்', 'தகவல் பெட்டியைத் திறப்போம்', 'விளையாடி மகிழ்வோம்', 'மொழியை அறிவோம்', 'மொழியோடு விளையாடுவோம்', 'இணையம் எனது நண்பன்' போன்ற பலவகை செயல்கள் தரப்பட்டுள்ளன. அச்செயல்களை நீங்கள் அவசியம் செய்ய வேண்டும். மொழி கற்றல் செயல்களின் மூலம் மொழியின் கூறுகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளைப் புரிந்து கொள்வீர்கள். கணினி, அலைபேசி மற்றும் பிற ஊடகங்களை பயன்படுத்தியும் சில செயல்களைச் செய்ய வேண்டியுள்ளது. அச்செயல்களை செய்யும்போது நீங்கள் நிச்சயம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் படைப்பாற்றல் மற்றும் சிந்தனையைத் தூண்டும் இப்பாடநூலைப் பற்றிய உங்கள் கருத்தை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகள்.

கிருஷ்ணகுமார் பாட்டீல்
இயக்குநர்
மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம்
மற்றும் பாடத்திட்ட ஆய்வுக்கழகம், புனே.

புனே
நாள் : 2 ஏப்ரல் 2022
இந்திய சூரிய ஆண்டு:
12 **சைத்ர** 1944.

மொழிப்பாடத்தில் கற்றல் விளைவுகள் : முதல் மொழி தமிழ் வகுப்பு : ஏழு

கற்றல் கற்பித்தல் செயல்முறைகள்	கற்றல் விளைவுகள்
அனைத்து மாணவர்களுக்கும் (வேறுபட்ட திறன்களைக் கொண்ட குழந்தைகள் உட்பட) தனியாகவோ, குழுவாகவோ கற்றல் வாய்ப்புகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். அதற்காக: • தங்கள் சொந்த மொழியில் பேசவும் கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல். • தாங்கள் பயன்படுத்தும் மொழியின் நுட்பமான கூறுகளைப் பற்றி கலந்துரையாட வாய்ப்பளித்தல். • குழுவாக செயல்கள் செய்யவும் ஒருவருக்கொருவர் செயல்கள் பற்றி கலந்துரையாடவும், கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும், வினாக்கள் எழுப்பவும் சுதந்திரம் அளித்தல். • தமிழுடன் தங்களது சொந்த மொழியிலுள்ள இலக்கியங்களைப் படிக்கவும் எழுதவும் வசதிகள் செய்து தருதல் மற்றும் அவை பற்றி கலந்துரையாட சுதந்திரம் அளித்தல். • தங்களது குடும்பம் மற்றும் வாழும் சமூகம் பற்றிய பல்வேறு இலக்கியங்களைப் படிக்கவும் கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல். • தங்கள் சொந்த மொழியைப் படிக்கும் போது எழுதுதலுக்கான செயல்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். எ.கா. சொல், விளையாட்டு, அலுவல் சாரா கடிதங்கள், புதிர்கள் நினைவுக் குறிப்புகள் முதலியன. • சுறுசுறுப்பாகவும் விழிப்புணர்வாகவும் இருப்பதற்காக உருவாக்கப்படும் இலக்கியங்களைப் (எ.கா. செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள், திரைப்படங்கள் மற்றும் காணொலி காட்சி உபகரணங்கள்) பார்க்கவும் கேட்கவும், படிக்கவும், எழுதவும் வாய்ப்பளித்தல். • கற்பனைத்திறன் மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தும் செயல்கள் எ.கா. நடிப்பு, அமைதியான நடிப்பு, கவிதைகள், பாடங்கள்,	07.07.01 பல்வேறு எழுத்து வகைகளில் எழுத்தாளர் வெளிப்படுத்தியுள்ள எண்ணங்கள் / நோக்கங்களைப் புரிந்து கொள்வது, தலைப்புக்குத் தொடர்பான அவரது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் ஒற்றுமை, கருத்து ஆதரிப்பு அல்லது மறுப்பை வெளிப்படுத்துதல். 07.07.02 ஏதேனும் படம், நிகழ்வு, நிகழ்ச்சியைப் பார்த்து சொந்த முறையில் வாய்மொழி அல்லது எழுத்துப்பூர்வமாக விவரித்தல். 07.07.03 படித்த இலக்கியங்களைப் பற்றி சிந்தித்து சிறந்த முறையில் புரிந்து கொள்வதற்காக வினாக்கள் வினவுதல், கலந்துரையாடுதல். 07.07.04 சுற்றுப் புறத்திலுள்ள நாட்டுப்புறக் கதைகள் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பேச்சுவழக்குகள் பற்றிக் கலந்துரையாடுதல், அவற்றின் நயம் பாராட்டுதல். 07.07.05 பல்வேறு கலைகள் (கைவினைக் கலை, கட்டிடக்கலை, உழவுத்தொழில், நடனக்கலை, ஓவியக்கலை) பற்றி அறிய பேரார்வத்தை வெளிப்படுத்துதல், அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தல், அவற்றின் நயம் பாராட்டுதல். 07.07.06 வெவ்வேறு வட்டார, சமூக மற்றும் புவியியல் நிகழ்வுகளுக்கு பகுத்தறிவு பதில்களை தருதல். எ.கா. மழைக்காலத்தில் அனைத்து சுற்றுச்சூழலும் பசுமையாக இருப்பது பற்றி கலந்துரையாடுதல். 07.07.07 பல்வேறு உணர்ச்சிகரமான பிரச்சினைகள் பற்றிய சொந்த பகுத்தறிவு சிந்தனைகளை வாய்மொழி, எழுத்துப்பூர்வமாக வெளிப்படுத்துதல். 07.07.08 பல்வேறு இலக்கியங்களிலுள்ள புதிய சொற்கள், சொலவடைகள், கருத்துகளின் பொருண்மையைப் புரிந்து கொண்டு, அவற்றின் நயம் பாராட்டுதல், பயன்படுத்துதல், பாடப்பகுதியிலுள்ள சிறப்பு கூறுகளை தேடிக் கண்டுபிடித்தல். 07.07.09 கதைகள், கவிதைகளைப் படித்து அவற்றின் வெவ்வேறு வகைகள் மற்றும் பாணிகளை இனம் காணல், அவற்றின் நயம் பாராட்டுதல், எ.கா. வர்ணனை, வாழ்க்கை வரலாறு. 07.07.10 எந்தவொரு பாடப்பொருளையும் புரிந்து கொள்ளும் போது தேவைக்கேற்ப உடன் நண்பர்கள், ஆசிரியர்களிடம் குறிப்பு உபகரணங்களுக்காக உதவியைப் பெறுதல். எ.கா. அகராதி, இணையம், பிற குறிப்பு மூலங்கள். 07.07.11 மொழியிலுள்ள நுட்பமானக் கூறுகள், எழுதும் விதிகள் மற்றும் புதிய சொற்களைப் பயன்படுத்துதல். எ.கா. ஒரு கவிதையில் வந்துள்ள சிறப்பு சொற்கள், சொல்லமைப்பு, கவிதைகளுக்கு அழகு சேர்க்கின்றன. அவற்றின் கருத்தியல் படங்களை உருவாக்குதல். 07.07.12 வெவ்வேறு நிகழ்வுகளில் / சூழல்களில் கூறப்பட்டுள்ள பிறரின் எண்ணங்கள், கூற்றுகளை சொந்த பாணியில் எழுதுதல். எ.கா. தங்கள் கிராமத்தின் திண்ணை அரட்டைப் பேச்சுகள் அல்லது தங்களைச் சுற்றியுள்ள வெவ்வேறு பணி செய்பவர்களின் அரட்டைப் பேச்சுகள்.

ஆக்கப்பூர்வமான கட்டுரைகள், பல்வேறு சூழ்நிலைகளில் உரையாடல் போன்றவற்றை ஒழுங்கமைத்தல் மற்றும் அவற்றை தயாரிப்பது தொடர்பான எழுத்து இலக்கியம் மற்றும் அறிக்கை எழுதுவதற்கு வாய்ப்பளித்தல்.

- பள்ளி/ துறை / வகுப்பறையின் இதழ்கள் / சுவரொட்டிகள் உருவாக்க ஊக்கமளித்தல்.
- மொழி செழுமைக்காக குழந்தை இலக்கியங்களுடன் பிற இலக்கியங்களையும் சேகரித்தல் மற்றும் அவற்றை தொகுத்து வழங்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.
- பிரார்த்தனை மற்றும் பிற நிகழ்ச்சிகள் மூலம் நல்ல யோசனை, கதைகள், பல்வேறு பாடப்பொருள்களை எடுத்துரைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்.
- சுற்றுப்புறத்திலுள்ள பேச்சுவழக்குகள் பற்றிய தகவல்களைப் பெறவும் அவை பற்றி கலந்துரையாடவும் வாய்ப்பளித்தல்.
- சுற்றுப்புறத்திலுள்ள பல்வேறு இடங்கள், சந்திக்கும் பல்வேறு மக்கள் பற்றிய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்தல்.

07.07.13 தமிழ் மொழியிலுள்ள வெவ்வேறு வகையான இலக்கியங்களை (எ.கா. செய்தித்தாள்கள், செய்திகள், கதைகள், தகவல் தொடர்பு சாதனங்கள், இணையத்தில் ஒளிப்பரப்பாகும் இலக்கியங்கள், புரிந்து படித்தல் மற்றும் அவை பற்றிய தங்கள் விருப்பு வெறுப்பு, சொந்த கருத்துகளை எழுத்துப்பூர்வமாக வெளிப்படுத்துதல்.

07.07.14 பல்வேறு பாடப்பொருள் மற்றும் நோக்கங்களுக்காக எழுதும்போது பயனுள்ள சொற்கள், சொற்றொடர்கள், சொலவடைகள், பழமொழிகள், நிறுத்தற்குறிகள் மற்றும் பிற இலக்கண கூறுகளைப் பயன்படுத்துதல், அவற்றை சேகரித்தல்.

07.07.15 சுவரொட்டிகள் எழுதுவதற்காக பல்வேறு வகையான பொருட்களை சேகரித்தல் மற்றும் தொகுத்தல்.

07.07.16 வீடு மற்றும் சுற்றுப்புறத்தில் அறிவிக்கப்படாத தலைப்புகளில் உரையாடல்களை கேட்டல், அவற்றில் பங்கேற்று தங்கள் நிலைப்பாட்டை எடுத்துரைத்தல்.

07.07.17 நகைச்சுவை, பாடல்கள், கவிதைகள், கதைகள் மற்றும் உரையாடல்களைக் கேட்டு மகிழ்தல், இந்த இலக்கியங்களின் ஒலிப்பதிவுகளை கவனமாகக் கேட்டு, அவற்றின் நயம் பாராட்டல்.

07.07.18 பாடப்பொருளை (பாடல்கள், கவிதைகள், சமூகப்பாடல்கள்) முறையான நடிப்புடன் மற்றும் சரியான குரல் ஏற்ற இறக்கங்களுடன் கூறுதல், அவற்றை பொது காட்சிப்படுத்துதல்.

07.07.19 வீடு, பள்ளி, சமூகம் மற்றும் சுற்றுச்சூழலில் நடைபெறும் பல்வேறு செயல்களில் பங்கேற்றல்.

07.07.20 சரியான குரல் ஏற்ற இறக்கம் மற்றும் நிறுத்தற்குறிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருள் புரியும்படி உரக்க வாசித்தல், குறிப்பிட்ட நேரத்தில், சரியான வேகத்தில், புரிதலுடன் அமைதியாக வாசித்தல்.

07.07.21 கொடுக்கப்பட்ட உரைப்பகுதிகளை கவனமாகப் படித்து சரியான தலைப்பைக் கொடுத்தல்.

07.07.22 பல்வேறு இலக்கிய வகைகளை பொது வாசிப்பு செய்தல்.

07.07.23 எழுதும் விதிமுறைகளின்படி குறிப்பிட்ட நேரத்தில் சரியான வேகத்தில் பார்த்து எழுதுதல் மற்றும் கேட்டு எழுதுதல்.

07.07.24 பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களை நேர்காணல் செய்வதற்காக வினாப்பட்டியல் தயார் செய்தல்.

07.07.25 சொல் அகராதியை குறிப்புகளுக்காக பார்த்தல், சொந்த சொல் அகராதியை உருவாக்க முயற்சி செய்தல்.

07.07.26 சுற்றுச்சூழலிலுள்ள சமூக பிரச்சினைகள் பற்றிய தகவல்களைப் பெறுதல் அவை குறித்த தங்களது நிலைப்பாட்டை எடுத்துரைத்தல்.

07.07.27 இலக்கண கூறுகளின் தகவல்களை பெறுதல் மற்றும் அவற்றை எழுதும்போது பொருத்தமாகப் பயன்படுத்துதல். எ.கா. இணைப்புச் சொற்கள், இரட்டைக் கிளவி, அடுக்குத்தொடர், மயங்கொலி, மரபுச் சொற்கள் வாக்கிய வகைகள் முதலியவை.

பொருளடக்கம்

வரிசை எண்	பாடத்தலைப்பு	கவிஞர்/எழுத்தாளர்	ப. எண்.
	அலகு 1		
1	வாழ்த்து	இளங்கோவடிகள்	1
2	திருக்குறள்	திருவள்ளுவர்	5
3	பூக்களின் நகரம்	ம. இரமணி	11
4	விளையாட்டுப் பாடல்	முனைவர் புஷ்பவனம் குப்புசாமி	20
5	சூரிய ஒளியை கண்ணாடிக்குள் சிறை வைத்த சிறுவன்	ஆயிஷா இரா. நடராசன்	25
	அலகு 2		
1	நாலடியார்		32
2	கனவு மெய்ப்படும்	ரெ. சிவா	34
3	பிங்கி யானை	ஜான் சுந்தர்	39
4	கும்மாயம்... கும்மாயம்...	கோவை சதாசிவம்	43
5	இயற்கைப் பாடல்	வையம்பட்டி முத்துச்சாமி	49
	அலகு 3		
1	பழமொழி நானூறு	முன்றுறையரையனார்	55
2	கல்விப்பயணம்		59
3	செய்திச்சோலை		69
4	தமிழர் திருநாள்		73
5	சாவித்திரிபாய் புலே	அம்பிகா குமரன்	77
6	ஐவகை நிலங்களும் பூக்களும்		80
	அலகு 4		
1	நீதி வெண்பா		84
2	ஒரு நூலகத்துக்குப் புத்தகங்கள்	சுதா மூர்த்தி/சாருகேசி (மொ.பெ)	87
3	ஆல்	பாவேந்தர் பாரதிதாசன்	92
4	பதிப்பக ஆசிரியருக்கு கடிதம்		95
5	நட்பு	தி. பரமேசுவரி	96
6	பாகப்பிரிவினை (நாடகம்)		99

1. வாழ்த்து

- இளங்கோவடிகள்

திங்களைப் போற்றுதும்
திங்களைப்போற்றுதும்
கொங்கு அலர்தார்ச் சென்னி
குளிர் வெண்குடை போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்தலான்.

ஞாயிறு போற்றுதும்
ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல்
பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்.

மாமழை போற்றுதும்
மாமழை போற்றுதும்
நாம நீர் வேலி உலகிற்கு
அவன் அளிபோல்
மேல்நின்று தான் சுரத்தலான்.

பொருள் : திங்கள் - நிலா, கொங்கு - தேன், அலர் - மலர்ந்த பூ, திகிரி - ஆணைச்சக்கரம், தார் - மாலை, மேரு - இமயமலை, அளி - ஈகை, ஞாயிறு - கதிரவன், வலம் வருதல் - சுற்றிவருதல், நாமநீர் - அச்சம் தரும் கடல்

தெளிவுரை

1. வான்நிலா போற்றுவோம்! வான்நிலா போற்றுவோம்! தேன் நிறைந்த மலர்மாலை அணிந்த சோழனின் குளிர்ந்த வெண்கொற்றக்குடை போல வான்நிலா தன் ஒளியால் உலகுக்கு இன்பம் அளிக்கிறது. அதனால், வான்நிலாவைப் போற்றுவோம்.

2. கதிரவன் போற்றுவோம்! கதிரவன் போற்றுவோம்! காவிரி ஆறு பாய்ந்து வளம் செய்யும் நாட்டை ஆட்சி செய்யும் சோழனின் ஆணைச் சக்கரம் போலவே கதிரவன் பொன்மயமான சிகரங்களையுடைய இமய மலையை வலம் வருகிறது. அதனால், கதிரவனைப் போற்றுவோம்.

3. வான்மழை போற்றுவோம்! வான்மழை போற்றுவோம்! அச்சம் தரும் கடல் சூழ்ந்த உலகிற்கு அருளைப் பொழியும் மன்னனைப் போல மழை வானத்திலிருந்து பொழிந்து மக்களைக் காக்கிறது. அதனால், மழையைப் போற்றுவோம்.

நூல்வெளி

சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது. இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இதுவே தமிழின் முதல் காப்பியம். இது முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், நாடகக் காப்பியம், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் போற்றப்படுகிறது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது. இவ்வாழ்த்துப் பகுதி நமக்கு பாடமாகத் தரப்பட்டுள்ளது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. **திங்களின்** மற்றொரு பெயர் ________________.
   அ) ஞாயிறு ஆ) நிலா இ) புதன்

2. **வெண்குடை** என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) வெம்மை + குடை ஆ) வெண்மை + குடை இ) வெண் + குடை

3. **பொன் + கோட்டு** என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.
   அ) பொன்கோட்டு ஆ) பொண்கோட்டு இ) பொற்கோட்டு

ஆ) இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் ஒலிக்கும் சொற்களை பாடலிலிருந்து எடுத்து எழுதவும்.

1. ____________________, ______________________
2. ____________________, ______________________

இ) ஒத்த ஓசையுடன் ஒலிக்கும் சொற்களை பாடலிலிருந்து எடுத்து எழுதவும்.

அளித்தலான் ____________________, ______________________.

ஈ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?
2. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் யாவை?
3. திங்கள், ஞாயிறு, மழை - இவற்றை ஆசிரியர் எவ்வாறு போற்றுகிறார்?

உ) அகராதியைப் பயன்படுத்தி வேறு பெயர்களை தெரிந்து கொள்ளவும்.







செயல்

- ➢ பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழவும்.
- ➢ இயற்கையைப் போற்றுவோம் என்ற தலைப்பில் பேசவும்.
- ➢ பாடலை அடிபிறழாமல் பிழையின்றி எழுதிப் பழகவும்.
- ➢ இப்பாடலை சொல்லக் கேட்டு எழுதவும்.

செயல்திட்டம்

➢ மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து கொள்ள வேண்டும். ஐந்து மணித்துளிகள் தங்களுக்குள் கலந்துரையாடி இயற்கையில் உள்ள ஐந்து சிறப்புகளை வாழ்த்துப் பாடல் போல வாழ்த்திப் பாட வேண்டும்.

எ.கா.

★ கடல் போற்றுதும் கடல் போற்றுதும்

____

____

★ மரம் போற்றுதும் மரம் போற்றுதும்

____

____

௨. திருக்குறள்

- திருவள்ளுவர்

அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

பொருள் : மனத்துக்கண் - மனத்தில், மாசு - குற்றம்.

தெளிவுரை : உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொருள் : அழுக்காறு - பொறாமை, அவா - ஆசை, வெகுளி - சினம், இன்னாச் சொல் - கடுஞ்சொல்.

தெளிவுரை : பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறமாகும்.

விருந்தோம்பல்

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

பொருள் : அகன் - உள்ளம், உறையும் - தங்கும், முகன் - முகம்.

தெளிவுரை : முகமலர்ச்சியோடு, வந்த விருந்தினரை வரவேற்று உபசரிப்பவன் வீட்டில் திருமகள் உள்ளம் மகிழ்ந்து தங்குவாள்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

பொருள் : மோப்ப - முகரும்போது, குழையும் - வாடும், திரிந்து - மாறுபட்டு.

தெளிவுரை : அனிச்ச மலரானது முகர்ந்தால் வாடிவிடும். ஆனால், சிறிது முகம் மாறுபட்டு பார்த்தாலே விருந்தினர் மனம் வாடிவிடுவர்.

அடக்கம் உடைமை

எல்லோர்க்கும் நன்றுஆம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பொருள் : பணிதல் - பணிவாக நடத்தல்,
தகைத்து - பெருமை தரும்.

தெளிவுரை : பிறரிடம் பணிவாக நடப்பது எல்லோருக்கும் நன்மை தரும். செல்வர்கள் பணிவாக வாழ்வது மேலும் ஒரு செல்வமாகி பெருமையைத் தரும்.

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

பொருள் : வடு - தழும்பு, நா - நாக்கு.

தெளிவுரை : தீயினால் சுட்ட புண் தழும்பு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், தீய சொல்லால் ஏற்பட்ட புண் உள்ளத்தில் இருந்து ஆறாது.

ஈகை

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

பொருள் : ஆற்றுவார் - தவ வலிமை உடையவர்.

தெளிவுரை : தவ வலிமை உடையவர்களுக்கு வலிமை தன் பசி பொறுத்தல் ஆகும். அவ்வலிமையும் பிறர் பசியைப் போக்கும் செயலுக்குப் பிற்பட்டதே.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

பொருள் : அற்றார் - பொருளில்லாதார், அழிபசி - கொடும்பசி, வைப்புழி - சேமித்து வைக்கும் இடம்.

தெளிவுரை : பொருளில்லா ஏழையின் கொடும்பசியைப் போக்க வேண்டும். அச்செயலே, தேடிய பொருளை சேமித்து வைக்கும் இடமாகும்.

பெரியாரைத் துணைக் கோடல்

உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

பொருள் : நோய் - துன்பம், உறாஅமை - வராமல், காக்கும் - தடுக்கும்.

தெளிவுரை : நமக்கு வரும் துன்பங்களைப் போக்கி, மீண்டும் துன்பம் வராமல் தடுக்கும் தன்மை உடையவர்களுக்கு வேண்டிய நன்மைகளை செய்து நட்பு பாராட்ட வேண்டும்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.

பொருள் : இடிப்பார் - கடிந்து அறிவுரை கூறுபவர், ஏமரா - துணையில்லாத.

தெளிவுரை : தான் தவறு செய்யும்போது கடிந்து அறிவுரை கூறும் பெரியவர்கள் துணையில்லாத அரசன் தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லாவிட்டாலும் கெட்டுவிடுவான்.

சுற்றம் தழால்

சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

பொருள் : சுற்றத்தார் - உறவினர், ஒழுகல் - நடத்தல்.

தெளிவுரை : ஒருவன் செல்வம் பெற்றதன் பயன் தன் சுற்றத்தாருடன் கலந்து அவர்களை ஆதரித்து வாழ்வதே ஆகும்.

காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

பொருள் : கரவா - மறைக்காமல், ஆக்கம் - செல்வம்.

தெளிவுரை : காக்கை தன் உணவை மறைக்காமல் தன் இனத்தாருடன் கூடி உண்ணும். செல்வமும் அத்தன்மை உடையவர்க்கே உண்டு.

ஊக்கம் உடைமை

வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

பொருள் : வெள்ளத்தனைய - நீர் மட்டத்திற்கு ஏற்ப.

தெளிவுரை : தண்ணீரின் உயரத்துக்கு ஏற்ப நீர்ப்பூக்கள் வளரும். அதுபோலவே, தம் ஊக்கத்தின் அளவிற்கு ஏற்ப மனிதர்கள் உயர்வார்கள்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல், மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

பொருள் : உள்ளுதல் - எண்ணுதல்.

தெளிவுரை : எண்ணுவதை உயர்வாக எண்ணுக. எண்ணியதை அடைய இயலாவிட்டாலும் எண்ணத்தைக் கைவிடக்கூடாது.

நூல்வெளி

திருக்குறள் ஈரடி வெண்பாக்களால் ஆனது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது உலகப் பொதுமறை என போற்றப்படுகிறது.

இது அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளை உடையது. இதில் மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன.

இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இவரது காலம் கி.மு. 31 ஆம் ஆண்டு எனக் கருதப்படுகிறது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) சரி அல்லது தவறு என எழுதவும்.

1. முகனமர்ந்து செய்யாள் உறையும் ☐
2. ஆறாதே நாவினால் சுட்ட வடு ☐
3. உள்ளத்தனைய மலர் நீட்டம் ☐
4. நோக்கக் குழையும் அனிச்சம் ☐

ஆ) எதிர்ச்சொல் எழுதவும்.

அறிவுடையார் X ☐ கேண்மை X ☐

இ) இணைத்து எழுதவும்.

1. எண்ணம்	-	அ) முகர்ந்தவுடன் வாடும்
2. அறம்	-	ஆ) பொறாமை
3. நன்மை தருவது	-	இ) உயர்வாக இருக்க வேண்டும்
4. அனிச்ச மலர்	-	ஈ) இன்பம்
5. நீக்க வேண்டியது	-	உ) செல்வத்தைச் சேர்க்குமிடம்
6. பசி போக்கல்	-	ஊ) பணிவு
		எ) மனதில் குற்றமில்லாமல் இருத்தல்

ஈ) பாடப்பகுதியில் இடம்பெறாத திருக்குறள் அதிகாரத்தை வட்டமிடவும்.

1) அ. அடக்கம் உடைமை ஆ. ஈகை இ. இடன் அறிதல் ஈ. விருந்தோம்பல்

2) அ. சுற்றம் தழால் ஆ. நடுவு நிலைமை இ. அறன் வலியுறுத்தல் ஈ. ஊக்கம் உடைமை

உ) கீழ்க்காணும் படங்கள் வழியாக நீ அறிய வருவன யாவை?

ஊ) பின்வரும் படங்களுக்கு பொருத்தமான குறட்பாக்களை எழுதவும்.



எ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. உனது குடும்பத்துடன் விருந்துண்டு மகிழ்ந்த அனுபவம் பற்றிய செய்திகளை குறள்வழிக் கருத்துகளோடு ஒப்பிடவும்.
2. முற்காலத்தில் பெருமளவில் அன்னசத்திரங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் என்ன? இன்றைய நவீன யுகத்தில் எத்தகைய தானங்கள் நடைபெறுகின்றன?
3. நீ பெருஞ்செல்வந்தனானால் உனது சுற்றத்தாருடன் எவ்வாறு நடந்து கொள்வாய் என்பது பற்றிய கருத்துகளைக் கூறவும்.
4. நீ எப்பண்பு உடையவரோடு நட்பு கொள்ள விரும்புவாய்? ஏன்?

செயல்

➢ உனது சுற்றுப்புறத்தில் நடைபெறும் மருத்துவமுகாம் குறித்து வகுப்பில் கலந்துரையாடவும்.

➢ இணையத்தின் துணை கொண்டு ஏதேனும் ஒரு குறள்நெறிக் கதையை குழுவாக வகுப்பில் நடித்துக் காட்டவும்.

செயல்திட்டம்

➢ பாடப் பகுதியில் உள்ள குறளுக்கு ஏற்ற ஓவியம் வரைந்து பள்ளியில் ஓர் ஓவியக் கண்காட்சி நடத்தவும்.

➢ குறளின் கருத்து குறித்துக் குழுவில் கலந்துரையாடி ஒரு நாடகமாக நிகழ்த்தவும்.

3. பூக்களின் நகரம்

- ம. இரமணி

குழந்தைகள் உலகம் வண்ணமயமான கற்பனைகளால் ஆனது. அன்றாட வாழ்க்கையில் கூட நாம் ஏதாவது கற்பனை செய்துகொண்டே இருப்போம். ஏதேனும் ஒரு நிகழ்வைச் சொல்லும்போது நம் கற்பனை அதில் இயல்பாகக் கலந்துவிடும். ஆனால், அதற்கு ஒரு கலை வடிவத்தைக் கொடுத்து எழுதுவதற்கு ஒரு கதை அல்லது கவிதை, எவ்வாறு இருக்க வேண்டுமோ அந்த விதிமுறைகளின்படி எழுதமுடியாதோ, இலக்கிய பிழைகள் ஏற்படுமோ என்ற யோசனைகளால் தயங்குவோம். ஆனால், மனதில் சிறிது ஊக்கம் கொண்டு எழுதத்தொடங்கினால் நம்மால் கவிதைகள், கதைகள் எழுத முடியும்.

சென்னையில் 8 வது படிக்கும் 13 வயது, ம. இரமணி என்னும் மாணவி தனது கற்பனையால் எழுதிய கதைகளை எவ்வித மாற்றமும் செய்யாமல் அவள் எழுதியபடியே வண்ணப்படங்களுடன் புத்தகமாக வெளியிட்டுள்ளார்கள். அதிலொன்றுதான் இப்போது நாம் படிக்கப்போகும் 'பூக்களின் நகரம்'. வாசித்து மகிழ்வோம், நாமும் எழுதுவோம்.

ஓர் அழகிய நகரம் இருந்தது. அந்த நகரத்தின் பெயர் '**பூக்களின் நகரம்.**' அதில் அழகான பூக்கள் இருந்தன. அந்த பூக்களின் ராணி '**சூரிய காந்தி.**' சூரிய காந்தியை எல்லோருக்கும் பிடிக்கும்

ஒருநாள் ராணிக்கு உடம்பு சரியில்லை, குணப்படுத்த ஒரு மூலிகை தேவைப்பட்டது. அதனால் ஊர் மக்களுக்கு தூது அனுப்ப சேவகனை கூப்பிட்டார். உடனே அந்த சேவகன் தூதை ஓலையில் எழுதினார்.

தூதை ஊர் மக்களுக்கு தெரிவித்தார் அந்த சேவகன்.

ஒரு ரகசியம் சொல்ல மறந்துட்டேன். என்ன தெரியுமா? அந்த பூக்களின் நகரத்தில் உள்ள எந்த பூவுக்கும் நிறம் கிடையாது. அதனால் பூக்களுக்கு நிறம் என்றால் என்னவென்று தெரியாது. சரி கதைக்கு போகலாம். '**சம்பங்கிப் பூ**' தைரியமாக, "நான் அந்த மூலிகை நகரத் திற்குச் சென்று மூலிகையைக் கொண்டு வருகிறேன்" என்று சொன்னது. மூலிகை நகரத்தை நோக்கிச் சென்றது.

ஆனால் மூலிகை நகரத்திற்கு செல்லும் வழியை மறந்து பக்கத்தில் இருந்த மனிதன் நகரத்திற்குச் சென்றது. நிறங்களைப் பார்த்ததும் **சம்பங்கிப்பூ** அதிர்ச்சி அடைந்தது. அங்கு இருந்த ஒரு சின்னப் பையனிடம் "இது என்ன? வித்தியாசமாக இருக்கிறதே!" என்று கேட்டது.



"அது செவ்வந்திப்பூ" என்றான் அந்தப் பையன். "நீ எப்படி சொல்லுற அது செவ்வந்திப் பூன்னு" என்று கேட்டது. "ஆமாம் அது செவ்வந்திப்பூ தான். மஞ்சளாகத்தானே இருக்கு"? என்றான்.

சம்பங்கிப்பூ "மஞ்சளா...! அப்படின்னா என்ன?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது. அதற்கு அந்தப் பையன் "மஞ்சள் என்றால் ஒரு நிறம்" என்றான். "நிறம் என்றால் என்ன?" என்று கேட்டது சம்பங்கி. "நிறம் என்பது ஒளியின் விளையாட்டு" என்று அந்தப் பையன் பதில் சொன்னான்.

‘சரி’ என்று குழப்பத்துடன் தலையாட்டியது சம்பங்கிப் பூ. ‘நீ கூட வெள்ளை நிறத்தில் தான் இருக்கிறாய்’ என்று பையன் சொன்னான். பேசிக்கொண்டே இருவரும் பக்கத்தில் இருந்த கோலமாவு கடைக்குச் சென்றனர்.

அங்குள்ள கலர் கோல மாவுகளை பார்த்து சம்பங்கி ஆச்சரியப் பட்டது. அங்குள்ள நிறங்களை காட்டி இது தான் நீலம், ஊதா, பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு, இளநீலம் என்று ஏழு நிறங்களின் பெயர்களை சொன்னான் அந்தப் பையன். அவற்றை வாங்கிக் கொண்டு மகிழ்வுடன் தன் நகரத்திற்குச் சென்றது சம்பங்கி. சம்பங்கியின் வரவை எதிர் நோக்கி பூக்கள் காத்திருந்தன.

சம்பங்கிப்பூவை பார்த்தவுடன் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். சம்பங்கிப்பூ நடந்ததை அனைவரிடமும் சொன்னது. சொல்லி முடித்த பிறகு அனைத்து பூக்களும் நிறங்களை பார்க்க ஆர்வமாக இருந்தனர். ஒவ்வொரு பூவும் அதற்கு பிடித்த நிறங்களை வாங்கிக் கொண்டது.

கனகாம்பரம் ஆரஞ்சு, மல்லிகை மஞ்சள், இப்படி எல்லா பூக்களும் நிறங்களை வாங்கிக் கொண்டன. எல்லா நிறங்களும் தீர்ந்து விட்டன. ராணிக்கு ஒரு நிறமும் இல்லை. சம்பங்கி “ஐயோ! ராணிக்கு நிறமில்லையே” என்று வருத்தப்பட்டது.

உடனே மல்லிகைப் பூக்கள் வந்து "எங்களுக்கு நிறம் தேவையில்லை. ஏனென்றால் எங்களுக்கு வாசனை அதிகம். அதனால், மகாராணிக்கு எங்கள் நிறத்தை கொடுத்து விடுங்கள்" என்று கூறின. அப்பொழுது "மகாராணி வருகிறார்கள்" என்று காவலர்கள் கூறினர். அங்கு வந்த ராணி வண்ணமயமான அனைத்து பூக்களையும் பார்த்து "என்ன ஓர் அழகு" என்று சந்தோசமாக கூறியது. சம்பங்கிப் பூ மஞ்சள் நிறத்தை ராணியிடம் கொடுத்தது. மஞ்சள் நிறத்தை பார்த்த ராணிக்கு சந்தோசம் வந்தது.

அந்த சந்தோசத்திலேயே ராணிக்கு உடல்நிலை குணமாகி விட்டது. அதிலிருந்து தான் பூக்களுக்கு நிறங்கள் கிடைத்தன.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) சரியான பெயர்களை பாடத்திலிருந்து எடுத்து எழுதவும்.

1. பூக்களின் ராணி ________________________.
2. தைரியமான மலர் ________________________.
3. நகரங்களின் பெயர்கள் __________,__________, __________.
4. வித்தியாசமான பொருள் ________________________.
5. ஒளியின் விளையாட்டு ________________________.

ஆ) யார் யாரிடம் கூறியது?

1. "நான் அந்த மூலிகை நகரத்திற்குச் செல்கிறேன்"
2. "மஞ்சள் என்றால் ஒரு நிறம்"
3. "எங்களுக்கு நிறம் தேவையில்லை"
4. "என்ன ஓர் அழகு"

இ) சரி அல்லது தவறு என எழுதவும்.

1. சம்பங்கிப் பூ சென்ற நகரம் மனிதன் நகரம்
2. செவ்வந்திப் பூவின் நிறம் சிவப்பு
3. அனைத்து பூக்களும் நிறங்களைப் பார்க்க ஆர்வமாக இருந்தன
4. மஞ்சள் நிறத்தை பார்த்த ராணிக்கு சந்தோசம் வரவில்லை

ஈ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. ஏழு நிறங்களின் பெயர்களை எழுதுக.
2. மல்லிகைப் பூக்கள் தங்களுக்கு நிறம் தேவையில்லை எனக் கூறியது ஏன்?

வாசிப்போம், வாசிப்பை நேசிப்போம்!

சில மலர்கள் இரவில் மலரும். சில மலர்கள் பகலில் மலரும். இரவில் மலரும் மலர்கள் பெரும்பாலும் வெண்மை நிறம் உடையதாகவும் மணம் மிகுந்தவையாகவும் இருக்கும். அவ்வாறு இருப்பதால் வண்டுகள் மலர்களின் இருப்பிடத்தை எளிதாக கண்டுபிடிக்கின்றன. மகரந்த சேர்க்கை நடைபெற இது உதவுகிறது. கள்ளிப்பூக்கள், பிரம்ம கமலம், பிச்சி, மல்லிகை போன்ற பூக்கள் இரவில் தான் மலரும்.

அறிந்து கொள்வோம்.



பூவின் ஏழு நிலைகள்	
பூக்கும் பருவத்தின் முதல் நிலை	அரும்பு
மொக்கு விடும் நிலை	மொட்டு
முகிழ்க்கும் நிலை	முகை
பூவாகும் நிலை	மலர்
மலர்ந்த இதழ் விரிந்த நிலை	அலர்
வாடும் நிலை	வீ
வதங்கி வீழ்ந்த நிலை	செம்மல்

மொழியோடு விளையாடுவோம்.



மலரின் இதழில் உள்ள எழுத்து முதல் எழுத்தாகவும் மலரின் நடுவிலுள்ள எழுத்து இறுதி எழுத்தாகவும் கொண்டு மலர்களின் பெயர்களை உருவாக்குவோம்.

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________
6. ______________

பூக்களுடன் ஒரு புதிர்.

கதிரவன் சில ரோஜா பூக்கள் வாங்கிக் கொண்டு கோவிலுக்குச் சென்றான். ஒவ்வொரு கோவிலுக்குள்ளும் செல்வதற்கு முன்னால் அங்குள்ள குளத்தில் மூழ்கி எழுந்தான். என்ன ஆச்சரியம்! அவன் கையில் இருந்த பூக்கள் இரு மடங்கானது. ஒவ்வொரு கோவிலிலும் எட்டு பூக்களை சமர்ப்பித்தான். மூன்றாம் கோவிலை விட்டு வெளிவரும் போது அவன் கையில் பூக்கள் ஏதும் இல்லை. கதிரவன் வாங்கிய பூக்கள் எத்தனை?

விளையாடி மகிழ்வோம்

"பூப்பறிக்க வருகிறோம்..." என்ற குழு விளையாட்டை விளையாடி மகிழுங்கள்.

செயல்

➢ பூக்களின் நகரம் கதைக்கு வேறுவிதமான முடிவைக் குழுக்களில் கலந்துரையாடி வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

செயல்திட்டம்

➢ பல்வேறு வகைப் பூக்களின் படங்களை வரைந்து வகுப்பறையில் ஓவியக்காட்சி நடத்துங்கள். படத்திலுள்ள பூவின் நிறம், தோற்றம் மற்றும் பயன்களை எடுத்துக் கூறுங்கள்.

இணையம் எனது நண்பன்

➢ சிறுவர்களுக்கான கதைகளை இணையத்தில் பார்த்து மகிழுங்கள்.

➢ சிறுவர்களுக்கான பாடல்களை இணையத்தில் பார்த்துப் பழகுங்கள் . குழுவாகப் பாடுங்கள்.

மொழியை அறிவோம்.

அடுக்குத் தொடர்



குழந்தைகளே! இவ்விரண்டு தொடர்களையும் கவனியுங்கள். முதலாவது தொடரில் உள்ள **ஓடு** என்ற சொல் ஏவல் பொருளில் வந்துள்ளது.

இரண்டாவது தொடரில் இடம்பெறும் **ஓடு ஓடு** என்ற சொல் நிற்காமல் வேகமாக ஓடு என்ற விரைவுப் பொருளைத் தருகின்றது.

இவ்வாறு ஒருசொல் தனித்து இயங்கும்போது தரும் பொருளுக்கும் அடுக்கி வரும்போது தரும் பொருளுக்கும் இடையே வேறுபாடு உண்டு.

ஒரு சொல் இரண்டு அல்லது அதற்கு மேலும் அடுக்கி வருவது அடுக்குத்தொடர் ஆகும்.

வாக்கியங்களின் பொருளைத் தெளிவுபடுத்தவும் அழகுபடுத்தவும் உதவும் தொடர்களில் அடுக்குத்தொடரும் ஒன்றாகும்.

எ.கா

★ உறுதிகொண்ட நெஞ்சினாய் **வா! வா! வா!**
★ தம்பி, **பாம்பு பாம்பு** எனக் கத்திக் கொண்டே ஓடி வந்தான்.
★ பறவை **மேலே மேலே** பறந்தது.

இரட்டைக்கிளவி



இவ்விரண்டு தொடர்களையும் கவனியுங்கள். இதில் வரும் சலசல, குடுகுடு எனும் சொற்களைப் பிரித்தால் பொருள் தராது.

இவ்வாறு **வினைக்கு அடைமொழியாக அடிச்சொல் இரட்டித்து வந்து பொருள் தருவது இரட்டைக்கிளவி எனப்படும்.** இது இசை பற்றியும் குறிப்பு பற்றியும், பண்பு பற்றியும் இரட்டித்து இணைந்து வந்து பொருள் தரும்.

அடுக்குத்தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடு

அடுக்குத்தொடர்	இரட்டைக்கிளவி
1, ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கி வரும்.	1. ஒருசொல்இரண்டுமுறைமட்டுமே வரும்.
2. சொற்கள் தனித்தனியே நிற்கும்.	2. சொற்கள் ஒன்றுபட்டே நிற்கும்.
3. பிரித்தால் பொருள் தரும்.	3. பிரித்தால் பொருள் தராது.
4. அச்சம், வெகுளி, அவலம், உவகை, விரைவு போன்ற பொருள்களில் வரும்.	4. வினைக்கு அடைமொழியாக குறிப்புப் பொருளில் வரும்.

4. விளையாட்டுப் பாடல்

- முனைவர் புஷ்பவனம் குப்புசாமி

மனிதன் தன் மகிழ்ச்சியினை பலரோடு சேர்ந்து ஆடியும் பாடியும் கொண்டாடுகிறான். தம் வாழ்வில் நடைபெறும் இன்பதுன்பங்களை பாடல்களாகப் பாடுகிறான். இவையே நாட்டுப்புறப் பாடல்கள் என்றழைக்கப்படுகின்றன. இவை பழமைக்குப் பழமையானவை, புதுமைக்கு புதுமையாய் விளங்குபவை. இப்பாடல்கள் இனியவை, எளியவை, எழுதப் படாதவை. வாயில் பிறந்து செவிகளில் நிறைந்து உள்ளத்தில் பதிவு பெறுபவை. அவற்றுள் ஒன்று விளையாட்டுப் பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் மூலம் சுதந்திர மனப்பாங்கும் தோழமை உணர்வும் உருவாகிறது. ஓடுதல், தாவுதல், தாண்டுதல், குதித்தல் முதலான உடல் திறன்களை இப்பாடல்கள் உறுதியாக்குகின்றன.

தித்திரிதிரி பொம்மக்கோ!
தில்லாலங்கடி பொம்மக்கோ!
கள்ளன் வாறான் பார்த்துக்கோ!
கதவடைச்சிப் பூட்டிக்கோ!

கொட்டடி! கொட்டடி! தைலக்கா!
குனிஞ்சி கொட்டடி! தைலக்கா!
பந்தலிலே பாவக்கா!
தொங்குதடி லோலக்கா!

பூ!பூ!பூ! புளியம்பூ!
பொன்னாங்கண்ணி தாழம்பூ!
நாலுதோப்பு இலுப்பப்பூ!
நாப்பத்தாறு வாழப்பூ!

கா!கா!கா! கடப்பங்கா!
காஞ்சிபுரம் நெல்லிக்கா!
உப்பில்லாத புளியங்கா!
ஊறப் போட்ட நார்த்தங்கா!

சோ!சோ!சோ! சோளக் கொத்து!
சுறு சுறுன்னு அடுப்பப் பத்து!
அரைப்படி நெல்லுக்குத்து!
அவசரமா முறுக்குச் சுத்து!

ஆடிமாச அமாவாச!
அம்மா சுட்ட சோளத் தோச!
தின்னத் தின்ன ரொம்ப ஆச!
அப்பாவுக்கு நாலு!
அம்மாவுக்கு மூணு!

வசனம் : அட! நிறுத்துங்கப்பா!
அப்பாவுக்கு அம்மா குறைச்சலா?
அதென்ன- அப்பாவுக்கு நாலு தோச!
அம்மாவுக்கு மூணு தோச!
கதைய மாத்து...
அப்பாவுக்கு நாலு! அம்மாவுக்கும் நாலு!
அண்ணனுக்கு ரெண்டு! தங்கைக்கும் ரெண்டு.

நூல்வெளி

முனைவர் புஷ்பவனம் குப்புசாமி மிகவும் புகழ்பெற்ற நாட்டுப்புறப் பாடகர். இசையில் முனைவர் பட்டம் பெற்றவர். நமது பாடப்பகுதி அவரது 'நாட்டுப்புறப் பாடல்கள்' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. **கள்ளன்** என்பதன் பொருள் தரும் சொல் ____________.

(அ) காவலன் ஆ) திருடன் இ) சேவகன்

2. **தின்ன + தின்ன** என்னும் சொல்லை சேர்த்தெழுதக் கிடைப்பது ____________.

அ) தின்னத்தின்ன ஆ) திண்ணத்திண்ண இ) தின்னதின்ன

3. **நாற்பத்தாறு** எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.

அ) நாற்பத் + தாறு ஆ) நாற்பது + ஆறு இ) நாற்பத்து + ஆறு

4. **லோலாக்கு** என்பதை குறிக்காத சொல் ____________.

அ) கம்மல் ஆ) காதணி இ) பல்லாக்கு

5. **அமாவாசை** என்பதன் எதிர்ச்சொல் ____________.

அ) பௌர்ணமி ஆ) வளர்பிறை இ) தேய்பிறை

ஆ) ஒத்த ஓசையுடைய சொற்களை எழுதவும்.

1. பொம்மக்கோ, ____________, ____________, ____________.

2. தைலக்கா, ____________, ____________, ____________.

3. கொத்து, ____________, ____________, ____________.

இ) பாடலை நிறைவு செய்யவும்.

பூ! பூ! பூ! புளியம் பூ!

....

நாலு தோப்பு

....

நாப்பத்தாறு

....

ஈ) பின்வரும் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுதவும்.

1. அவசரமாக 2. உப்பில்லாத

உ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பூக்கள் மற்றும் காய்கறிகளின் பெயர்களை பட்டியலிடவும்.
2. நீ வசிக்கும் பகுதியில் விளையாடப்படும் விளையாட்டுகளின் பெயர்களை எழுதவும்.

ஊ) கொடுக்கப்பட்டுள்ள அடுக்குத்தொடர் மற்றும் இரட்டைக்கிளவியை எடுத்து எழுதவும்.

	அடுக்குத் தொடர்	இரட்டைக்கிளவி
திரிதிரி, கொட்டடிகொட்டடி, பூபூ, காகா, சோசோ, சுறுசுறு		

எ) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் இருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

(நன்றுநன்று, கருகரு, குலைகுலையாக, திருதிரு, பொலபொல)

1. நாவல் மரத்தின் கனிகள் .... என்று கீழே வீழ்ந்தன.
2. பொற்செல்வி வழி தெரியாமல் .... என விழித்தாள்.
3. மழை வருவதற்கு முன் மேகம் .... என கருத்தது.
4. போட்டியில் வெற்றி பெற்ற மாணவனை .... என வாழ்த்தினர்.
5. தென்னை மரம் .... காய்க்கும்.

மொழியோடு விளையாடுவோம்.

✸ விடுகதை உருவாக்குவோம்

மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து,
ஒரு குழு ஏதேனும் காய்கறி அல்லது பறவை பற்றி விடுகதை எழுதவும்.

- எழுதியதை படித்து காட்டவும்.
- மற்றவர்கள் அதற்குப் பதில் சொல்லவும்.



(எ.கா)
கையில் அணிவது,
கலகல ஓசை தருவது.

பதில் : கண்ணாடி வளையல்

✣ **சொற்றொடர் படிக்கட்டு அமைப்போம்.**

(எ. கா)

திக்கெட்டும் ஒலிக்கட்டும்

ஒலிக்கட்டும் இன்னிசை

இன்னிசைக் குயில்

குயில் பாட்டு

பாட்டு பாடுவோம்

பாடுவோம் ஒன்றிணைந்து.

தேன் சிட்டு

____

____

____

____________.

✣ **வலப்பக்கத்திலிருந்து படித்தாலும் இடப்பக்கத்திலிருந்து படித்தாலும் ஒரேசொல்லாக வரும் சொற்களை எழுதுவோம்.**

(எ.கா) விகடகவி

செயல்திட்டம்

➢ உன் வீட்டில் இருக்கும் பெரியவர்களிடம் கேட்டு அவர்களுக்கு தெரிந்த விளையாட்டுப் பாடல்களைத் தொகுக்கவும். அவற்றை வகுப்பறையில் பாடிக்காட்டவும்.

முளை விட்ட பயறு பேல்

தேவையான பொருட்கள் :

- முளைப்பயறு கலவை
- துருவிய கேரட்
- பொடியாக நறுக்கிய தக்காளி
- சிறிதாக நறுக்கிய பச்சை மிளகாய்
- சிறிதாக நறுக்கிய கொத்துமல்லி தழைகள்
- உப்பு
- எலுமிச்சம் பழம்
- மாதுளை முத்துகள்

தயாரிக்கும் முறை :

ஓர் அகலமான பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் முளை விட்டபயறு, துருவியகேரட், வெள்ளரித்துண்டுகள், நறுக்கியதக்காளி, பச்சைமிளகாய், கொத்துமல்லி தழையை போடுங்கள். தேவையான அளவு உப்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள். கரண்டியால் நன்றாகக் கிளறுங்கள். எலுமிச்சை சாற்றைப் பிழியுங்கள். மாதுளை முத்துகளைத் தூவுங்கள். மறுபடி ஒருமுறை லேசாகக் கலக்குங்கள்.

சுவையான, சத்தான முளை விட்ட பயறு பேல் தயார்.

எல்லோரும் பங்கிட்டு சாப்பிடுவோம். மகிழ்வோம். இவ்வாறே வீட்டிலும் தயார் செய்து அனைவருக்கும் கொடுத்து “சபாஷ்” என்று பாராட்டை பெறுவோம்.

5. சூரிய ஒளியை கண்ணாடிக்குள் சிறை வைத்த சிறுவன்

- ஆயிஷா இரா. நடராசன்

- பூதக்கண்ணாடி/லென்ஸ் மூலம் சூரிய ஒளியை பஞ்சின்மேல் குவியச் செய்தால் என்ன நடக்கும் என்பதை எப்பொழுதேனும் நீ செய்து பார்த்திருக்கிறாயா?
- பள்ளியில் நடந்த அறிவியல் கண்காட்சி பற்றிய உங்கள் நினைவுகளைக் கூறுங்கள்.

அவனுக்கு வெங்கட்ராம் என்று பெயர் வைத்தார்கள். ஆனால், எல்லோரும் இராமன் என்றே அழைத்தார்கள். இராமன் பிறந்தது திருச்சியில் இருக்கும் திருவானைக்காவல். அப்பாவின் பெயர் சந்திரசேகர். அவர் கல்லூரி ஒன்றில் பேராசிரியர். அம்மா, சப்தரிஷி பார்வதி. இராமனையும் சேர்த்து வீட்டில் ஐந்து குழந்தைகள். அதில் இராமன் இரண்டாவது பிள்ளை.

இராமனுக்கு மூன்று வயதாக இருக்கும்போது அம்மாவோடு அவர்கள் விசாகப்பட்டினத்துக்கு மாறினார்கள். மற்ற பிள்ளைகள் போல் இல்லாமல் இராமன் எப்போதும் அம்மாவோடு ஒட்டிக் கொண்டு ஏகப்பட்ட கேள்விகள் கேட்டு நச்சரிப்பான்.

ஒளி மற்றும் ஒலி ஆகியன பற்றியே திரும்பத் திரும்ப அவனது கவனம் சுழன்றது. விசாகப்பட்டினத்தில் ஒன்றாம் வகுப்புப் படிக்கும்போது என்ன செய்தான் தெரியுமா? நல்லெண்ணெய், கடலை எண்ணெய், மண்ணெண்ணெய் என விதவிதமான எண்ணெய்களை வாங்கி வந்து அவற்றில் ஏற்றும் விளக்கின் சுடரில் வித்தியாசம் இருக்குமா என்று ஆராய்ச்சி செய்தான். அம்மா ஆடிப்போனார். “டேய் நெருப்புடா” என்று பதறினார். அதற்கு அவன் கவலைப்பட்டால்தானே!

அடிக்கடி முகம் பார்க்கும் கண்ணாடி காணாமல் போய்விடும். எங்கே எனத் தேடினால், தோட்டத்தில் அல்லது மொட்டை மாடியில் இருக்கும். சூரிய ஒளியைக் கண்ணாடியில் எதிரொளிக்க வைத்துப் பலவகை அறிவியல் விளையாட்டுகளை இராமன் விளையாடிக் கொண்டு இருப்பதால் எப்போதும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

ஒரு நாள் சாதாரணக் கண்ணாடி மற்றும் இரசம் பூசப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடி ஆகிய இரண்டையும் அடுத்தடுத்து வைத்து ஒளி எதிரொளிப்பு, ஒளி ஊடுருவல் இரண்டையும் ஒப்பிட்டு விளையாடினான். அப்போது முகம் பார்க்கும் கண்ணாடியை உடைத்து விட்டான். அம்மா கடுமையாகத் திட்டினார்.



'இனி எந்தப் பொருளையும் தொடக் கூடாது' என்று வீட்டில் உத்தரவு போட்டார்கள். ஆனால், சும்மா விடுவானா இராமன்? அன்று மாலையே மொட்டை மாடியில் அதே போல் அவனைச் சுற்றிலும் கூட்டம். மாலை நேரச் சூரிய ஒளியில் கை, கால்களை அசைத்து விதவிதமான நிழல்களைத் தோற்றுவித்தான். அடுத்து, ஒளி பற்றிய ஆராய்ச்சி அங்கே நடந்து கொண்டு இருந்தது. 'மதியம் நிழல்' என்பான் இராமன். உடனே எல்லோரும் 'குட்டை' என்பார்கள். யாராவது மாற்றிச் சொன்னால் அவுட். 'காலை நிழல்' என்றால் 'மேற்கு'. 'மாலை' நிழல் என்றால் 'கிழக்கு' என நிழல் விழும் திசையைச் சொல்ல வேண்டும். இப்படி விளையாட்டும் அறிவியலுமாக மிளிர்ந்தான் இராமன்.

அவனது அறிவுப் பசிக்குத் தீனி போடுவது யானைக்குத் தீனி போடுவதை விடவும் கஷ்டமாக இருந்தது. அப்பா சென்னை பிரசிடென்சி கல்லூரியில் பேராசிரியர் ஆனார். மிக வேகமாக பள்ளிப் படிப்பைப் பத்தே வயதில் முடித்தான் இராமன். இதற்கே அசந்து விட்டால் எப்படி?

11 வயதில் கல்லூரி சென்ற இராமன் 13 வயதில் இயற்பியலில் பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவனாகத் தேறி தங்கப் பதக்கம் பெற்றான். அவனோடு படித்த (21வயது தாண்டிய) அண்ணன்கள் எல்லாம் உறைந்து போனார்கள்.

எதிர்காலத்தில் சர்.சி.வி இராமனாக, இந்தியாவுக்கான முதல் அறிவியல் நோபல் பரிசைத் தட்டி வருவதற்கான அனைத்து அம்சங்களோடும் விளங்கினான் இராமன்.

ஆதாரம் : Journey into the light (Life and Science of C.V. Raman) G. Venkataraman

நூல்வெளி

ஆயிஷா இரா. நடராசன் பால சாகித்ய அகாதமி விருது பெற்றவர். தமிழகத்தின் முன்னணிக் கல்வியாளர்களுள் ஒருவர். கல்வி, அறிவியல் சார்ந்த ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். நமது பாடப்பகுதி 'உலகை உலுக்கிய 40 சிறுவர்கள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) இணைத்து எழுதவும்.

1. மதிய நிழல்	-	கிழக்கு
2. காலை நிழல்	-	விதவிதமான நிழல்கள் உருவாக்குதல்
3. மாலை நிழல்	-	மேற்கு
4. மாலைநேர சூரிய ஒளி	-	நெட்டை
	-	குட்டை

ஆ) சரி அல்லது தவறு என எழுதவும்.

1. அம்மாவுடன் விசாகப்பட்டினத்துக்கு மாறியபோது இராமனுக்கு வயது மூன்று.
2. சிறுவயதில் இராமன் அப்பாவிடம் ஏகப்பட்ட கேள்விகள் கேட்பான்.
3. எப்போதும் இராமனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.
4. இராமன் வீட்டில் அடிக்கடி முகம் பார்க்கும் கண்ணாடி உடைந்து விடும்.
5. பத்து வயதில் இராமன் கல்லூரி சென்றான்.

இ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. இராமன் பிறந்த ஊர் ____________________ ஆகும்.
   அ) திருவானைக்காவல் ஆ) திருவானைக்கால் இ) திருயானைக்காவல்

2. இராமன் தொடக்கக் கல்வி பயின்ற இடம் ____________________.
   அ) திருச்சி ஆ) விசாகப்பட்டினம் இ) சென்னை

3. இராமன்__________ ஆம் வயதில் இயற்பியலில் பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவராகத் திகழ்ந்தார்.
   அ) 21 ஆ) 12 இ) 13

4. கண்ணாடிக்கு இரசம் பூசப் பயன்படுவது ____________________.
   அ) அலுமினியம் ஆ) பாதரசம் இ) ஈயம்

ஈ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. இராமனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்க காரணம் யாது?
2. அம்மா இராமனுக்குப் போட்ட உத்தரவு யாது?
3. சாதாரணக் கண்ணாடியை முகம்பார்க்கும் கண்ணாடியிலிருந்து வேறுபடுத்தவும்.
4. அம்மாவின் உத்தரவிற்கு இராமன் கட்டுப்பட்டு இருந்திருப்பானா? உனது சொந்த கருத்தை எழுதவும்.

உ) பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

எப்போதும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும். ஒரு நாள் சாதாரணக் கண்ணாடி மற்றும் இரசம் பூசப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடி ஆகிய இரண்டையும் அடுத்தடுத்து வைத்து ஒளி எதிரொளிப்பு, ஒளி ஊடுருவல் இரண்டையும் ஒப்பிட்டு விளையாடினான். அப்போது முகம்பார்க்கும் கண்ணாடியை உடைத்துவிட்டான். அம்மா கடுமையாக திட்டினார். 'இனி எந்தப் பொருளையும் தொடக் கூடாது' என்று வீட்டில் உத்தரவு போட்டார்கள். ஆனால், சும்மா விடுவானா இராமன்?

1. எதிர்ச்சொல் எழுதவும்.

(i) அசாதாரணம் X ______

(ii) பாராட்டினார் X ______

2. சாதாரணக் கண்ணாடியில் ______________ ஊடுருவும்.

3. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதவும்.

இனி எந்தப் பொருளையும் தொடக் கூடாது என்று வீட்டில் உத்தரவு போட்டார்கள் ஆனால் சும்மா விடுவானா இராமன்

4. குழுவில் பொருந்தாததை வட்டமிடவும்.

இராமன் விளையாட பயன்படுத்தியவை.

அ) மூக்குக் கண்ணாடி ஆ) முகம்பார்க்கும் கண்ணாடி

இ) சாதாரணக் கண்ணாடி

5. இதுபோன்று உனது சிறுவயது நண்பர்களுடன் ஏற்பட்ட ஏதேனும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி எழுதவும்.

ஊ) வலைப்படத்தை நிறைவு செய்யவும்.



செயல்

➢ கடலும் வானும் நீல நிறத்தில் காட்சி அளிப்பதற்கான காரணங்களைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடவும்.

செயல்திட்டம்

➢ வானவில் குறித்த தகவல்களை இணையத்திலிருந்து சேகரித்து அட்டவணையை நிறைவு செய்யவும்.

வானவில் தோன்றும் வேளை	தோன்றுவதற்கான காரணம்	தோன்றும் திசை (சூரியனைப் பொருத்து)	காணப்படும் நிறங்கள்	வடிவம்	இரட்டை வானவில் ஏற்படுவது உண்டா?

இணையம் எனது நண்பன்

➢ நோபல் பரிசுபெற்ற இந்தியர்களின் பெயர், துறை, ஆற்றிய பங்களிப்பு மற்றும் பரிசு வழங்கப்பட்ட வருடம் போன்ற தகவல்களை இணையத்தின் உதவியுடன் சேகரிக்கவும்.

வரிசை எண்	பெயர்	துறை	பங்களிப்பு	வருடம்

மொழியை அறிவோம்.

மரபுச் சொற்கள்

என் பெயர் இராமு. நான் என் குடும்பத்துடன் பொங்கல் விழா கொண்டாட கிராமத்திலுள்ள தாத்தா வீட்டிற்கு சென்றேன். தாத்தா வீடு **மாவிலை** தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்களைக் கண்டவுடன் **நாய் லொள்லொள்** எனக் குரைத்தபடி வாலாட்டியது. நாயின் குரலைக் கேட்டு **கோழி கொக்கரித்து**க் கொண்டே தன் குஞ்சுகளுடன் கூட்டை நோக்கி ஓடியது. தாத்தாவும் பாட்டியும் எங்களை அன்புடன் அழைத்துச் சென்று **வாழை இலையில்** உணவு பரிமாறினர்.

உணவு உண்டபின் நாங்கள் அனைவரும் சிறிது நேரம் ஓய்வெடுத்தோம். பின்னர் வீட்டின் பின்புறம் சென்றேன். அங்கே **மாட்டுத் தொழுவத்தில்** உள்ள **பசுங்கன்று** துள்ளிக் குதிப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். அக்கா தோட்டத்திலுள்ள **பூக்களைப் பறித்து மாலையாக**த் தொடுத்தார். பின்னர் மாலை நேரத்தில் அனைவரும் பாட்டி தந்த **முறுக்கைத் தின்று தேநீர் அருந்தி**னோம். இரவும் வந்தது. உணவுக்குப் பின் நான் **பால் பருகினேன்**. கிராமத்தின் அழகில் மயங்கியபடி உறங்கச் சென்றேன்.

மாணவர்களே! கொடுக்கப்பட்டுள்ள வண்ணமிட்ட சொற்களைக் கவனியுங்கள். இவை அனைத்தும் நம் முன்னோர்களால் வழிவழியாக சொல்லப்பட்டு வந்த மரபுச் சொற்கள்.

நம் முன்னோர்கள் **எப்பொருளை எச்சொல்லால் குறித்தார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பதே மரபு ஆகும்.** இவ்வகுப்பில் விலங்குகள் பறவைகளின் ஒலி மரபுகள், இளமைப் பெயர், இருப்பிடம், வினை மரபுச் சொற்கள் மற்றும் தாவரங்களின் உறுப்புப்பெயர் மரபுச்சொற்கள் ஆகியவற்றை நாம் காண்போம்.

விலங்குகளின் ஒலிமரபு	பறவைகளின் ஒலிமரபு	இளமைப் பெயர்கள்
• குதிரை கனைக்கும்	• ஆந்தை அலறும்	• புலிப் பரழ்
• குரங்கு அலம்பும்	• காகம் கரையும்	• சிங்கக் குருளை
• புலி உறுமும்	• புறா குனுகும்	• மான் கன்று
• நரி ஊளையிடும்	• சேவல் கூவும்	• கீரிப்பிள்ளை
• சிங்கம் முழங்கும்	• வானம்பாடி பாடும்	• எலிக்குஞ்சு
• எலி கீச்சிடும்	• மயில் அகவும்	• பாம்புக்குட்டி

வினை மரபுச்சொற்கள்	விலங்குகளின் வாழிடங்கள்	தாவரங்களின் உறுப்புப் பெயர் மரபுச்சொற்கள்
• சோறு உண்டான்	• யானைக்கூடம்	• வேப்பந்தழை
• கூடை முடைந்தார்	• குதிரைக் கொட்டில்	• கம்பந்தட்டை
• மாத்திரை விழுங்கினான்	• சிலந்தி வலை	• தென்னை ஓலை
• பூப்பறித்தாள்	• மாட்டுத் தொழுவம்	• நெல் தாள்
• கூரை வேய்ந்தார்	• பாம்புப்புற்று	• முருங்கை பிஞ்சு
• அம்பு எய்தார்	• நண்டு வளை	• தாழை மடல்

அலகு 2

1. நாலடியார்

1. அறிவது அறிந்தடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகுவப்பச் செய்து பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

பொருள் : உவப்பு - மகிழ்வு,
எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.

தெளிவுரை : இவ்வுலகில் அறிய வேண்டிய நன்மை தீமைகளை அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொண்டோம் என்னும் செருக்கு இல்லாமல் அடக்கத்துடன் வாழ வேண்டும். அஞ்ச வேண்டிய பழிபாவங்களுக்கு அஞ்சி, செய்வதை உலகம் மகிழுமாறு செய்ய வேண்டும். அறநெறியில் வந்த பொருளால் மகிழ்ந்து வாழும் இயல்புடையவர் எக்காலத்திலும் துன்பம் அடைவது இல்லை.

2. ஆவே றுருவின் வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின் அல்லவாம் - பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

பொருள் : ஆ - பசு, உரு - உருவம்,
அறநெறி - நல்ல நெறி, ஈங்கு - இவ்வுலகில்

தெளிவுரை : பசுக்கள் பல்வேறு நிறத்தனவாயினும் அவை தரும் பால் வெவ்வேறு நிறமுடையதன்று. ஒரே நிறமுடையதுதான். பாலைப்போல அறப்பயனும் ஒரே தன்மையுடையதாகும். அவ்வறத்தை ஆற்றும் முறைகள் பசுக்களின் நிறங்களைப் போலவே பலவாகும்.

3. இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

பொருள் : இம்மை - இவ்வுலகம்,
தாமுளரா - தாம் உயிரோடு இருக்கும் வரை, மம்மர் - அறியாமை.

தெளிவுரை : கல்வி, இவ்வுலக இன்பத்தைத் தரும். பிறருக்கு தருவதால் குறையாது, கற்றார் புகழை எங்கும் பரவச் செய்யும். உயிரோடு இருக்கும் வரை அழியாது. ஆதலால் எந்த உலகத்திலும் கல்வியைப் போல அறியாமையைப் போக்கும் மருந்தை நாம் கண்டதில்லை.

நூல்வெளி

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது சிறந்த நீதிநூல். இதனை நாலடி எனவும் நாலடி நானூறு எனவும் அழைப்பர். இது நான்கு அடிகளைக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையான பெருமை உடையதாகும். இதை **நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி** என்ற பழமொழியால் உணரலாம். இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள் சமண முனிவர்களால் பாடப்பட்டவை. நாலடியாரைத் தொகுத்தவர் பதுமனார் என்னும் புலவர் ஆவார்.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. **மம்மர்** என்பதன் பொருள் ____________.
   அ) அறியாமை ஆ) கல்லாமை இ) இயலாமை
2. **அறிந்தடங்கி** என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) அறிந்த + டங்கி ஆ) அறிந்து + அடங்கி இ) அறிந்து + தடங்கி
3. **அறம் + நெறி** என்பதை சேர்த்தெழுதக் கிடைப்பது ____________.
   அ) அறம்நெறி ஆ) அறநெறி இ) அறனெறி
4. **எஞ்ஞான்றும்** என்னும் பொருளை குறிக்காத சொல் ____________.
   அ) எப்பொழுதும் ஆ) என்றென்றும் இ) அப்பொழுதும்
5. உருவு ______________ ஈங்கு.
   அ) பலகொளல் ஆ) தன்கொளல் இ) பிறகொளல்

ஆ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. எவ்வியல்புடையவருக்கு எக்காலத்திலும் துன்பம் இல்லை?
2. அறியாமையை போக்கும் மருந்து எது?
3. 'ஆபோல் உருவு பலகொளல் ஈங்கு' என்னும் நாலடியார் வரி உணர்த்தும் செய்தி யாது?
4. கல்வியின் சிறப்புகளாக நாலடியார் கூறுவது யாது?

தெரிந்துகொள்வோம்.

புலவர் பெயர்	நூலின் பெயர்
1. திருவள்ளுவர்	திருக்குறள்
2. பூதஞ்சேந்தனார்	இனியவை நாற்பது
3. சீத்தலைச் சாத்தனார்	மணிமேகலை
4. கண்ணதாசன்	இயேசு காவியம்
5. விளம்பிநாகனார்	நான்மணிக்கடிகை
6. இளங்கோவடிகள்	சிலப்பதிகாரம்

உ. கனவு மெய்ப்படும்

– ரெ. சிவா

- எதிர்காலத்தில் நீ என்னவாக வரவேண்டும் என விரும்புகிறாய்?
- உன் கனவை நனவாகச் செய்யும் முயற்சிகள் மற்றும் பயிற்சிகள் யாவை?
- டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் இளைஞர்களுக்குக் கூறிய பொன் மொழிகள் யாவை?

அன்புள்ள தங்கைகளே! தம்பிகளே! வணக்கம். உங்களுக்கு என்னைப் பற்றிச் சொல்வதில் மிகவும் மகிழ்கிறேன்.

என் பெயர் கே.ஜெயலட்சுமி. தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆதனக்கோட்டை என்ற கிராமத்தில் வசிக்கிறேன்.

கல்வியே செல்வம்

கல்வியால் மட்டுமே முன்னேற்றம் அடைய முடியும் என்பதால் படிப்பில் எனக்கு ஆர்வம் அதிகமானது. பள்ளியில் ஆசிரியர்களின் வழி காட்டுதலால் படிப்பு, விளையாட்டு, இலக்கியம் என அனைத்திலும் சிறந்து விளங்கினேன். பல்வேறு போட்டிகளிலும் பங்குபெற்று பரிசுகளும் பெற்றுள்ளேன்.



அமெரிக்கா அழைக்கிறது

புத்தகங்களை வாசிப்பது எனக்கு மிகவும் பிடித்தமானது. வானியல் சார்ந்த தகவல்களைத் தேடித்தேடி வாசிப்பேன். பதினொன்றாம் வகுப்பு படித்தபோது எங்கள் பள்ளியில் கீழே கிடந்த செய்தித்தாளில் ராக்கெட் படம் இருந்தது அதைப் பார்த்ததும் ஆர்வமுடன் எடுத்து வாசித்தேன். அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவுக்கு, ஒரு சிறுமி சென்ற செய்தி அதில் இருந்தது. செல்பேசி மூலம் இணையத்தில் தேடி மாணவர்களை நாசா அழைத்துச் செல்லும் நிறுவனம் பற்றி அறிந்து கொண்டேன். அவர்கள் நடத்திய தேர்வில் தேர்ச்சி பெற்றேன். எனினும் அமெரிக்கா சென்று வரும் செலவுகளில் பாதியை நானே ஏற்க வேண்டும் என்று அந்நிறுவனம் கூறியது.

இலட்சக்கணக்கான ரூபாய்கள் என்பது எனக்கு எட்டாக்கனி என்றாலும் நான் அதற்கான முயற்சியைக் கைவிடவில்லை. அரசுப்பள்ளி மாணவிக்கு நாசா செல்ல உதவி தேவை என்ற செய்தி ஊடகங்கள் வழியே பரவியது. பலரும் உதவினார்கள். தேவையான பணம் கிடைத்துவிட்டது. ஆனால் கொரோனா கிருமி உலகெங்கும் பரவிய காரணத்தால் என்னால் அமெரிக்கா செல்ல இயலவில்லை. தொற்றுப் பரவல் நீங்கிய பிறகு அங்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும்.

ஊருக்கு நல்லது செய்வேன்

நாசா செல்லத் தேவையான பணத்தை நாங்களே தருகிறோம் என்று கிராமாலயா என்ற தொண்டு நிறுவனத்தினர் கூறினார்கள். எனக்குத் தேவையான பணம் கிடைத்துவிட்டது என்று அவர்களிடம் கூறினேன். வேறு ஏதாவது தேவை என்றால் கேளுங்கள் என்றார்கள்.

எங்கள் கிராமத்து வீடுகளில் கழிப்பறை வசதி இல்லை. பெண்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். பாதுகாப்பற்ற சூழலில் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, கழிப்பறை கட்டித்தர இயலுமா? என்று கேட்டேன். அவர்களோ ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியாகக் கழிப்பறை கட்டித் தருகிறோம் என்றார்கள். எங்கள் கிராமத்திலுள்ள 126 வீடுகளுக்கும் கழிப்பறை கிடைத்துவிட்டது. இதனால் தமிழ்நாடு முழுவதும் என்னைப் பலரும் பாராட்டுகிறார்கள். எங்கள் ஊர் மக்களுக்கு என்னால் உதவ முடிந்தது என்பதே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது

விண்வெளிக்குப் பெரிய செயற்கைக் கோள்களை அனுப்ப பல கோடி ரூபாய்கள் செலவாகும். விலை குறைந்த சிறிய செயற்கைக் கோள்கள் மூலம் பல ஆய்வுகளைச் செய்ய முடியும் செலவும் மிகக் குறைவு. மீண்டும் மீண்டும் ஆய்வுக்குப் பயன்படுத்த முடியும். எனவே, இப்போது சிறிய செயற்கைக்கோள்கள் மூலம் பல்வேறு ஆய்வுகளைச் செய்கிறார்கள்.

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் பவுண்டேஷன், ஸ்பேஸ் ஸோன் இந்தியா, மார்ட்டின் குரூப் ஆகிய நிறுவனங்கள் இணைந்து சிறிய ரக செயற்கைக்கோள் உருவாக்கும் பயிற்சி ஒன்றை ஏற்பாடு செய்தனர். நம் நாடு முழுவதும் இருந்து விண்ணப்பித்த மாணவர்களை நேர்காணல் செய்து ஆயிரம் பேரைத் தேர்வுசெய்தனர். நானும் தேர்வானேன். செயற்கைக் கோள்களை உருவாக்கும்

பயிற்சி கொடுத்தார்கள். வளி மண்டலத்தில் உள்ள கார்பன்-டை ஆக்ஸைடு மற்றும் கார்பன் மோனாக்ஸைடு ஆகியவற்றை அளவிடும் செயற்கைக் கோளை நான் தயாரித்தேன். பலூனில் எடுத்துச் செல்வதற்கு ஏற்ப எடை குறைந்ததாக இருக்க வேண்டும் என்பதால் வெளிப்பகுதியை கார்பன் ஃபைபரால் உருவாக்கினேன்.

இராமேஸ்வரத்திலிருந்து இரண்டு ராட்சத பலூன்களில் நூறு செயற்கைக் கோள்களும் பறக்க விடப்பட்டன. அந்நிகழ்வால் அரசுப்பள்ளி மாணவர்களாலும் வானியல் சாதனைகளைச் செய்ய முடியும் என்று பெருமிதம் அடைந்தேன்.

கொரோனா பரவலுக்கு முன்பு இருந்ததை விட இப்போது வளி மண்டலத்தில் கார்பன்-டை-ஆக்ஸைடு மற்றும் கார்பன்மோனாக்ஸைடு ஆகியவற்றின் அளவு குறைவாக இருக்கிறது என்ற எனது ஆய்வு முடிவும் முக்கியமானது.

கனவு மெய்ப்பட வேண்டும்

வானியல் படிப்பது என் ஆசை. இந்திய ஆட்சிப்பணிக்கு வந்தால் ஏராளமான சமூகப் பணிகளைச் செய்ய முடியும் என்பது என் கனவு. அதனால் இப்போது கல்லூரியில் இளங்கலை வரலாறு படிக்கிறேன். நிச்சயமாக என் கனவு நனவாகும்.

உங்களோடு பேசியதில் மிகவும் மகிழ்கிறேன். நன்றி, வணக்கம்.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) பொருள் அறிவோம்.

வானியல் - வான் பற்றிய அறிவியல், ஆர்வம் - விருப்பம்,

கூலி - ஊதியம், அல்லல் - துன்பம்.

ஆ) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் இருந்து சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

(வாசிப்பது, நேர்காணல், பரிசுகள், உலகெங்கும், நாசா)

1. வெற்றிபெற்றவர்கள் ______________ பெறுவர்.
2. புத்தகங்களை ______________ எனக்குப் பிடிக்கும்.
3. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ______________ ஆகும்.
4. கொரோனா கிருமி ______________ பரவியது
5. வேலைவாய்ப்புகள் ______________ மூலம் கிடைக்கிறது.

இ) எதிர்ச்சொல் எழுதவும்.

இயற்கை X _______ இளங்கலை X _______ ஆசை X _______

வரவு X _______ கூடியது X _______

ஈ) தமிழ் சொற்களோடு பொருத்தமான ஆங்கில சொற்களை இணைக்கவும்.

- Satellite
- Atmosphere
- Astronomy
- Infection
- Mobile

- கைப்பேசி
- துணைக்கோள்
- நோய்த்தொற்று
- வளிமண்டலம்
- வானியல்

உ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. ஆசிரியர்களின் வழிகாட்டலால் ஜெயலட்சுமி சிறந்து விளங்கிய துறைகள் யாவை?
2. ஜெயலட்சுமி அமெரிக்கா செல்ல இயலாமற்போனதன் காரணம் என்ன?
3. ஆதனக்கோட்டை கிராமத்திற்காக ஜெயலட்சுமியின் வேண்டுகோள் யாது?
4. ஜெயலட்சுமியின் ஆசை மற்றும் கனவு குறித்து எழுதுக.
5. உனது எதிர்கால ஆசை மற்றும் கனவு குறித்து எழுதுக.

ஊ) கனவு காண்போம், கருத்துப்படத்தை நிறைவு செய்வோம்.



எ) கொடுக்கப்பட்ட பத்தியை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

கனவு மனிதனுக்கு வாய்த்த நல்ல வரம். நல்ல குறிக்கோளை நோக்கி அவனைகொண்டுசெல்லும்உந்துவிசையேகனவு.அடிமைப்பட்டதேசத்தில் இருந்துகொண்டு ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று மெய்க்கனவு கண்டவர்பாரதி.மெய்யானகனவுஎன்பதுவீடில்லாதவன்தனக்குவீடுகிடைக்க விரும்பி உழைப்பதாகும். உலகத்துக்கும் உயிர்களுக்குமான பரந்த நிலையில் காண்பதே மெய்க்கனவு. மகாத்மா காந்தியைப் பார்த்து ஏன் சட்டை அணியாமல் இருக்கிறீர்கள்? என்று ஏளனமாகக் கேட்டபோது, "இந்த தேசத்தில் இருக்கும் அத்தனை ஏழைகளுக்கும் சட்டை கிடைத்து விட்டால் எனக்கும் சட்டை கிடைத்துவிடும்" என்றார். 'உறக்கத்தில் வருவதன்று கனவு, நம்மை உறங்கவிடாமல் செய்வதுதான் கனவு' என்றார் கனவு நாயகன் அப்துல் கலாம் அவர்கள். மேலும், வருங்கால இந்தியாவை சீரமைக்க இருக்கும் நெஞ்சங்களை நம்பிதான் தேசம் உள்ளது என்றார். இதை சிந்தித்துப் பார்க்கும் தருணம் இது. அவருடைய கனவு மெய்ப்பட வேண்டும்.

1. மெய்யான கனவு என்பது யாது?

2. கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து

   அ. மெய்க்கனவு கண்டவர் ______________________.

   ஆ. கனவு காணக் கூறியவர் ______________________.

3. பின்வரும் சொற்களுக்கான எதிர்சொற்களை மேற்கண்ட பத்தியிலிருந்து எடுத்து எழுதவும்.

   அ. நனவு X ....

   ஆ. குறுகிய X ....

4. மகாத்மா காந்தி சட்டை அணியாததைப் பற்றிய உனது கருத்து என்ன?

5. கொடுக்கப்பட்ட பத்திக்கு சரியான தலைப்பினை எழுதவும்.

3. பிங்கி யானை

- ஜான் சுந்தர்

- உங்களுக்குப் பிடித்த கார்ட்டூன் படம் எது?
- அப்பு யானை கதாபாத்திரம் பற்றி தெரியுமா?
- அப்பு யானைக்கு வேறொரு வண்ணமிட்டால்...
- கதைப் புத்தகம் படிக்கும் போது கதையை உனது கண்ணோட்டத்தில் காண்பது போல் கற்பனை செய்துள்ளாயா?

பள்ளிக்கூடத்துக்கு அப்பாவுடன் போகும் போது கதை சொல்லும்படி கேட்டுக் கொண்டது குழந்தை. ஒரு ஊரில் ஒரு யானை இருந்ததாம் என்றார் அப்பா, குழந்தை கைகளைத் தட்டிச் சிரித்தது.

மோட்டார் சைக்கிளின் பக்கவாட்டில் ஒரு யானை ஓடி வரத் துவங்கியது.

'குட்டி யானையா?'
என ஆர்வமாக கேட்டதும்
வினாடியில் குட்டியாகி
ஓட்டத்தைத் தொடருகிறது யானை.



யானைக் குட்டி என்ன நிறத்திலிருக்கும்?
கருப்பு நிறம் என்று சொன்னதை மறுத்து
'பிங்க் கலர்' என்றது குழந்தை
அப்பாவும் ஒப்புக் கொண்டார்.
இப்போது இளஞ்சிவப்பு நிறத்தில்
அழகாக இருக்கிறது.



அது என்ன சாப்பிடும்?
கரும்பு...
சாக்லேட் பிடிக்காதா?
பெரிய சாக்லெட் துண்டு
வாயில் திணித்துக் கொண்டிருக்கிறது.
பிங்கி பற்கள் சொத்தையாகி விடுமே
ஆமோதித்து சாக்லேட்டை துப்பிவிட்டு
துதிக்கையால் துடைத்துக் கொள்கிறது.



பள்ளிக் கூடத்தின் வாசலில்
இறக்கி விட்டார் அப்பா
அப்பாவுக்கு டாட்டா சொல்லி
வகுப்பறைக்கு போகிறது குழந்தை
அப்போதே பறந்து விட்டார் அப்பா
வகுப்பறையின் வாசலருகே
கால் மடக்கிக் காத்திருக்கிறது பிங்கி
எப்போது வேண்டுமானாலும் வரலாம்
அழைப்பு குழந்தையிடமிருந்து!

நூல்வெளி

ஜான் சுந்தர் கோவையில் ‘இளைய நிலா’ என்னும் மெல்லிசைக் குழுவையும் ‘பாட்டுப் பட்டறை’ என்னும் இசைப் பள்ளியையும் ‘டமருகம்’ கற்றல் மையத்தில் குழந்தைகளுக்கான நுண்கலை பயிற்சிப் பட்டறைகளையும் ஒழுங்கு செய்கிறார். நமது பாடப்பகுதி இவரது ‘பிஸ்கட் நிலாக்கள்’ கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) பொருள் அறிவோம்.

சொத்தை - கெட்டுப்போன, ஆமோதிப்பு - உடன்பாடு.

ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. குழந்தை தன் அப்பாவுடன் சென்ற இடம் ____________.

   அ) பள்ளிக்கூடம் ஆ) கடற்கரை இ) பூங்கா

2. யானை விரும்பி சாப்பிடுவது ____________.

   அ) கீரைகள் ஆ) பிரியாணி இ) கரும்பு

3. சாக்லெட் அதிகம் உண்பதால் ஏற்படுவது ____________.

   அ) மயக்கம் ஆ) பற்சொத்தை இ) வாந்தி

4. கற்பனையில் வந்த யானை காத்திருந்த இடம் ____________.

   அ) வீட்டுவாசல் ஆ) பள்ளியின் வாசல் இ) வகுப்பறை வாசல்

இ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. மோட்டார் சைக்கிளின் பக்கவாட்டில் ஓடிவந்தது எது?
2. குழந்தையின் கற்பனையில் தோன்றிய குட்டி யானையின் நிறம் என்ன?
3. பிங்கியானை சாக்லெட் துண்டை என்ன செய்தது?
4. அதிகமாக சாக்லெட் உண்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து எழுதுக.

ஈ) கட்டங்களில் மறைந்துள்ள விலங்குகளின் பெயர்களைக் கண்டறிந்து எழுதவும்.

சி	ங்	க	ம்	கு	க
று	ஆ	ங்	க	ர	டி
த்	டு	கா	ளை	ங்	ஒ
தை	எ	ரு	மை	கு	பு
ப	ன்	றி	மா	தி	ம்
சு	யா	னை	ன்	ரை	டு
ஒ	ட்	ட	க	ம்	உ

செயல்

- முதன் முதலில் யானையைப் பார்த்த உனது அனுபவத்தை எழுதி வகுப்பறையில் பகிரவும்.
- உங்கள் கற்பனை படம் ஒன்றை வரைந்து விரும்பிய வண்ணமிட்டு வகுப்பறையை அழகுபடுத்தவும்.

மொழியை அறிவோம்.

இணைப்புச் சொற்கள்

- கனமழை பெய்தது. இன்று பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.
  கனமழை பெய்தது. **எனவே,** இன்று பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.
- நெகிழியை பயன்படுத்தாதே. அது சுற்றுச் சூழலை மாசுபடுத்தும்.
  நெகிழியை பயன்படுத்தாதே. **ஏனென்றால்,** அது சுற்றுச்சூழலை மாசுபடுத்தும்.

மேற்கண்ட வாக்கியங்களை கவனித்தீர்களா? **எனவே, ஏனென்றால்** இவை போன்ற சொற்கள் வாக்கியங்களை இணைக்கின்றன. இவ்வாறு இரண்டு **வாக்கியங்களை இணைக்கும் சொற்களே இணைப்புச் சொற்கள்** ஆகும்.

இணைப்புச் சொற்கள்

- மேலும்
- ஆல்
- அதனால்
- ஏனென்றால்
- எனவே
- ஆகையால்
- ஏனெனில்
- அல்லது
- அப்படியானால்
- ஆகவே

இணைப்புச் சொற்கள் வாக்கியத்தில் அமைந்துள்ள தன்மையைக் காண்போம்:

- நேற்று கனமழை பெய்தது. **அதனால்** ஏரி, குளங்கள் நிரம்பின.
- நான் என் மிதிவண்டியை நன்றாகத் துடைத்தேன். **ஆகையால்** அது பளபளப்பாக இருக்கிறது.
- பூக்கள் மலர்ந்த**தால்** நறுமணம் வீசியது.
- நான் இன்று மருத்துவமனைக்குச் சென்றேன். **ஏனெனில்** எனக்கு உடல்நலம் சரியில்லை.
- அறிவு வளர்ச்சிக்கு கணினி தேவை. **ஆகவே,** கணினியை இயக்க கற்றுக் கொள்ள வேண்டும்.
- கோடை காலத்தில் இளநீர் **அல்லது** பழச்சாறு பருகலாம்.
- குழந்தை தவழ்ந்து வந்தது. **மேலும்** நடக்க முயற்சித்தது.

மேற்கண்டவாறு நாம் பேசும் பேச்சில் இயல்பாகவே இணைப்புச் சொற்கள் இடம்பெறுகின்றன. இவற்றை நாம் பொருத்தமான இடத்தில் பயன்படுத்தி பேசவும் எழுதவும் செய்தல் இன்றியமையாததாகும்.

4 கும்மாயம்... கும்மாயம்...

- கோவை சதாசிவம்

மொழி ஒன்றாக இருந்தாலும் வட்டாரத்திற்கு ஏற்ப தனித்தன்மையுடன் பேசப்படுகிறது. தனிச் சிறப்பான சொற்கள், பேசும் தொனி, உணவு, விளையாட்டு ஆகியவற்றின் மூலம் அந்தந்த வட்டார வழக்கை அறிய முடியும். கோவை வட்டாரத்தின் கும்மாயம் பற்றிப் பார்ப்போமா!

உணவு தான் உயிர்! கருவறையில் இருக்கும் குழந்தைக்கு தொப்புள் கொடி ஊடாக உணவு தருகிறாள் தாய். பசிக்கும் பொழுது அம்மாவின் முகம் பார்த்து அழுகிற குழந்தைக்கு குருதியை பாலாக்கி புகட்டுகிறாள் தாய். உணவும் உயிரும் தாயால் வழங்கப்பட்டவை. கும்மாயம்... கும்மாயம்... இந்த சொல்லாடல் எப்போதும் என்னுள் சிலிர்ப்பை ஏற்படுத்துபவை. அமிச்சி, அப்பத்தா, அம்மா, அத்தை, அக்கா எல்லோரையும் தாயாக பாவிக்கச் செய்தவை.

ஒரு வயது குழந்தைக்கு அமுதூட்டுகையில் கும்மாயம் செய்து விளையாட்டு காட்டுவார்கள். **கும்மாயம்** என்பது ஒரு தொன்மையான உணவுவகை. வரகரிசி சோறும் அவரைப் பருப்பும் கலந்து செய்யும் **முல்லைநில உணவு** கும்மாயம். அவித்த பயறுடன் கருப்பட்டியை சேர்த்து கும்மாயம் செய்தது மருத நிலம். பிறந்து நான்கு மாதமான குழந்தை முகம் பார்த்து சிரிக்கும். பேசுவதற்கும் பேசுவதைப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்யும். கண்ணில் படும் காட்சிகளை கவனத்தோடு உள்வாங்கும். ஒலி கேட்கும் திசையை திரும்பிப் பார்க்கும்.

"உங்கு... உங்கு... இது உங்கு குடிக்கிற சங்கு..."

பாலையும் பாடலையும் சேர்த்தே புகட்டுகிறாள் தாய். உணவையும் மொழியையும் சேர்த்து பருகுகிறது குழந்தை!

தவழும் குழந்தை வீடு கடந்து வீதிக்கு வரும். அதட்டினால், அடித்தால் அழும் குழந்தையை அழாமல் இருக்கச் செய்ய அம்மாவிற்குத் தெரியும்!

"தங்கமே தாராவே நீ
தடத்துல வழியிலே போகாதே
தட்டான் கண்டால் புடிச்சுக்குவான்
உன்னை தங்கமுன்னு
தராசுல வச்சு நிறுத்திக்குவான்
பொன்னுன்னு சொல்லி
பொட்டியில வச்சுப் பூட்டிக்குவான்".

பாதுகாப்பு உணர்வும் தன் குழந்தை மீதான பெருமிதமும் ஒரு தாய்க்கு இயல்பானவை! கிண்ணத்தில் பிசைந்த அன்னத்தை வழித்து வாயில் திணிக்க முடியாது. குழந்தைகளுக்கு அன்போடும் பரிவோடும் ஊட்டி விட வேண்டும். **ஊட்டுதல்** என்பது கூட விளையாட்டுதான்.

குழந்தையின்...
கட்டை விரலைப் பிடித்து **'இது சோறு சோறுங்கு தாம்'**
ஆள்காட்டி விரலைப் பிடித்து **'இது கொழம்பு கொழம்புங்குதாம்'**
நடுவிரல் **'ரசம் ரசங்குதாம்'**
மோதிர விரல் **'காயி காயிங்குதாம்'**
சுண்டு விரல் **'மோரு மோருங்குதாம்'**
எல்லாம் ஒண்ணாப் போட்டு
கும்மாயம் கும்மாயம் பண்ணி
(கொங்கு மண்ணில்
கும்மாயம் என்பது
கடையும் மத்து).

குழந்தையின் உள்ளங்கையை விரித்து அதில் அம்மாவின் முழங்கையை மெலிதாய் அழுத்தி கடைதல் போல பாவனை செய்து...

அம்மாவுக் கொரு வாயி,
அண்ணனுக் கொரு வாயி,
நாயிக் கொரு வாயி
நிலவுக் கொரு வாயி.

அம்மா, அண்ணன், நாய், நிலவோடு உண்டசோற்றின் மீதியை...
கழுவிக் கழுவிக் காக்காயிக்கு ஊத்து.

என்று மனிதர்களோடும் விலங்குகளோடும் பறவைகளோடும் பல்லுயிர் வாழ்வு நெறியை சோற்றுடன் பிசைந்து குழந்தைகளுக்கு ஊட்டுகிறாள் தாய்.

உணவு உண்டு முடிந்ததும் குழந்தையின் கையைப் பற்றும் தாய் கை மீது நண்டு போல் விரல்களை நகர்த்தி, நரியைப்போல் விரல்களைப் பதுக்கி...

நண்டூறுது... நரியூறுது...
நண்டூறுது... நரியூறுது...
மாமியார் ஊருக்கு தடம் போகுது,
தடம் போகுது...

என்று சொல்லி உள்ளங்கை தொடங்கி தோள் பட்டை வரை விரல்கள் நீண்டு... '**கிச்சு கிச்சு**' செய்ய சிரித்து மகிழும் குழந்தை, தாலாட்டுக்குக் காத்திராமல் தூங்கும்.

நூல்வெளி

சூழியலாளர் கோவை சதாசிவம் அவர்கள் எழுத்தாளர், கதைசொல்லி, ஆவணப்பட இயக்குநர், சூழியல் செயற்பாட்டாளர், பேச்சாளர் என பன்முக ஆளுமையாளராக உள்ளார். குழந்தைகளுக்கு சூழியலை அறிமுகப்படுத்தும் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். இவரது நூல்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பாடமாக உள்ளன. நமது பாடப்பகுதி **சில்லுக்கோடு** என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) பொருத்தவும்.

1. குருதி	மதி
2. கும்மாயம்	சாதம்
3. அன்னம்	குப்பி
4. நிலா	இரத்தம்
5. புட்டி	உணவு வகை

ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. **தால்** என்ற சொல் குறிக்கும் பொருள் ____________.

   அ) தாளம் ஆ) தாழம் இ) நாக்கு

2. **தாலாட்டு** என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.

   அ) தா + லாட்டு ஆ) தால் + ஆட்டு இ) தாலா + அட்டு

3. **சத்துணவு** என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.

   அ) சத் + துணவு ஆ) சத்து + உணவு இ) சத்து + வுணவு

4. **பாதுகாப்பு + உணர்வு** என்பதை சேர்த்தெழுதக் கிடைப்பது ____________.

   அ) பாதுகாப்புணர்வு ஆ) பாதுகாப்புஉணர்வு இ) பாதுகாப்பு வுணர்வு

இ) எதிர்ச்சொல் இணைகளைத் தேர்ந்தெடுத்து சொற்றொடர்களை உருவாக்கவும்.

எ.கா.

தோன்றினார் X **மறைந்தார்.**

காந்தியடிகள் அக்டோபர் இரண்டாம் நாள் **தோன்றினார்.**

காமராசர் அக்டோபர் இரண்டாம் நாள் **மறைந்தார்.**

1. தோன்றினார் X

2. குட்டை X

3. அண்டை X

4. இயற்கை X

ஈ) ஒத்த ஒலியுடைய சொற்களை வகைப்படுத்தவும்.

(நுங்கு, தூசு, கங்கு, ஆடு, காசு, காடு,)

1. சங்கு, ________________, ________________

2. மாடு, ________________, ________________

3. மாசு, ________________, ________________

உ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. குழந்தைப் பருவத்தில் தாயாக இருந்து கவனித்தவர்கள் யாவர் ?
2. தாயால் வழங்கப்பட்டவை எவை?
3. பிறந்து நான்கு மாதமான குழந்தை என்னென்ன செய்யும்?
4. குழந்தைகளுக்கு உணவு ஊட்டும் முறைகளாக நீ அறிந்தவற்றை எழுதவும்.

ஊ) உறவு ஒன்று, பெயர் பல.

தாய் - அம்மா, ஆத்தா, அன்னை, மாதா

தந்தை - அப்பா, பப்பா, வாப்பா, நைனா, பிதா

தமையன் - அண்ணா, அண்ணே, அண்ணாச்சி, அண்ணாத்தே, அன்னாவி

தமக்கை - அக்காள், அக்கா, தாயி

தாத்தா - அப்பப்பா, அம்மப்பா, அப்பையா, அப்பச்சி, ஐயா

பாட்டி - அப்பம்மா, அம்மம்மா, ஆச்சி, அம்மச்சி, பாட்டி

❖ **விளையாடி மகிழ்வோம்.**

- குத்தடி குத்தடி சைலக்கா....
- மாம்பழமாம் மாம்பழம்....

செயல்

➢ இயற்கையோடும் குடும்ப உறுப்பினர்களோடும் நாட்களை செலவிட்ட அனுபவம் பற்றிய செய்திகளை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

செயல்திட்டம்

➢ சிறு குழந்தைகளுக்கு வழங்கப்படும் வட்டார உணவு வகைகளின் பெயர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டி எழுதி வரவும்.

❖ **பாடத்திற்கு அப்பால்...**

அறிந்து கொள்வோம்

குறிஞ்சிநில உணவு	-	மூங்கிலரிசி, தினை, தேன்
முல்லைநில உணவு	-	வரகரிசி, அவரைப் பருப்பு
மருத நில உணவு	-	பயறுவகை, கருப்பட்டி
நெய்தல் நில உணவு	-	மீன், அரிசி
பாலை நில உணவு	-	புல்லரிசி, உப்புக்கண்டம்

❖ **படிப்போம்; மகிழ்வோம்; மொழிபெயர்ப்போம்.**

असे कसे? असे कसे?
रात्रीचेच चांदणे दिसे!
असे कसे? असे कसे?
मोरालाच सुंदर पिसे
असे कसे? असे कसे?
पाण्यातच झोपती मासे
असे कसे? असे कसे?
आईसारखे कुणी नसे

कवी : राजा मंगळवेढेकर

5. இயற்கைப் பாடல்

- வையம்பட்டி முத்துச்சாமி

இயற்கையோடு வாழப் பழகு மனிதா மனிதா!
இயற்கையை வெல்வது எளிதா எளிதா!
செயற்கை தெரியுதிப்போ பெரிதாய் பெரிதாய்
அந்த செயல்களில் மறைந்திருப்பது துயரம் பெரிதாய்

மரம் செடி கொடிகள் யாவும் இயற்கை தந்தது
மயக்கும் மொழி புள்ளினங்கள் இயற்கை தந்தது
குரங்கு முதல் விலங்கு வகை இயற்கை தந்தது
நெடிய மழைநீர்ச் சுனைகள் இயற்கை தந்தது

மண்ணிலிருந்து கிடைக்காத பொருள்களும் உண்டோ?
மழை நீர் இல்லை என்றால் உலகமும் உண்டோ?
எண்ணிலா பெருமை யாவும் இயற்கை தந்தது
இயற்கையை சிதைப்பதாலே துயரம் மிஞ்சுது

இடி இடிப்பதை உன்னாலே தடுக்க முடியுமா?
எரிமலையை கடல் அலையை அடக்க முடியுமா?
அடிவானில் உதிக்கும் அழகை மறைக்க முடியுமா?
உன் கால் நுனி மண்ணையும் படைக்க முடியுமா?

நதிநீர் நஞ்சானது இன்று யாராலே?
பூமி கெட்டு தரிசானது இன்று யாராலே?
காடு தந்த சீதனங்களை அழித்தது யாரு?
காலநிலை கெட்டு போக காரணம் யாரு?

மாற்றங்கள் தேடுவதே மனிதனின் புத்தி
எதையும் மாற்றும் வலிமை கொண்டது இயற்கையின் சக்தி
விஞ்ஞானம் என்பது ஓர் அறிவியல் விளையாட்டு
வியப்பு எது என்றால் இயற்கையை நீ காட்டு

நூல்வெளி

வையம்பட்டி முத்துச்சாமி, தாமே பாடல்களை எழுதி மெட்டமைத்துப் பாடுபவர். குழந்தைகள், இயற்கை, சமூக விழிப்புணர்வு பற்றி இவர் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார்.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1.) இயற்கை தந்த வரங்கள் சிலவற்றைப் பட்டியலிடவும். அவற்றின் பயன்களைப் பற்றி உரையாடவும்.

1. மழை
2. ____
3. ____
4. ____
5. ____

2) மண்ணிலிருந்து கிடைக்கும் சில பொருள்களைத் தொகுத்து எழுதி, அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடவும்.

1. ____
2. ____
3. ____
4. ____
5. ____

3) எவற்றை எல்லாம் நம்மால் தடுக்க முடியாது? ஏன்?

4) கருத்துப் படத்தை நிறைவு செய்யவும்.

இயற்கைக்கு ஊறு விளைவிக்கும் செயல்கள்

- பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துதல்
- ____
- ____
- ____
- ____
- ____

ஆ) கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

மனிதன் ஆதி காலத்தில் குகைகளிலும் காடுகளிலும் வாழ்ந்தான். இயற்கையில் கிடைத்த கிழங்குகள், கனிகள் இவற்றை உண்டு வாழ்ந்தான். நாளடைவில் இயற்கையை உற்று நோக்கி தாவரங்கள் எப்போது, எப்படி, எவ்வாறு வளர்கின்றன என்பதை உய்த்துணர ஆரம்பித்தான். குறிப்பிட்ட பயிர்கள் வளரும் முறையைக் கவனித்து அவற்றை பயிர் செய்யத் தொடங்கினான். இவ்வாறு, இயற்கையோடு ஒன்றிணைந்து உடல் நலத்தோடு வாழ்ந்து வந்தான்.

1. ஆதிகாலத்தில் மனிதன் எங்கு வாழ்ந்து வந்தான்?
2. இயற்கையோடு இணைந்து வாழ்வதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?
3. பிரித்து எழுதவும்.

   அ) உய்த்துணர = ____________________ + ____________________

   ஆ) ஒன்றிணைந்து = ____________________ + ____________________

4. ஆதி மனிதனின் வாழ்க்கையைத் தற்கால வாழ்க்கையுடன் ஒப்பிட்டு எழுதவும்.

செயல்

- ➢ இயற்கை சீற்றங்களால் ஏற்படும் விளைவுகள் பற்றி உரையாடவும்.
- ➢ பூமி வெப்பமயமாதலால் ஏற்படும் விளைவுகளை இணையத்தின் உதவியுடன் அறிந்து வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.
- ➢ இயற்கை தொடர்புடைய ஒலி நாடாக்களை கேட்டு மகிழவும்.

செயல்திட்டம்

- ➢ நமது சுற்றுப்புறத்தை பாதுகாப்பது எப்படி என்பது பற்றி குழுவில் கலந்துரையாடி, வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளவும்.
- ➢ இயற்கையைக் காப்பது குறித்த விளம்பர வாசகங்களுடன் படங்களை வரைந்து பதாகை தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.

மொழியை அறிவோம்.

மயங்கொலிகள்

மாணவர்களே!



இந்த சொற்களை உச்சரித்துப் பாருங்கள். ஒரேமாதிரியான ஒலி கேட்கிறதல்லவா? ஆனால், இந்த சொற்களிடையே பொருள் வேறுபாடு உண்டு. இவ்வாறு, உச்சரிப்பில் சிறிதளவு மட்டுமே மாறுபாடு உள்ள ஒலிகள் **மயங்கொலிகள்** எனப்படும்.

பொருள் வேறுபாடு அறிவோம்.

- ஏரி - நீர்நிலை; ஏறி - மேலே ஏறுதல்
- அலகு - பறவையின் மூக்கு; அளகு - தயிர்; அழகு - அலங்காரம்
- பணி - வேலை; பனி - குளிர்ச்சி

மயங்கொலிகள் மொத்தம் எட்டு. அவை என்னவென்றால்

ண - ந - ன
ர - ற
ல - ழ - ள

ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு பெயர் உண்டு.

'கண்ணப்பன்' னு எழுதச்சொன்னால் ஒருத்தன் கண்ணப்பண் என்று எழுதியிருந்தான். என்னடப்பானு கேட்டதற்கு ரெண்டு சுழி இருக்கலாம். மூணு சுழி இருக்கக்கூடாதா? என்றான்.

இது எப்படி இருக்கு?

தமிழ் எழுத்துகளில் - ரெண்டு சுழி **ன** என்பதும் தவறு!

மூணு சுழி **ண** என்பதும் தவறு!

ண - இதை டண்ணகரம் என்றும், **ன** - என்பதை றன்னகரம் என்பதுவுமே சரி.

இப்படி ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

ண - டண்ணகரம்	ற - வல்லின றகரம்
ந - தந்நகரம்	ல - லகரம்
ன - றன்னகரம்	ழ - மகர ழகரம்
ர - இடையின ரகரம்	ள - பொது ளகரம்

மயங்கொலி எழுத்துகளின் பிறப்பு

ண - ன - ந எழுத்துகள்



- நாவின் நுனி மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் '**ண**' கரம் பிறக்கிறது.
- நாவின் நுனி மேல் அண்ணத்தின் முன்பகுதியைத் தொடுவதால் '**ன**' கரம் பிறக்கிறது.
- நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் '**ந**' கரம் பிறக்கிறது.

ல - ள - ழ - எழுத்துகள்



- மேல்வாய்ப் பற்களின் அடியை, நாவின் ஓரங்கள் தடித்து தொடுவதால் '**ல**' கரம் பிறக்கிறது.
- நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால் '**ள**' கரம் பிறக்கிறது.
- நாவின் நுனி மேல் அண்ணத்தினை தடவுவதால் '**ழ**' கரம் பிறக்கிறது.

ர- ற எழுத்துகள்



- நாவின் நுனி மேல்அண்ணத்தின் முதல் பகுதியைத் தொட்டு வருவதால் 'ர' கரம் தோன்றுகிறது.
- நாவின் நுனி மேல்அண்ணத்தின் மையப்பகுதியை உரசுவதால் 'ற' கரம் பிறக்கிறது.

★ **படத்தைப் பார்த்து சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.**

1. சுவற்றில் இருப்பது ____________ (பல்லி / பள்ளி)

2. பசு தருவது ___________________ (பாழ் / பால்)

3. சுவரில் அடிப்பது ______________ (ஆணி / ஆனி)

4. நிழல் தருவது ________________ (மறம் / மரம்)

5. கிளியின் ________ வளைந்து இருக்கும் (அலகு / அழகு)

★ **தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளை நீக்கி எழுதவும்.**

1. அம்மா வீட்டு வாசலில் கோளம் போட்டார்.
2. மலர்கள் மலர்ந்து மனம் வீசியது.
3. சூரியன் உதிக்கும் திசை கிளக்கு.
4. தேண், மருத்துவ குணம் கொண்டது.
5. காளை மாடுகள் புள் மேய்கின்றன.

அலகு 3.

1. பழமொழி நானூறு

- முன்றுறையரையனார்

கல்வி

உணற்கினிய இன்னீர் பிறிதுழிஇல் என்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை
முற்றப் பகலும் முனியா (து) இனிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று.

பொருள் : உணற்கு - குடிப்பதற்கு, இன்னீர் - நன்னீர், பிறிதுழிஇல் - வேறு இடங்களில் இல்லை, தேரை - தவளை, கணக்கினை - நூல்களை, முனியாது - வெறுப்பின்றி.

தெளிவுரை : குடிப்பதற்கு இனிய உவர்ப்பில்லா நன்னீர் வேறு இடங்களில் இல்லையென்று நினைத்து கிணற்றினுள்ளே தவளை வாழும். அதுபோல் நாமும் கருதாமல், நூல்களை நாள் முழுதும் வெறுப்பின்றி இனிதாகப் படித்து அறிதலைக் காட்டிலும், அறிஞர்கள் கூறுவதைக் கேட்டலே நன்று.

சான்றோர் இயல்பு

கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றானும் - தோன்றாதாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு.

பொருள் : கழிய - தீயசெயல்கள்,
விடினும் - இருப்பினும்.

தெளிவுரை : சிறியார் குற்றங்கள் பலவற்றை பலநாள் செய்தாலும் அவை என்றும் பெரிதாகத் தெரியாது. ஆனால், உயர்ந்தவர் செய்த குற்றம் சிறிதாயினும் அது குன்றின் மேல் வைத்த விளக்கு போல அனைவருக்கும் தெரியும்.

முயற்சி

தன்தூக்கித் தன்துணையுந் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார் - அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்.

பொருள் :
தூக்கி - ஆராய்ந்து,
மதிவல்லார் - அறிவில் சிறந்தோர்.

தெளிவுரை : இச்செயல்கள் தன்னால் முடியுமா என்று முதலில் ஆராய்ந்து தனக்குத் துணையாவரையும் ஆராய்ந்து பயனையும் ஆராய்ந்து அறிவிற்சிறந்தோர் அவற்றை மேற்கொள்வர். அவ்வாறு ஆராய்தலின்றி, இயலாத காரியங்களுள் ஏதேனும் ஒன்றை மேற்கொண்டு செய்யும் முறை அறியாது ஏதாவது செய்தால், தான் நினைத்ததற்கு மாறாக துன்பமே உண்டாகும்.

நூல்வெளி

பழமொழி நானூறு என்பது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்த்துவதற்கு அந்நாட்டு மொழியுள் வழங்கும் பழமொழிகள் பெரிதும் பயன்படுகின்றன. இந்நூல் 400 வெண்பாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வெண்பாவிலும் ஒரு பழமொழியைக் கொண்டு தமது சிறந்த கருத்துகளை விளக்கியுள்ளார் இந்நூலின் ஆசிரியர் முன்றுறையரையனார்.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) பொருத்தவும்.

அ	ஆ
1. கணக்கினை	அ. தவளை
2. மதிவல்லார்	ஆ. வெறுப்பின்றி
3. தேரை	இ. நூல்களை
4. முனியாது	ஈ. அறிவிற்சிறந்தோர்

ஆ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. ஒரு செயலை செய்ய நினைத்தால் அதை எவ்வாறு மேற்கொள்வாய்? ஏன்?
2. சிறியார் மற்றும் உயர்ந்தார் இடையிலான வேறுபாட்டை அவர்களது செயல் வழியாக ஒப்பிடுக.
3. 'கற்றலின் கேட்டலே நன்று' - என்பதை நீ உனது சொந்த வாழ்வில் எவ்வாறு கடைப்பிடிப்பாய்? விளக்குக.

இ) கீழ்க்கண்ட படங்களுக்குத் தொடர்புடைய பழமொழிகளைக் கேட்டறிந்து எழுதவும்.

மொழியோடு விளையாடுவோம்.

கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி பழமொழிகளை நிறைவு செய்யவும்.

- உழுவதை
- மழைத்துளி
- அம்பலத்தில்
- கடலினும்
- அறுசுவை
- கணக்குப்
- தருமம்
- விட
- சிப்பியிலே
- உழக்கும்
- காக்கும்
- அறையில்
- அகம்
- முகம்
- உழுவதே

1. உழவன் ______________ பார்த்தால் ______________ மிஞ்சாது.
2. ______________ குளிர ______________ மலரும்.
3. ______________ தலை ______________.
4. பொறுமை ______________ பெரிது.
5. அகல ______________ ______________ ஆழ ______________மேல்.
6. ______________ விழுந்த ______________ முத்தாகும்.
7. அகப்பை ______________ அறியுமோ?
8. ______________ ஆடி ______________ ஆடு.

உ. கல்விப் பயணம்

பண்டைய மக்கள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் இலைச்சாறு, பூக்கள் போன்ற இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தி குகைகளிலும் பாறைகளிலும் தாங்கள் கண்ட காட்சிகளை ஓவியமாக வரைய ஆரம்பித்தார்கள். ஓவியக்கலை காலப்போக்கில் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. ஓவியம் வரைதல் என்பது சிலருக்கு பொழுதுபோக்கு. இன்னும் சிலருக்கு அது தொழிலாகவும் உள்ளது. ஓவியக் கலையை கற்பதும் அறிந்திருப்பதும் அதை ரசிக்கத் தெரிந்திருப்பதும் வாழ்க்கைக்கு நிச்சயமாக உதவும்.

(பாடவேளையின்போது தலைமை ஆசிரியர் வகுப்பில் நுழைகிறார்)

மாணவர்கள் : வணக்கம் ஐயா!

தலைமை ஆசிரியர் : வணக்கம் குழந்தைகளே! நான் இன்று உங்களுக்கு ஒரு சந்தோசமான செய்தியை கூறப் போகிறேன்.

மாணவர்கள் : சந்தோசமான செய்தியா? அது என்ன ஐயா?

தலைமை ஆசிரியர் : நாளை ஏழாம் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் உங்களது வகுப்பு ஆசிரியருடன் **ஜஹாங்கீர் ஆர்ட் கேலரி**க்கு செல்லப் போகிறீர்கள். அனைவரும் தயாராக வாருங்கள்.

மாணவர்கள் : சரி ஐயா! மிக்க மகிழ்ச்சி!

(வகுப்பறை கலகலப்பாகிறது. தலைமை ஆசிரியர் சிரித்தபடியே வெளியே செல்கிறார்)

ஜெயா : சார்! பேருந்தில் செல்லும்போது அப்பா ஜஹாங்கீர் ஆர்ட் கேலரியை எனக்கு காட்டியிருக்காங்க.

குமுதா : ஆர்ட் கேலரின்னா என்ன சார்?

ஆசிரியர் : கலைக்கூடம். அங்கே சிறந்த கலைஞர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்படும். கலைப்பொருட்களின் விற்பனையும் நடைபெறும். இப்பொழுதுகூட, ஓர் ஓவியக் கண்காட்சி நடைபெறுகிறது. நாம் அக்கண்காட்சியைக் காண்பதற்காக, நமது தலைமை ஆசிரியர் சிறப்பு அனுமதி பெற்றுள்ளார்.

மாணவர்கள் : மிக்க மகிழ்ச்சி ஐயா!

(மறுநாள் காலை ஏழாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் பள்ளி வளாகத்தில் அமைதியாக குழுமியிருக்கின்றனர்)

ஆசிரியர் : குழந்தைகளே தயாராக இருக்கிறீர்களா? புறப்படுவோமா? பேருந்து தயாராக உள்ளது.

(மாணவர்கள் பேருந்தில் அமர்ந்து பயணம் செய்கிறார்கள்)

சங்கர் : ஜஹாங்கீர் ஆர்ட் கேலரி பற்றி எங்களுக்கு கூற முடியுமா சார்?

ஆசிரியர் : நிச்சயமாகக் கூறுகிறேன். நீங்களும் தெரிந்து கொள்வது அவசியம். இது தென்மும்பையில் சத்ரபதி சிவாஜி மகாராஜ் வஸ்து சங்ரஹாலய் (பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ்) அருங்காட்சியகத்திற்குப் பின்புறம் அமைந்துள்ளது.
இது 1952 ஆம் ஆண்டு சர் கோவாஸ்ஜி ஜஹாங்கீரால் மறைந்த தனது மகனின் நினைவாகக் கட்டப்பட்டது. இதில் ஏழு கண்காட்சி அரங்குகள் உள்ளன. இங்கு புகழ்பெற்ற ஓவியர்கள், சிற்பிகள், கைவினைக் கலைஞர்கள் போன்றவர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

(பேருந்து கலைக்கூடத்தை அடைகிறது. மாணவர்கள் வரிசையாக இறங்கி உள்ளே செல்கிறார்கள்)

ஆசிரியர் : மாணவர்களே கவனியுங்கள்! ஓவியங்களைத் தொடாமல் பார்த்துக் கொண்டே வரிசையில் செல்ல வேண்டும்.

உமா : சார், இதில் ஜுகு பீச்தானே வரைந்திருக்கிறார்கள்?

ஆசிரியர் : ஆமாம்! இது ஆயில் பெயிண்டிங் லேண்ட்ஸ்கேப் (Oil Painting Land scape) வகை ஓவியம்.

சலீம் : லேண்ட்ஸ்கேப் ஓவியம் என்றால் என்ன?

ஆசிரியர் : இயற்கை நிலக்காட்சி என்று சொல்கிறோமே, அதுதான். நிலமும் நிலம் சார்ந்தவற்றையும் உள்ளதை உள்ளபடியே வரைவது லேண்ட்ஸ்கேப் ஓவியம்.

சிவா : சார், இதில் ஒரு பாட்டியை தத்ரூபமாக வரைந்திருக்கிறார்கள். இதில் நிலமே இல்லையே. இது என்ன வகை ஓவியம்?

ஆசிரியர் : இது உருவ ஓவியம் (Portrait).

சிவா : சார், ஓவியத்தில் என்னென்ன வகைகள் உள்ளன?

ஆசிரியர் : நிலக்காட்சி, உருவ ஓவியம், பொருள் ஓவியம், கடற்காட்சி, அருவ ஓவியம் போன்ற பல வகைகள் உள்ளன.

மார்டின் : சார், ஆயில் பெயிண்டிங் என்று சொன்னீர்களே, அது என்ன?

ஆசிரியர் : சொல்கிறேன். நீங்கள் எதன்மூலம் படங்களை வரைந்து வண்ணம் தீட்டுகிறீர்கள்?

ஜெயா : சார், நான் கலர் பென்சில் மூலம் வண்ணம் தீட்டுவேன்.

சலீம் : என்னிடம் வாட்டர் கலர் இருக்கிறது.

சிவா : எனக்கு கிரேயானில் வண்ணம் தீட்டுவது பிடிக்கும்.

ஆசிரியர் : அதேதான். வரைய அல்லது வண்ணம் தீட்டப் பயன்படுத்தும் பொருட்களையும் ஓவியத்தோடு சேர்த்துச் சொல்வது வழக்கம். எண்ணெய் வண்ணத்தால் வரையப்படும் ஓவியத்தை ஆயில் பெயிண்டிங் என்று சொல்லுவார்கள். தற்காலத்தில், அக்ரிலிக் வண்ணங்களாலும் டிஜிட்டல் முறையிலும் ஓவியங்களை வரைகிறார்கள்.

யமுனா : அடேங்கப்பா! இவ்வளவு வகைகள் உள்ளனவா?

ஆசிரியர் : ஆமாம், இதுபோல இன்னும் நிறைய வகைகள் உள்ளன.

மார்ட்டின் : எல்லா ஓவியங்களும் அருமையாக உள்ளனவே!

ரவி : ஆமாம் மார்ட்டின்! சரியாகச் சொன்னாய்!

ஆசிரியர் : நாம் பார்த்த மற்றும் பார்த்திராத இடங்களையும் காட்சிகளையும் ஓவிய வடிவில் பார்ப்பதே ஓர் அலாதி மகிழ்ச்சிதான்.

(அடுத்த அறைக்குச் செல்கிறார்கள்)

டெய்சி : சார், இங்கே பல ஓவியங்களில் உருவமே இல்லாமல் வண்ணமயமாக இருக்கிறதே?

ஆசிரியர் : பல்வேறு வகைகளில் ஓவியங்களை வரைந்த ஓவியர்கள், உணர்வுகளை வெளிப்படுத்த சில நேரங்களில் வண்ணங்களை மட்டுமே பயன்படுத்தி உருவமற்ற ஓவியங்களை வரைந்தார்கள். ஓவிய வரலாற்றில் நவீன காலத்தில் இத்தகைய மாற்றம் நிகழ்ந்தது.

ஜோசப் : எனக்கு படம் வரைவதற்கு மிகவும் பிடிக்கும் சார்.

ஆசிரியர் : எந்த வகையான படம் வரைவதற்குப் பிடிக்கும்?

ஜோசப் : இயற்கைக் காட்சிகளையும் கார்ட்டூன் படங்களையும் வரைவது பிடிக்கும்.

ஆசிரியர் : அப்படியா! அருமை. உன் திறமையை வளர்த்துக்கொள்.

கீதா : எனக்கு டிஜிட்டல் ஓவியம் வரைவது பிடிக்கும். கம்ப்யூட்டர் டீச்சர் சொல்லி தந்தாங்க. நானும் கம்ப்யூட்டரில் பெயிண்ட் த்ரி டி மூலமாக வரைந்து பார்த்திருக்கிறேன். ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கும். நேரம் போவதே தெரியாது. பல்வேறு வடிவங்களை எளிதாக வரையலாம்.

ஆசிரியர் : மிக அருமை! கேட்கவே மகிழ்ச்சியாக இருக்கிறது.

சேகர் : சார்! நானும் நன்றாக படம் வரையப் பழகி என்னுடைய படைப்புகளை இதே ஜஹாங்கீர் ஆர்ட் கேலரியில் காட்சிப்படுத்துவேன். இது என்னுடைய இலட்சியம்.

ஆசிரியர் : வாழ்த்துகள். இப்படித்தான் இருக்க வேண்டும். எல்லோரும் உங்களுடைய திறமைகளை சரியான விதத்தில் வெளிப்படுத்தி உங்களுக்கும் பள்ளிக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும். செய்வீர்களா?

மாணவர்கள் : நிச்சயமாக செய்வோம் ஐயா.

(மாணவர்கள் அனைத்து ஓவியங்களையும் பார்வையிட்டபின் மகிழ்வுடன் பேருந்தில் ஏறுகின்றனர்)

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) ஓவியத்திற்குப் பயன்படும் பொருட்களை பட்டியலிடவும்.

தேவையான பொருட்கள்

____

____

____

____

____

____

____

ஆ) சிற்பக் கலைஞர் என்னென்ன பொருட்களைப் பயன்படுத்தி சிற்பம் வடிப்பார்?

1. ______________________
2. ______________________
3. ______________________
4. ______________________

இ) உனக்குத் தெரிந்த கலைகளின் பெயர்களை எழுதி, அவற்றைப் பற்றி சக மாணவர்களுடன் உரையாடவும்.

கலைகள்

ஓவியம்				

இணையம் எனது நண்பன்

ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை இணையத்தின் உதவியுடன் கண்டுபிடித்து எழுதவும்.

அ)

ஆ)

மொழியோடு விளையாடுவோம்.

❖ கீழே தரப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டங்களை நிறைவு செய்வோம்.

1. அரசனை இவ்வாறு அழைக்கலாம்.
2. யானையின் வேறு பெயர்.
3. தமிழ்ச் சங்கம் உருவான நகரம்.
4. சேரர்களுக்குரிய பூ.
5. கார்மேகம் போன்று பாடல்களைப் பாடும் ஒரு புலவர்.
6. சங்க இலக்கியங்களில் ஒன்று.
7. பழந்தமிழர் வீர விளையாட்டுகளில் ஒன்று.
8. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று.
9. கடலிலிருந்து எடுக்கப்படும், வலமாகச் சுழிந்து இருக்கும் ஓர் இசைக்கருவி
10. அணி வகைகளுள் ஒன்று.

உறுதி மொழி !

எந்த ஒரு போதைப் பழக்கத்திற்கும் அடிமையாக மாட்டேன்!

இப்பூமியில் என் பிறப்பும் உடலும் படைப்பின் விலை மதிப்பற்ற பரிசு. என் உடல் நலம் காக்கவும் ஆரோக்கியம் மற்றும் வலிமையுடன் இருப்பதற்காகவும் நான்

செல்வன் / செல்வி : ....

வயது : .... இடம் : ....

எனது வாழ்நாளில் எந்த ஒரு போதைப் பழக்கத்திற்கும் அடிமையாக மாட்டேன். அதாவது சிகரெட், பீடி, மது, பான் மசாலா, கர்ரா, பாக்கு, குட்கா மற்றும் புகையிலை ஆகியவற்றைப் பயன்படுத்த மாட்டேன் என்று மனப்பூர்வமாக உறுதி அளிக்கிறேன்!

மொழியை அறிவோம்.

வாக்கிய வகைகள்



மாணவர்களே! இவ்விரண்டு சொற்றொடர்களை வாசித்து, உங்களுக்குத் தோன்றுவதைக் கூறுங்கள்.

ராஜு :
டீச்சர், முதலாவது வாக்கியத்தில் ஏதோ குறைவாக உள்ளது.

ராணி :
இரண்டாவது வாக்கியம் முழுமையாக இருக்கிறது.

ஆசிரியர் :
அருமையாகக் கூறினீர்கள். முதல் சொற்றொடரில் பொருள் முழுமை அடையவில்லை. ஆனால், இரண்டாவது தொடரில் பொருள் முழுமையடைந்துள்ளது. அதாவது, **கருத்து முற்றுப்பெற்ற சொற்றொடர் வாக்கியம்** எனப்படும். சென்ற வகுப்பில் அமைப்பு அடிப்படையில் அமைந்த வாக்கியங்களைக் கற்றோம். இவ்வகுப்பில், கருத்துவகை வாக்கியங்களைப் பற்றி கற்போம்.

கருத்துவகை வாக்கியம்

- செய்தி வாக்கியம்
- விழைவு வாக்கியம்
- வினா வாக்கியம்
- உணர்ச்சி வாக்கியம்

இன்று மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தினமும் காலையில் உடற்பயிற்சி செய்வது நல்லது.

ஆசிரியர் : இவ்விரண்டு வாக்கியங்களிலிருந்து நீங்கள் அறிவது என்ன?

ரஹீம் : செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

ஆசிரியர் : நன்று! நன்று! இதுவே **செய்தி வாக்கியம்** ஆகும். அதாவது, **கூறவந்த செய்தியை தெளிவாகக் கூறுவது செய்தி வாக்கியம்** ஆகும். வேறு ஏதேனும் எடுத்துக்காட்டு கூற முடியுமா?

மலர் : கபிலன் புதிய மிதிவண்டி வாங்கினான். இது சரியா டீச்சர்?

ஆசிரியர் : மிகவும் சரியாகச் சொன்னாய், செய்தி வாக்கியம் உங்களுக்கு புரிந்துவிட்டது அல்லவா!

மாணவர்கள் : ஆமாம் டீச்சர்...

ஆசிரியர் :

- குப்பையைக் கீழே போடாதே!
- வாழ்வாங்கு வாழ்க!

இவ்வாக்கியங்களிலிருந்து நீங்கள் அறிவது என்ன?

ஜோசப் : முதல் வாக்கியம் கட்டளை இடுவது போல் உள்ளதே! சரிதானே டீச்சர்?

பாத்திமா : இரண்டாம் வாக்கியம் வாழ்த்துவது போல் உள்ளது.

ஆசிரியர் : சபாஷ்! சரியாகக் கூறினீர்கள். இவ்வாறு **தன் விருப்பத்தைத் தெரிவிக்கும் வாக்கியம் விழைவு வாக்கியம்** ஆகும். இது கட்டளை, வேண்டுகோள், வாழ்த்துதல், வைதல் எனும் நான்கு பொருள்களில் வரும்.

(எ.கா.)

- பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்யாதீர்! (கட்டளை)
- நல்ல நூல்களை நாளும் கற்க! (வேண்டுகோள்)
- பதினாறும் (செல்வம்) பெற்று பெருவாழ்வு வாழ்க! (வாழ்த்துதல்)
- நாட்டை விட்டு வறுமை ஒழிக! (வைதல்)

புரிந்ததா மாணவர்களே!

மாணவர்கள் : நன்றாகப் புரிந்தது ஐயா.

ஆசிரியர் :

- மாணவர்களே! இன்று வரும் வழியில் என்ன கண்டீர்கள்?
- இக்கவிதையை எழுதியது நீதானே?

இவ்விரு வாக்கியங்களிலிருந்து நீங்கள் அறிவது என்ன?

மாணவர்கள் : இவ்விரண்டு வாக்கியங்களும் கேள்விகள் போல் உள்ளன.

ஆசிரியர் : சரிதான். **வினாப்பொருளைத் தரும் வாக்கியம் வினா வாக்கியம்** எனப்படும்.

(எ.கா)

- உணவு வேண்டுபவர் உளரோ? - ஓ
- இது சரியான வழியா? - யா

என்ன, ஏன், யார், எவ்வாறு போன்ற வினாச்சொற்கள் இருந்தாலோ அல்லது ஆ, எ, ஏ, ஓ, யா எனும் வினா எழுத்துக்களைக் கொண்டு முடிந்தாலோ அவ்வாக்கியங்கள் வினா வாக்கியங்கள் எனப்படும். மேலும், வினாக்குறி இட வேண்டும். சரியா?

மாணவர்கள் : சரி டீச்சர்.

ஆசிரியர் :

- **ஆஹா! தாஜ்மஹால் என்னே அழகு!**
- **ஐயோ! பாம்பு, பாம்பு!**

இதுபோன்ற வாக்கியங்களை எப்பொழுது பயன்படுத்துகிறோம்?

ரவி : மகிழ்ச்சி, அச்சம் ஆகிய சூழ்நிலைகளில் நாம் பயன்படுத்துகிறோம். சரிதானே.

ஆசிரியர் : நன்று, நன்று! மேலும் துன்பம், பெருமை, வியப்பு ஆகிய சூழ்நிலைகளிலும் பயன்படுத்துகிறோம். இவ்வாறு, **நம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துமாறு அமையும் வாக்கியம் உணர்ச்சி வாக்கியம்** ஆகும். மாணவர்களே! சரியாகப் புரிந்துகொண்டீர்கள் அல்லவா? மீண்டும் அடுத்த வகுப்பில் சந்திப்போம்.

அறிந்துகொள்வோம்.

16 வகை செல்வங்கள்

கல்வி	அறிவு	ஆயுள்	ஆற்றல்
இளமை	துணிவு	பெருமை	பொன்
பொருள்	புகழ்	நிலம்	நன்மக்கள்
நம்பிக்கை	நோயின்மை	முயற்சி	வெற்றி

3. செய்திச் சோலை

அ) செய்தித் துண்டுகளை வாசித்து அதற்குரிய தலைப்பு மற்றும் படத்தை இணைக்கவும்.

I

ஹைதராபாத் : 16.03.2019

மரங்களின் பெண் (Tree Woman) என்று அழைக்கப்படும் திம்மக்கா அவர்களுக்கு இந்தியாவின் மிகப் பெரிய விருதான 'பத்மஸ்ரீ' விருதை குடியரசுத் தலைவர் திரு. இராம்நாத் கோவிந்த் வழங்கினார். இது திம்மக்கா அவர்களுக்கு மட்டுமல்ல, பசுமை ஆர்வலர் அனைவருக்கும் கௌரவத்தை ஏற்படுத்தி உள்ளது. இவர் 1911 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் தும்கூர் மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூரில் பிறந்தார். இவர் தம் கணவரோடு இணைந்து குமரஹள்ளியில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு 384 ஆலங்கன்றுகளை நட்டு, பாதுகாத்து, மரங்களாக்கி சாதனை செய்து உள்ளார். கன்னடத்தில் 'சாலு' என்றால் வரிசை என்று பொருள். 'மருத' என்பது மரத்தைக் குறிக்கும். சாலையின் இருபுறமும் வரிசையாக மரக்கன்றுகளை நட்டதால், இவர் பெயருக்கு முன் 'சாலு மருத' என்ற அடைமொழியைக்கொடுத்து இவரை 'சாலு மருத திம்மக்கா' என்று சிறப்பித்து உள்ளது கர்நாடக மாநில அரசு. 108 வயதிலும் இவர் இப்பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரிய செயலாகும். தன் கிராமத்தில் மழை நீரை சேகரிக்க பிரம்மாண்ட தண்ணீர் தொட்டி ஒன்றை கட்டுவதற்கு இவர் உதவி செய்திருக்கிறார். லாஸ் ஏஞ்சல்ஸ், ஓக்லேண்ட், கலிபோர்னியா சுற்றுச் சூழல் நிறுவனங்களுக்கு 'திம்மக்காஸ் ரிசோர்சஸ் ஃபார் என்விரான்மென்டல் எஜுகேஷன்' என்று பெயர் சூட்டி உள்ளனர்.

II

மும்பை

மஹாராஷ்டிராவில் தீபாவளியை முன்னிட்டு பள்ளிக் குழந்தைகளுக்கான கோட்டையைத் தயார் செய்யும் போட்டியை மாநகராட்சிப் பள்ளிகள் அறிவித்தன. ஊரடங்கு நேரத்தில் மாணவர்கள் இணைய வழி மூலமாகவே பாடம் கற்கின்றனர். எனவே, இந்தப் போட்டியும் இணைய வழி மூலமாகவே நடைபெற்றது. மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்தப் போட்டிக்காக இணையத்தை குழந்தைகள் பயன்படுத்திக் கொண்டனர். ராய்கட் மலைக் கோட்டையைப் போலவே வடிவமைத்த பா.வேலவன் என்ற ஏழாம் வகுப்பு மாணவனுக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அவன் கற்கள், செங்கல், அட்டைப்பெட்டி போன்ற விதவிதமான பொருட்களை வைத்து கோட்டைபோல் அமைத்தான். அதன் மேல் குழைத்த மண்ணில் நனைத்த மெல்லிய கோணித் துணியைப் பரப்பி வடிவமைத்தான். மலை, அதன்மேல் பசும்புல் வெளிக்காக விரைவில் வளரும் ஆளி விதைகளைத் தூவி இருந்தான். அது முளைக்கட்டி சுற்றி உள்ள மலை, மேடு, பள்ளங்களில் பசுமை போன்று காட்சி அளித்தது. கோட்டையில் காட்சி அளிக்கும் அனைத்திற்கும் தகுந்த பொம்மைகளை சேகரித்து, உரிய இடத்தில் பொருத்தினான். இந்தக் கோட்டையில் வீர சிவாஜி மகாராஜா கம்பீரமாக அமர்ந்திருப்பது அழகாக இருந்தது. அவர் முன்னே மந்திரிகள் அமர்ந்திருப்பதும் கோட்டையைச் சுற்றி வீர சிப்பாய்கள் வரிசையில் அணிவகுத்து நின்றதும் காண்போரின் கவனத்தை ஈர்த்தது. எல்லோரும் அக்கோட்டை ராய்கட் கோட்டையின் சரியான நகல் போல் காட்சி அளிப்பதாகக் கூறினர். அதற்கு வேலவன், கணினியின் உதவியுடன் ஒவ்வொரு நுணுக்கத்தையும் கவனித்து உருவாக்கினேன் என்று மகிழ்ச்சியுடன் கூறினான். புனேயைச் சேர்ந்த நிலா ஜார்ஜ் எனும் மாணவிக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. அந்த மாணவி சின்ஹகட் கோட்டையைப் போல் வடிவமைத்து இருந்தாள். இது முற்றிலும் கல்லால் ஆன கோட்டை. எனவே கல்லின் நிறம் போல அமைத்து இருந்தாள். இந்த கோட்டை மிகவும் உயரமாக இருந்தது. நடுவர்கள் இணைய வழிமூலம் இதில் பங்கு பெற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் இ- சான்றிதழ் வழங்கினர். இதைப் போன்ற போட்டிகளால் நம் நாட்டின் வரலாறு, சிறப்பு, மதிப்பு போன்றவை மாணவ, மாணவிகளுக்கு புரியும்.

III

சென்னை :

தமிழகத்தைச் சேர்ந்த பாலம் கல்யாண சுந்தரம் ஆயிரம் ஆண்டுகளின் மனிதர் (Man of the Millenium) என்ற விருதுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டார். அமெரிக்காவில் இவர் 6.5 மில்லியன் டாலர் (30 கோடி) பரிசு பெற்றார்.

இவர் தன் தாயாரின் அறிவுரையான "எது கிடைத்தாலும் பத்தில் ஒரு பங்கை தானம் செய்; தினமும் உயிர்க்கு நல்லது செய்; வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும்" என்பதை சிறு வயதில் இருந்தே முற்றிலும் கடைப்பிடித்து வந்தார்.

கல்யாண சுந்தரம் அவர்கள், 1940 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேலக்கருவேலங்குளம் என்ற ஊரில் பிறந்தார். இவரின் தந்தை திரு. பால் வண்ணநாதன், தாயார் திருமதி. தாயம்மாள். இவர் கல்லூரி படிப்பின் போதே பண்டித ஜவஹர்லால் நேருவின் வானொலி பேச்சைக் கேட்டு, தேசிய பாதுகாப்பு நிதிக்காக தனது எட்டரை பவுன் தங்கச் சங்கிலியை பெருந்தலைவர் காமராசரிடம் கொடுத்தார்.

நூலக அறிவியலில் ஆராய்ச்சி செய்து தங்கப் பதக்கம் பெற்றார். 35 ஆண்டுகள் பேராசிரியர் பணி புரிந்து பெற்ற ஊதியம் அனைத்தையும் ஏழை மக்களின் நலனுக்காக செலவிட்டார். ஓய்விற்கு பின் தனது சொந்த செலவிற்காக ஓர் உணவகத்தில் உணவு பரிமாறுபவராக பணிபுரிந்த பெருந்தன்மை உடையவர்.

இவர் 'பாலம்' என்ற தொண்டு நிறுவனத்தைத் தொடங்கி அதன் மூலம் சேவை செய்து வருகிறார். 'உதவி இந்நிறுவனம் தேவைப்படுவோரையும் உதவி செய்வோரையும் இணைக்கும் அன்புப் பாலமாகும்.'

IV

மும்பை செப் 24,2020

முதன் முறையாக ரஃபேல் விமானங்களை இயக்க ஷிவாங்கி சிங் என்ற பெண் விமானி இந்தப் படை பிரிவில் இணைக்கப்பட்டுள்ளார். இவர் பீஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர். "அவளுக்குப் பத்து வயது இருக்கும் போது எங்கள் கிராமத்திற்கு ஹெலிகாப்டர் வந்தது. அந்த ஹெலிகாப்டரை பார்த்ததிலிருந்து தான் விமானியாக வேண்டும் என்ற கனவுடன் வளர்ந்தாள்" என்று ஷிவாங்கியின் தந்தை கூறினார். தன் பள்ளியில் இருந்த சாரணர் படையில் (Scout) சேர்ந்து பல்வேறு பதக்கங்களும் பெற்றுள்ளார். தொடர்ந்து வாரணாசி பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் கல்லூரிப் படிப்பை முடித்து 2017 ஆம் ஆண்டு இந்திய விமானப் படையில் கோல்டன் ஏரோஸ் படையில் இணைந்து உள்ளார். இந்தியாவின் கோல்டன் ஏரோஸ் படையின் புதிய இயந்திரம் ஷிவாங்கியிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்திய கடற்படையின் சீருடை மற்றும் சின்னம் அணிந்தவுடன், அதை அன்புடன் பார்த்து இது எனக்கும் என் பெற்றோருக்கும் ஒரு பெருமையான உணர்வு என்றார். மேலும் என்னுடைய நீண்ட நாள் ஆசை நிறைவேறியது என்றும் கூறினார். பத்து வயதில் ஹெலிகாப்டரை பறக்க விட நினைத்தாள். அதன் இலக்கை அடைந்து விட்டாள். எங்கள் பெண்ணை நினைத்து பெருமை அடைகிறோம் என்று ஷிவாங்கியின் பெற்றோர்கள் பெருமிதம் அடைகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் வானத்தைத் தொட செல் பெண்ணே! என்று முன்னாள் விங் கமாண்டர் அனுபமா ஜோஷி, ஷிவாங்கிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். தங்கள் பகுதியில் வளர்ந்த பெண், போர் விமானத்தை இயக்கி, நாட்டிற்கே பெருமை சேர்ப்பதை அறிந்து, வாரணாசி பகுதி மக்கள் கொண்டாடி வருகின்றனர். தங்கள் சாதனைகள் மூலம் ஷிவாங்கி போன்ற பெண்கள் 'பாரதி கண்ட புதுமைப் பெண்' கனவை நனவாக்குகிறார்கள்.

V

புது தில்லி ஜன 27, 2021

32 குழந்தைகளுக்கு பிரதமரின் பிரதான் மந்திரி ராஷ்ட்ரிய பால் புரஸ்கார் (விருது) வழங்கப்பட்டன. அவர்களுள் பீகாரைச் சேர்ந்த ஜோதி குமாரி, மஹாராஷ்டிராவைச் சேர்ந்த காமேஸ்வரர் ஜகன்னாத் வாக்மாரே, உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த கன்வார் திவ்யானேஷ் சிங் ஆகிய மூவரும் அடங்குவர். இந்த மூன்று பேரின் வீரதீர செயலுக்காக இவ்விருது வழங்கப்பட்டது. உடல் நிலை சரியில்லாத தனது தந்தையை சுமார் 1200 கி. மீட்டர் தூரம் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்ற 16 வயது சிறுமிக்கு வழங்கப்பட்டது. மஹாராஷ்டிரா நான்டெட் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் காமேஸ்வர் ஜகன்னாத் வாக்மாரே என்ற 14 வயது சிறுவன், ஆற்றில் மூழ்கிய இரண்டு குழந்தைகளைக் காப்பாற்றியது பெருமைக்கு உரிய செயலாகும். கன்வார் திவ்யானேஷ் சிங், 15 வயது உத்திர பிரதேசத்து சிறுவன், தன்னுடைய 5 வயது தங்கை மற்றும் அவளுடைய ஏழு நண்பர்களையும் காளை மாட்டின் தாக்குதலில் இருந்து காப்பாற்றினான். இந்த சிறுவனின் துணிச்சலான செயல் பாராட்டுதலுக்கு உரியது. இம்மூவருக்கும் சான்றிதழ் பதக்கம், மற்றும் பரிசு ஆகியவை அளிக்கப்பட்டன.

அ. மாணவர்களும் மகத்தான கோட்டையும்

ஆ. பாரதி கண்ட புதுமைப்பெண்

இ. ஆயிரம் ஆண்டுகளின் மனிதர்

ஈ. குழந்தைகளுக்கான வீர தீர தேசிய விருது

உ. பசுமை ஆர்வலர் பத்மஸ்ரீ

செய்தி	தலைப்பு	படம்
(எ.கா) IV	ஆ	3

ஆ) விடுபட்ட எழுத்துகளை நிரப்பவும்.



இ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. **சாலு** என்றால் ....
   (வரிசை / ஆறு / மலை)
2. **வேலவன்** வடிவமைத்தது ....
   (செங்கோட்டை / ராய்கட் / சின்ஹகட்)
3. **பாலம்** எனும் அமைப்பை ஏற்படுத்தியவர் ....
   (மீனாட்சி சுந்தரம் / அழகப்பன் / கல்யாண சுந்தரம்)
4. **பால** புரஸ்கார் யாருக்கு வழங்கப் படுகிறது? ....
   (சிறுவர், சிறுமியர் / முதியவர்கள் / எழுத்தாளர்கள்)

ஈ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. மரங்களின் பெண் என்றழைக்கப்படுபவர் யார்? ஏன்?
2. நீ அறிந்த கோட்டைகள் இரண்டின் பெயர்களை எழுதுக.
3. வீரதீர விருது என்றால் என்ன?
4. போர் விமானத்திற்கும் பயணிகள் விமானத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

உ) கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு ஆசிரியர் உதவியுடன் செய்தியை உருவாக்குவோம்.

சாரஸ் கிரேன் பறவைகள் - பாதுகாத்தல் - திட்டம் - மிக உயரமாக பறக்கும் பறவை - தமிழில் சரசபெருங்கொக்கு - மகாராஷ்டிரா - சந்திராப்பூர் - கோண்டியா - பண்டாரா - மாவட்டங்களில் காணப்படுகிறது.

4. தமிழர் திருநாள்

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் சிறப்பான நாட்கள் உண்டு. உலகமெங்கும் வாழும் தமிழருக்கென ஒரு நன்னாள் உண்டு. அதைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? அந்நன்னாளைப் பற்றி இப்பாடத்தில் காண்போம்!

பொங்கல் என்பது தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா. தை மாதம் முதல்நாள் பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. பொங்கு என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் மற்றும் பொங்கிப் பெருகி வருவது என்றும் பொருள்படும். பொங்குவதால் பொங்கல் என அழைக்கப்படுகிறது.

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடி உயரும்
குடி உயர கோல் உயரும்
கோல் உயர கோன் உயர்வான்

என்ற ஔவையாரின் கருத்திற்கு ஏற்ப உயர்ந்து திகழ்கிறது தமிழ்நாடு. நீர் வளம் கொண்ட இடங்களில் முப்போகம் விளையும். ஒரு சில இடங்களில் மழை நீரினால் ஒரு பருவம் தான் பயிர் செய்ய முடியும். எனவே, உழவர்கள் ஆடித்திங்களில் விதைப்பர். அறுவடை செய்ததை தைத்திங்களின் முதல் நாளில் பொங்கலிட்டு வழிபடுவர். எனவே,இத்திருவிழாவை அறுவடைத் திருவிழா என்றும் அழைப்பர்.

இத்திருவிழா போகிப் பண்டிகை, பொங்கல் திருநாள், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்களாகக் கொண்டாடப்படுகிறது.

போகிப் பண்டிகை

பொங்கலுக்கு முந்தைய நாள் போகிப் பண்டிகை. இது மார்கழி மாத இறுதி நாளன்று கொண்டாடப்படுகிறது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே

என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க, அந்நாளில் வீட்டிலுள்ள தேவையற்ற பழைய பொருட்களை எரித்தும் மனதிலுள்ள தீய எண்ணங்களை நீக்கியும் வீட்டைப் புதுப்பொலிவுடன் திகழச் செய்வதே போகிப் பண்டிகை ஆகும்.

பொங்கல் திருநாள்

தை பொறந்தா வழி பிறக்கும்
தங்கமே தங்கம்...

ஆம். தை மாதம் பிறந்தாலே மக்களின் மனதில்தான் எத்தனை மகிழ்ச்சி! தைத்திங்கள் முதல் நாள் தானே நாம் எதிர்பார்த்திருந்த பொங்கல் திருநாள். இந்நாளில் மக்கள் தங்கள் வீட்டு வாசலில் வண்ணக் கோலமிட்டு, மாவிலைத் தோரணம் கட்டுவர். புத்தாடை அணிந்து புதுப்பானையில் புத்தரிசியோடு வெல்லம், முந்திரி, நெய் சேர்த்து பொங்கலிடுவர். பொங்கல் பொங்கி வரும் வேளையில் 'பொங்கலோ பொங்கல்' என்று மங்கல ஒலி எழுப்புவர். பொங்கல் பொங்கி வருவது போல் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கிப் பெருகும் என்பது மக்களின் நம்பிக்கை. கரும்பு, மஞ்சள், தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, பனங்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, காய்கறிகள் ஆகியவற்றை வைத்து வழிபடுவர். விளைச்சலுக்குக் காரணமான கதிரவனை நன்றியோடு வணங்குவர். சர்க்கரைப் பொங்கலை அனைவருக்கும் அளித்து தாமும் உண்டு மகிழ்வர்.

பொங்கல் விழா தமிழர்களின் விழாவாகும். பொங்கல் திருநாளை தமிழர்கள் சமயங்களைக் கடந்து கொண்டாடும் வழக்கமும் உள்ளது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் தேவாலயங்களில் கரும்பு, பழங்களுடன் பொங்கலிட்டு கொண்டாடுகின்றனர். தமிழ் இஸ்லாமியக் குடும்பங்களில் பொங்கலன்று சர்க்கரைப் பொங்கலுடன் பதினாறு வகை காய்கறிகளை சமைத்து சிறப்பு விருந்து உண்கின்றனர்.

மாட்டுப் பொங்கல்



பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல்.

"உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும், ஏர்த்தொழிலையே பின்பற்றி நிற்கும்".

"விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்"

– என்று உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளுக்கு குறிப்பாக மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

மாடுகள் உழவர்களின் செல்வமாகக் கருதப்படுகின்றன.

இந்நாளில் மாடுகளைக் குளிப்பாட்டி, மஞ்சள் குங்குமம் இட்டு, மாலை அணிவித்து, அலங்கரித்து அவற்றிற்கு மரியாதை செய்வர். உழவுக் கருவிகளை வைத்தும் வழிபடுவர். சக உயிர்களையும் மதித்து உணவளித்து பேணும் தமிழர்களின் பண்பாடு போற்றுதலுக்குரியது.

காணும் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் காணும் பொங்கல். இந்நாளில் மக்கள் தங்களின் உற்றார் உறவினர்களை சந்தித்து அன்பையும், உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர். விரும்பிய இடங்களுக்குச் சென்று மகிழ்வுடன் பொழுதைக் கழிப்பர்.

இயற்கை, உழைப்பு, நன்றியுணர்வு, பண்பாடு ஆகியவற்றைப் போற்றும் இவ்விழா தமிழர்கள் வாழும் உலக நாடுகள் அனைத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. பொங்கல் மக்களிடையே எவ்வாறு உறவை வளர்க்கிறது என்பதை உன்னுடைய சொந்த நடையில் எழுதுக.
2. மாட்டுப் பொங்கலன்று உங்கள் ஊரில் என்னென்ன நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள்? நீ என்னென்ன நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துள்ளாய்?

ஆ) உழவர்கள் மாடுகளுக்கு ஏன் நன்றி செலுத்த வேண்டும் என்று சிந்தித்து அதனை உரையாடலாக எழுதவும்.

ராஜன் : ______________________________

கீதா : ______________________________

ரவி : ______________________________

சவீதா : ______________________________

இ) உனது வீட்டில் நீயும் உன் குடும்பத்தினரும் பொங்கல் எவ்வாறு கொண்டாடினீர்கள் என்பதை புகைப்படம் எடுத்து ஒட்டி அதைப்பற்றி உனது சொந்த நடையில் எழுதுக.

செயல்திட்டம்

பொங்கல் விழா எந்தெந்த நாடுகளில் எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்பதை இணையத்தின் உதவியுடன் அறிந்து கட்டுரை ஒன்று எழுதவும்.

தகவல் பெட்டியைத் திறப்போம்!

- வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் நோக்கத்தில் போகிப்பண்டிகை அக்காலத்தில் இந்திர விழாவாக கொண்டாடப்பட்டது.
- தை முதல் நாளில் திருவள்ளுவர் ஆண்டு தொடங்குகிறது. திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் 31ஐக் கூட்ட வேண்டும்.

  எ.கா. 2022 + 31 = 2053
- மாட்டுப் பொங்கலன்று பெரும்பாலான ஊர்களில் பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

5. சாவித்திரிபாய் புலே

-கவிஞர் அம்பிகா குமரன்



பெண்ணென்றால் ஏளனம்என்ற
பெருங்கதையை ஒழித்தவர்
கண்ணெனவே கல்வியினைக்
கைகொண்டு ஜெயித்தவர்

பெண்ணுரிமை எவையென்று
பேருண்மை உரைத்தவர்
உண்மைதனை குரலெடுத்து
உலகுக்கு உரைத்தவர்

சாணியள்ளி அடித்தாலும்
சமரசமின்றி உழைத்தவர்
தோணியென உடன்நின்று
பெண்வலிகள் களைந்தவர்

பெண்கல்வி வேண்டுமென்று
கைஉயர்த்தி நடந்தவர்
பண்புகளை வளர்த்துக்கொண்டு
பலதடைகள் கடந்தவர்

முன்னின்று படைநடத்த
முறைகல்வி பயின்றவர் தன்னியல்புத்
தலைமையினால் தரணிக்கு
உழைத்தவர்

ஆண்கல்வி பெண் கல்வி
ஒன்றெனவே உரைத்தவர்
ஆசிரியப் பணியாற்றி
முத்திரைகள் பதித்தவர்

வான்முட்டும் சாதனைகள்
வாழ்த்திநாமும் போற்றுவோம்
ஊன்கொண்ட அவர்விதைக்கு
தண்ணீர்நாமும் ஊற்றுவோம்...!

நூல்வெளி

கவிஞர் அம்பிகா குமரன் இலக்கியச் செயல்பாடுகளைத் தமிழகமெங்கும் முன்னெடுப்பவர். மூன்று கவிதை நூல்கள் வெளியாகியுள்ளன. இவர் எழுதிய சாவித்திரிபாய் புலே என்னும் கவிதை நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. மகாராஷ்டிராவில் பெண்கல்விக்காக பாடுபட்ட முதல் பெண்மணி ....
   அ) சரோஜினி ஆ) சாவித்திரிபாய் புலே இ) அன்னிபெசன்ட்
2. தீமைகளை .... பிடுங்கி எறிய முற்பட்டார்.
   அ) வேரோடு ஆ) மரத்தோடு இ) கிளையோடு
3. சாதி இழி நிலையை .... உடன் இணைந்து எதிர்த்தார்.
   அ) திலகர் ஆ) கோகலே இ) மகாத்மா புலே

ஆ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. சாவித்திரிபாய் புலே பற்றி உனக்கு தெரிந்த தகவல்களை எழுதவும்.
2. சாவித்திரிபாய் புலே காலத்து பெண்கல்வி மற்றும் தற்காலத்து பெண் கல்வி பற்றி ஒப்பிட்டு எழுதுக.

இ) பத்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதவும்.

உலகில் எந்த ஆறும் தனது தாகத்திற்காக ஓடுவதில்லை. எந்த நிலமும் தன் பசிக்காக விளைவதில்லை. எந்த மரமும் தனக்காக கனிகளை உருவாக்குவதில்லை. இவற்றைப்போல மனிதனும் தனக்கென வாழாமல் பிறருக்கென வாழவேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு அருள், பொறுமை, பரிவு, நன்றியுணர்வு, இன்சொல் பேசுதல் போன்ற குணங்கள் தேவை. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும். அதுவே, மனிதநேயம் ஆகும். மனிதநேயத்துடன் வாழ்பவர்களால் தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

1. மனிதனுக்கு தேவையான குணங்கள் யாவை?
2. உலகில் எந்த ஆறும் தனது ___________ ஓடுவதில்லை.
3. இரக்கம் என்ற சொல்லுக்கு இணையான வேறு சொல்லை எடுத்து எழுதுக.
4. இப்பத்தியில் இடம் பெற்றுள்ள இணைப்புச் சொற்கள் ___________, ___________.
5. மனிதநேயம் குறித்த உனது கருத்துகளை எழுதவும்.

செயல்

- பெண்கள் முன்னேற்றம் இப்போது எவ்வாறுள்ளது என்பதை உன் சொந்த நடையில் கூறுக.
- பெண்கல்வி பற்றி உனக்கு தெரிந்த தகவல்களைக் கொண்டு கட்டுரை எழுத முயற்சி செய்க.

செயல்திட்டம்

- ஒருவரைக் கேலி செய்வது அவர் மனதில் எவ்வளவு வேதனையைத் தருகிறது என்பதையும் அதற்கான தீர்வுகள் குறித்தும் அனுபவங்களின் அடிப்படையில் கலந்துரையாடவும்.
- மன உறுதியோடு செயற்கரிய சாதனைகள் செய்தவர்கள் கதையை இணையம் வழி அறிந்து வகுப்பறையில் கதையாகக் கூறவும்.

தெரிந்து கொள்வோம்.

பெயர்	:	சாவித்ரிபாய் புலே
பெற்றோர்	:	கண்டோஜி நவ்சே பாட்டீல், லட்சுமிபாய்
கணவர்	:	ஜோதிராவ் புலே
குழந்தை	:	யஷ்வந்த் புலே
சாதனைகள்	:	முதல் பெண் ஆசிரியர், சமூகசீர்திருத்தவாதி, கல்வியாளர், கவிஞர்
அமைப்பு	:	சிசுக்கொலை தடுப்பு இல்லம், சத்தியசோதக் சமாஜ், மகளிர் சேவை மையம்
போராட்டம்	:	குழந்தை மணத்திற்கு எதிராக, கைம்பெண் மறுமணத்திற்கு ஆதரவாக

6. ஐவகை நிலங்களும் பூக்களும்

சங்ககால தமிழகத்தில் நம் முன்னோர்கள் தாம் வாழும் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு அதனை வகைப்படுத்தினர். இவை நம் தமிழ் மக்களின் வாழ்வியலோடு இணைந்தவையாக அமைந்திருந்தன. இவ்வகைப்பாடே தமிழர் நிலத்திணைகள் என்றழைக்கப்பட்டன. அவற்றை இப்பாடலில் காண்போமா மாணவர்களே!

ஹேய்......
கொடைக்கானல் மலைமேலே
குறிஞ்சிப் பூ பூத்திருக்கு
பூப் பறிக்க போகலாமா
சின்னப் பொண்ணு ரத்தினமே!
தன்னனன்னே நானனன்னே
நானானே நானன்னே! - ஹேய்...

பொதிகை மலை காட்டுக்குள்ளே
முல்லைப் பூ பூத்திருக்கு
பூப் பறிக்க போகலாமா
சின்னப் பொண்ணு ரத்தினமே!
தன்னனன்னே நானனன்னே
நானானே நானன்னே! - ஹேய்...

வயக்காட்டு குளத்தினிலே
தாமரைப் பூ பூத்திருக்கு
பூப் பறிக்க போகலாமா
சின்னப் பொண்ணு ரத்தினமே!
தன்னனன்னே நானனன்னே
நானானே நானன்னே! - ஹேய்...

கடலோரம்... ஹேய் ...
கடலோரம்
மணல் வெளியில்
தாழம் பூ பூத்திருக்கு
பூப் பறிக்க போகலாமா
பொன்னுமணி ரத்தினமே!
தன்னனன்னே நானனன்னே
நானானே நானன்னே! - ஹேய்...

வறண்ட பாலை நிலத்தினிலும்
குரவம் பூ பூத்திருக்கு
வறண்ட பாலை நிலத்திலும்
குரவம் பூ பூத்திருக்கு
பூப் பறிக்க போகலாமா
பொன்னுமணி ரத்தினமே!
தன்னனன்னே நானனன்னே
நானானே நானன்னே! - ஹேய்...

சிந்திப்போம், செயல்படுவோம்!

செயல்

➢ உனக்குப் பிடித்த பூவை வரைந்து அது ஏன் பிடிக்கும் என்பது பற்றி உன் வகுப்பில் உரையாடுக.

➢ பூக்களின் பயன்கள் என்ன என்பதை உன்னுடைய சொந்த நடையில் கூறுக.

செயல்திட்டம்

அட்டவணையை நிறைவு செய்து கற்றல் மூலையில் காட்சிப்படுத்தவும்

வரிசை எண்	பூவின் பெயர்	வண்ணம்	இதழ்களின் எண்ணிக்கை	மணம் / மணமற்றது
1				
2				
3				
4				
5				

தகவல் பெட்டியைத் திறப்போம்.

நிலம்	மக்கள்	உணவு	விலங்கு	பூ	பறவை	தொழில்
குறிஞ்சி	குறவன், குறத்தி	தினை, நெல்	புலி, கரடி, சிங்கம்	குறிஞ்சி, காந்தள்	கிளி, மயில்	தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்
முல்லை	ஆயர், ஆய்ச்சியர்	வரகு, சாமை	முயல், மான்	முல்லை, தோன்றி	காட்டுக் கோழி, மயில்	ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல்
மருதம்	உழவர், உழத்தியர்	செந்நெல், வெண்ணெய்	எருமை, நீர்நாய்	தாமரை, செங்கழுநீர்பூ	நாரை, நீர்க்கோழி, அன்னம்	நெல்வரிதல், களை பறித்தல்
நெய்தல்	பரதர், பரத்தியர்	மீன்	முதலை, சுறா	தாழை, நெய்தல்	கடற் காகம்	மீன் பிடித்தல், உப்பு விளைத்தல்
பாலை	எயினர், எயிற்றியர்	வழிப்பறி மூலம் கிடைக்கும் உணவு பொருட்கள்	வலிமை குன்றிய யானை, புலி	குரவம், பாதிரி	புறா, பருந்து	வழிப்பறி செய்தல்

இணையம் எனது நண்பன்

- ➢ இது போன்ற நாட்டுப்புற பாடல்களை சேகரித்து பாடி மகிழவும்.
- ➢ இணையத்திலிருந்து நாட்டுப்புறப்பாடல்களைக் கேட்டு மகிழவும்.

✸ **படத்தைப் பார்த்து தகுந்த நிலம் மற்றும் பூவின் பெயரை எழுதவும்.**

அலகு 4

1. நீதி வெண்பா

திங்க ளமிர்த கிரணமிகச் சீதளமே
திங்களினுஞ் சந்தனமே சீதளமாம் - இங்கிவற்றின்
அன்பறிவு சாந்த மருளுடையார் நல்வசனம்
இன்பமிகுஞ் சீதள மாமே.

பொருள் : சீதளம் - குளிர்ச்சி, கிரணம் - ஒளி

தெளிவுரை : சந்திரனுடைய அமிர்த கிரணம் மிகவும் குளிர்ந்தது. சந்தனம் சந்திரனைக் காட்டிலும் குளிர்ந்தது. இவ்விரண்டையும் விட அன்பையும் அறிவையும் பொறுமையும் அருளையும் கொண்ட மேலோர்களுடைய இன்சொல் இன்பமளிக்கும் குளிர்ச்சியுள்ளதாம்.

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே - வெற்றி பெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும் பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி.

பொருள் : சிற்றுணர்வோர் - அற்ப அறிவுடையோர், முற்றுணர்வோர் - பேரறிவுடையோர்.

தெளிவுரை : உயர்ந்த வெண்கலத்தின் ஒலி அதிகமாகும். மாற்றுயர்ந்த பொன்னால் செய்த அழகான பாத்திரத்தில் அதிக ஓசை உண்டோ? அதுபோல அற்ப அறிவுடையோர் என்றும் அளவு கடந்து பேசுவர். கல்வி கேள்விகளில் நிறைந்து அடங்கிய பேரறிவுடையோர் ஒன்றும் அளவு கடந்து பேசார்.

நூல்வெளி

நீதி வெண்பா பெயருக்கேற்ப நீதிகளைத் தன்னகத்தே உடைய வெண்பாக்களினால் ஆகியதொரு நூலாகும். இதன்கண் ஒவ்வோர் நீதியைக் கூறும் வெண்பாவும் உண்டு. பல நீதிகளை விளக்கும் வெண்பாவும் உண்டு. இந்நூலை இயற்றியவர் யார் என்று தெரியவில்லை.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) எதிர்ச்சொல் எழுதவும்.

1. சிற்றறிவு X ________________.

2. அருளுடையார் X ________________.

ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. சீதளம் என்பதன் பொருள் ....
   1) குளிர்ச்சி 2) வெம்மை 3) பளபளப்பு

2. கிரணம் என்பதன் பொருள் ....
   1) ஒலி 2) ஒளி 3) ஒழி

இ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. மேலோர் கூற்று எவற்றைவிடக் குளிர்ச்சியாக இருக்கும்?
2. எத்தன்மையுடையோரை மேலோர் என நீ கூறுவாய்?
3. கோவில்மணி செய்ய எது பயன்படுத்தப்படுகிறது? எதற்காக?

ஈ) இரட்டைக்கிளவியைப் பயன்படுத்தி எழுதவும்.

எ.கா : சிற்றுணர்வோர் **சிலுசிலு**ப்பர்.

1. நீரோடை ....
2. தொண்டை ....
3. நா ....
4. குழந்தை ....
5. வெண்டைக்காய் ....
6. தங்கம் ....
7. மாட்டுவண்டி ....
8. இதயம் ....

மொழியோடு விளையாடுவோம்.

❖ அந்தாதி சொற்களை உருவாக்குவோம்.

எ.கா :

புளிப்பு புன்னகை கைப்பேசி சிவப்பு புனைவு	தாழம்பூ பூவரசு சுருக்கு குப்பி பிழைப்பு

★ அருவி, கரும்பு, எளிது, மெதுவாக ஆகிய சொற்களுக்கு அந்தாதிச் சொற்களை உருவாக்குவோம்.

செயல்

➢ உடல் நலக்குறைவால் ஐந்து நாட்களாக பள்ளிக்கு வராத உனது வகுப்பு தோழனை அவனது வீட்டிற்குச் சென்று சந்தித்தால் என்னென்ன இன்சொற்களைப் பேசி, அவன் விரைவில் குணமடைய உற்சாகமூட்டுவாய் என்பதை வகுப்பில் உரையாடவும்.

செயல்திட்டம்

➢ உனக்குத் தெரிந்த ஏதேனும் ஐந்து நறுமணமூட்டிகள் / குளிர்ச்சி தரும் பொருட்கள் ஆகியவற்றின் பெயர்கள் மற்றும் பயன்களைப் பட்டியலிடவும்.

நறுமணமூட்டிகள் / குளிர்ச்சி தரும் பொருட்கள்	பயன்கள்
1.	
2.	
3.	
4.	
5.	

2. ஒரு நூலகத்துக்குப் புத்தகங்கள்

– சுதா மூர்த்தி / சாருகேசி (மொ.பெ.)

'உலகத்தையே தனக்குள் வைத்துக் கொண்டு எவ்வளவு தன்னடக்கமாக உள்ளது புத்தகம்'

நான் ஒரு நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஆசிரியரின் குடும்பத்திலிருந்து வந்தவள். அதனால், உண்மையான செல்வம் என்று நாங்கள் நினைப்பது புத்தகங்களையும் அறிவுச் செல்வத்தையும் தான். கிராமத்தில் சிறு பெண்ணாக நான் இருந்தபோது என் தாத்தாவை எல்லோரும் எப்படி மதித்தார்கள் என்று எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அவர் ஒன்றும் பெரிய பணக்காரர் அல்ல. எங்கள் வீட்டு முன்னால் இருக்கும் அரச மரத்தின் நிழலில் ஒரு பாயை விரித்து உட்கார்ந்திருப்பார். கையில் எப்போதும் ஒரு புத்தகம் இருக்கும். மாலை நேரங்களில் அவரிடம் ஆலோசனை கேட்க நிறைய பேர் வருவார்கள். கிராமத்திலுள்ள மிகப் பெரிய பணக்காரர்கள் கூட, எங்கள் வீட்டைத் தாண்டிப் போகும்போது அவரை வணங்கிவிட்டுத்தான் செல்வார்கள். 'ஆசிரியரை ஏன் வணங்க வேண்டும்'? என்று நான் தாத்தாவைக் கேட்டேன்.

அவர் சிரித்துவிட்டு கதை சொல்ல ஆரம்பித்தார். "துரோணாச்சாரியாருக்கு ஏன் அவ்வளவு மரியாதை கொடுக்கிறாய் என்று அர்ஜுனனிடம் சில நண்பர்கள் கேட்டார்களாம். துரோணர் வயதானவர். அர்ஜுனன் போல் அவரிடம் செல்வம் இருக்கவில்லை. அரசாள நாடுகூடக் கிடையாது. ஆனாலும், அர்ஜுனன் எப்போதும் அவர் காலடியிலேயே இருந்தானாம். அதற்கு என்ன காரணம் தெரியுமா? 'உலகத்திலுள்ள அனைத்து செல்வங்களுமே அழியக்கூடியவை. ஒன்றே ஒன்று மட்டும்தான் இதற்கு விலக்கு. அதுதான் அறிவுச்செல்வம். கொடுத்தால் குறைந்து போகாது, மாறாக பெருகும். ஓர் ஆசிரியர் தன் மாணவர்களுக்கு அறிவைக் கொடுக்கிறார். அவர்தான் பெரிய செல்வந்தர் என்று நான் நினைக்கிறேன். அதனால்தான் ஆசிரியரை எல்லோரும் மதிக்கிறார்கள்' என்றான் அர்ஜுனன்".

இப்படிப்பட்ட சாதாரண மனிதர் என் தாத்தா, அவரிடமிருந்து நான் நிறைய கற்றுக் கொண்டேன். சிறுமியாக இருந்தபோது முதன் முதலாக நான் வீட்டை விட்டு வெளியே காலடி எடுத்து வைத்து, போன இடம் கிராம நூலகக் கட்டடம்தான். எங்கள் கிராமத்தில் அது ஒரு சிறிய இரண்டு மாடிக் கட்டடம்தான். கீழ்த்தளத்தில் ஒரு கடையும் முதல் மாடியில் நூலகமும் இருக்கும். கட்டடத்தைத் தொட்டாற்போல் ஒரு பெரிய அரசமரமும் இருக்கும். அதனடியில் சிமிட்டி மேடை இருக்கும். கன்னடத்தில் அதை 'கட்டே' என்பார்கள். மாலை நேரங்களில் கிராமத்துப் பெரியவர்கள் அங்கே கூடுவார்கள். என் தாத்தாவும் அவர்களில் ஒருவர். தாத்தாவுடன் நானும் செல்வேன். அவர் என்னை மாடிக்கு அழைத்துப் போய் விட்டுவிட்டு கீழே

மேடையில் மற்றவர்களோடு அமர்ந்து விடுவார்.

நான் பார்த்த பல நூலகங்களில், நான் நுழைந்த முதல் நூலகம் அது தான். கண்ணாடிக் கதவுகள் கொண்ட அலமாரிகளில் அடுக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் தலைப்புகளை நின்றபடியே படித்து விடலாம். செய்தித்தாள்களும் பத்திரிக்கைகளும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மேசை நாற்காலிகளும் உண்டு. அமைதியாக இருக்கும். சிறுவர்கள் புத்தகங்களை நான் படிக்க ஆரம்பித்தது அங்கேதான். தாத்தா, வீட்டிற்குப் போகலாம் என்று என்னைக் கூப்பிடும்வரை படித்துக் கொண்டிருப்பேன்.

ஆண்டுகள் கழிந்தன. எனக்கு 12 வயதாகும்போது அந்தக் கிராம நூலகத்தில் இருந்த புத்தகங்கள் எல்லாவற்றையுமே படித்து விட்டேன். இனி படிக்கப் புதுப்புத்தகங்கள் இல்லையே என்று நினைத்து நூலகத்துக்குப் போவதற்கே பிடிக்காமல் போயிற்று. ஆனாலும், மாலையில் தாத்தாவுடன் போவதை நிறுத்தி விடவில்லை.

ஒருநாள் மாலை நேரம் தாத்தாவுடன் வெளியே போய்விட்டு வந்து கொண்டிருந்தேன். மாலை இருளாக இருந்தது. தெரு விளக்குகள் அணைந்து அணைந்து எரிந்தன. தாத்தாவுக்குக் கண்பார்வை சரியாக இருக்கவில்லை. எனவே, அவர் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தேன்.

திடீரென்று நின்றுவிட்டார் அவர். “நான் கவிதையின் ஒரு பாதியைச் சொல்லுகிறேன் நீ மீதியைச் சொல்லி முடிக்கிறாயா” என்று கேட்டார். “அனைவருக்கும் தெரிந்த பாடல்தான்” என்றார்.

“நான் முயற்சி செய்கிறேன்” என்றேன். அடிக்கடி இந்த மாதிரி விளையாட்டுகளை நாங்கள் விளையாடியிருக்கிறோம். அதன் மூலம் நான் நிறையக் கவிதைகளைத் தெரிந்து கொண்டிருந்தேன். தாத்தா தொடங்கினார்.

“எனக்கு சிறகுகள் இருந்தால்...
பக்கத்துக் கிராமத்து நூலகத்துக்குப் பறந்து சென்று புத்தகங்களைப் படித்துத் தள்ளுவேன்” என்றேன் கொஞ்சம் கூடத் தயங்காமல்.



தாத்தாவுக்கு வியப்பு. "திரும்பச் சொல்லு" என்றார்.

"பக்கத்து கிராமத்து நூலகத்துக்கு பறந்து சென்று புத்தகங்களைப் படித்துத் தள்ளுவேன்". தாத்தா சிரித்து விட்டு "பாட்டை நிறைவு செய்ய இது என்ன ஓர் அசாதாரணக் கற்பனை! பாட்டின் மூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியுமா?" என்று கேட்டார்.

"எனக்கு சிறகுகள் இருந்தால்
நீலவானத்தில் சிறகடித்துப் பறப்பேன்
பூமியிலுள்ள அழகான இடங்களை எல்லாம் காண்பேன்.
உலகிலுள்ள பெரியோர்களை எல்லாம் சந்திப்பேன்.
மறைந்து கிடக்கும் புதையல்களை எல்லாம் தேடுவேன்".

தாத்தா எதுவும் பேசவில்லை வீட்டுக்குப் போனதும் அவருடைய இடத்தில் அமர்ந்து கொண்டு என்னைக் கூப்பிட்டார். களைத்துப் போயிருந்தாலும் மகிழ்ச்சியாகத் தெரிந்தார். என் சின்னக் கைகளைப் பற்றிக்கொண்டு, "அமெரிக்காவில் ஆண்ட்ரூ கார்னகீ என்றொரு பெரிய மனிதர் இருந்தார், தெரியுமா? ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த கோடீஸ்வரர். அவர் தன்னுடைய சொத்துகளை எல்லாம் முடிந்த அளவு கிராமப்புறங்களில் நூலகங்கள் கட்ட உயில் எழுதி வைத்தார். நான் அமெரிக்கா போனதில்லை. ஆனால், அங்கே கிராமங்களில் உள்ள நூலகங்கள் எல்லாம் ஆண்ட்ரூ கார்னகீயின் சொத்திலிருந்துதான் கட்டியிருக்கிறார்கள்.

நான் எவ்வளவு காலம் வாழப் போகிறேன் என்று தெரியாது. ஆனால், இன்றைக்குதான் நீ புத்தகங்களை எவ்வளவு நேசிக்கிறாய் என்பது கவிதையை நிறைவு செய்த போது உணர்ந்தேன். நீ வளர்ந்து பெரியவளானதும் உன் தேவைக்கு மேல் அதிகமாக உள்ள பணத்தை எடுத்து புத்தகங்கள் வாங்கி, ஒரு நூலகத் துக்காவது கொடுப்பேன் என்று சத்தியம் செய்வாயா?"

அந்தக் குளிர்கால இரவில், அவர் கைகளில் இருந்த சூடான கதகதப்பு என் கரங்களில் உறைந்தது. அவர் சாக்குக் கட்டியால் பலகையில் ஆயிரக்கணக்கான வரிகளை தினசரி எழுதி எழுதி, கைகள் சுருக்கம் விழுந்து கடினமாக இருந்தன. கார்னகீயைப் போல நாங்கள் செல்வந்தர்கள் அல்ல, ஆனால் தாத்தாவிடம் அனுபவமும் அறிவும் நிறையவே இருந்தன.

பின்னாளில் எனக்கு வசதிகள் நிறைந்த வாழ்க்கை அமைந்தது. தாத்தா மறைந்து பல வருடங்கள் ஆன பிறகும், அவருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நினைத்துக் கொண்டேன். இன்று, இன்ஃஃபோஸிஸ் ஃஃபவுண்டேஷன் வாயிலாக, பத்தாயிரத்திற்கும் அதிகமான நூலகங்களை என்னால் உருவாக்க முடிந்தது.

சிந்திப்போம், செயல்படுவோம்!

நூல்வெளி

திருமதி சுதா மூர்த்தி 1950 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 19 ஆம் நாள் வட கர்நாடக மாவட்டத்தில் ஷிக்கானில் விமலா குல்கர்னி - ஆர். ஹெச். குல்கர்னி தம்பதியருக்கு மகளாக பிறந்தார். சுதா மூர்த்தி மின் பொறியியலில் இளங்கலை பட்டமும் கணினி அறிவியலில் முதுகலை பட்டமும் பெற்றார். தன்னாட்சி நிறுவனமான டெல்கோவின் முதல் பெண் பொறியாளராக பணியாற்றினார். அவர் ஏராளமான நாவல்கள், பயணக்கட்டுரைகள், சிறு கதைகள் எழுதியுள்ளார். இன்ஃஃபோசிஸ் ஃஃபவுண்டேஷன் தொழிலதிபரான இவர் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நூலகம் என்ற இலட்சியத்துடன் இதுவரை அறுபத்தைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நூலகங்களை உருவாக்கி சிறுவயதில் அவரது தாத்தாவிற்கு கொடுத்த வாக்குறுதியைச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். ஏராளமான சமூக சேவைகளையும் செய்து கொண்டிருக்கிறார். 2006 இல் இந்திய அரசின் பத்மஸ்ரீ விருதை பெற்றார். அவரதுகதைகளும் தொகுப்புகளும் 15 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. நமது பாடப்பகுதி ஹவ் ஐ டாட் மை கிராண்ட்மதர் டூ ரீட் என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இதனை தமிழில் மொழியாக்கம் செய்தவர் சாருகேசி என்ற புனைப் பெயரைக் கொண்ட எஸ். விஸ்வநாதன் ஆவார்.

அ) பொருள் அறிவோம்.

செல்வந்தர் - பணக்காரர், சிமிட்டி மேடை - சிமெண்ட்டால் ஆன மேடை.
புதையல் - புதையுண்டு கிடக்கும் செல்வம், சத்தியம் - உண்மை.

ஆ) பிரித்து எழுதவும்.

1. அறிவுச்செல்வம் 2. உட்கார்ந்திருந்தார் 3. அதனடியில்
4. சிறகடித்து 5. வாக்குறுதி 6. பத்தாயிரம்

இ) சொற்றொடரில் அமைத்து எழுதவும்.

1. உயில் 2. தினசரி 3. வாயிலாக 4. நூலகம்

ஈ) அவர் சிரித்துவிட்டு ____________ எனத் தொடங்கும் பத்தியைப் படித்து பின்வரும் குறிப்புகளுக்கு ஏற்ப விடையளிக்கவும்.

1. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

i) அர்ஜுனனின் குரு ____________.
அ) விசுவாமித்திரர் ஆ) துரோணர் இ) வால்மீகி

ii) கொடுத்தால் குறையாதது ____________.
அ) பொருள் ஆ) பணம் இ) அறிவு

2. யார் யாரிடம் கூறியது?

i) "துரோணாச்சாரியாருக்கு ஏன் இவ்வாறு மரியாதை கொடுக்கிறாய்?"

ii) "ஒன்றே ஒன்று மட்டும்தான் இதற்கு விலக்கு. அதுதான் அறிவுச் செல்வம்"

உ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. அறிவுச் செல்வத்தின் சிறப்பு யாது?
2. சிறுமி முதன் முதலில் வெளியே சென்ற இடம் எது?
3. ஆண்ட்ரூ கார்னகீ தனது சொத்துகளை என்ன செய்தார்?
4. சிறுமி தாத்தாவின் கையைப் பற்றிக் கொண்டு நடந்ததேன்?
5. தனக்கு சிறகுகள் இருந்தால் என்ன செய்யப்போவதாக சிறுமி கூறினாள்?
6. கிராமத்து நூலகம் எவ்வாறு இருந்தது?

செயல்திட்டம்

➢ உங்கள் பகுதியிலுள்ள நூலகங்களின் பெயர்களை எழுதுக.

➢ நடமாடும் நூலகங்களைப் பற்றிய தகவல்களைச் சேகரியுங்கள்.

➢ கீழேயுள்ள எடுத்துக்காட்டைப் போன்று உங்களது நண்பர்களின் படங்களை ஒட்டி சேகர ஏடு உருவாக்கவும்.



பாடத்திற்கு அப்பால்...

எண்ணங்களை எடுத்துரைப்போம்.

1. கல்வி என்பது கொடுத்தால் பெருகும்!
2. மாணவர்களை மகத்தானவர்களாக உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே!
3. எனக்கு சிறகுகள் இருந்தால்...!

3. ஆல்

- பாவேந்தர் பாரதிதாசன்

அடி - கிளை, காய், இலை, நிழல்

ஆயிரம் கிளைகள் கொண்ட
அடிமரம் பெரிய யானை!
போயின மிலார்கள் வானில்!
பொலிந்தன பவளக் காய்கள்!
காயினை நிழலாற் காக்கும்
இலையெல்லாம், உள்ளங் கைகள்!
ஆயஊர் அடங்கும் நீழல்,
ஆலிடைக் காண லாகும்!

விழுதும் வேரும்

தூலம்போல் வளர்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள்! தூண்கள்!
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர்! வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம்!
நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்!

குரங்கின் அச்சம்

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று, குரங்கு தொட்டு
“விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்”
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

நூல்வெளி

பாவேந்தர் பாரதிதாசன் தான் இரசித்த இயற்கைக் காட்சிகளை இனிய தமிழில் **அழகின் சிரிப்பு** என்ற தலைப்பில் கவிதைகளாகப் படைத்துள்ளார். நமது பாடப்பகுதி அதிலுள்ள ‘ஆல்’ என்ற தலைப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில அடிகள் ஆகும்.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ. பொருள் அறிவோம்.

தூலம் - உத்திரம், மண்டுதல் - நெருங்குதல்
திறல் - திறமை, நீழல் - நிழல்

ஆ. குழுவில் பொருந்தாததை வட்டமிடவும்.

1. அ) கிளை ஆ) விழுது இ) விளக்கு
2. அ) குரங்கு ஆ) பாம்பு இ) பிள்ளை

இ. பொருத்தவும்.

அடிமரம்	உள்ளங்கை
மிலார்கள்	அடங்கும் நீழல்
இலை	பெரிய யானை
ஆய ஊர்	வானில்போயின

ஈ) கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

1. இலைகள் காயை ________________ காக்கின்றன.
2. கிளை ________________போல் வளர்கிறது.
3. கிளைக்குத் தூண்கள் ________________ ஆகும்.
4. ஒற்றைக்கால் நெடியபந்தல் ________________.

உ. வலைப்படத்தை நிறைவு செய்யவும்.



செயல்

➢ நீ கண்டுகளித்த ஏதேனும் ஓர் இயற்கை நிகழ்வை எளிய கவிதை வடிவில் எழுதி வகுப்பில் வாசிக்கவும்.

செயல்திட்டம்

➢ இணையம் வாயிலாக பின்வரும் பாரதிதாசன் பற்றிய கருத்து வரைபடத்தை நிறைவு செய்யவும்.



4. பதிப்பக ஆசிரியருக்கு கடிதம்

அனுப்புநர் :
பேரின்ப இராஜன்,
ஏழாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
திருவள்ளுவர் உயர்நிலைப் பள்ளி,
90 அடி சாலை,
தாராவி,
மும்பை - 17.

பெறுநர் :
பதிப்பக ஆசிரியர் அவர்கள்,
புத்தம்புது காலை நாளிதழ் அலுவலகம்,
நடராஜ் சாலை,
மலாடு (மே),
மும்பை - 64.

பொருள் : புத்தொளி சிறுவர் மலரில் கவிதையை தேர்வு செய்து வெளியிட்டது தொடர்பாக

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம், தங்களது புத்தம்புது காலை நாளிதழைத் தவறாது படிக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களுள் நானும் ஒருவன். அதிலும் குறிப்பாக, ஒவ்வொரு வாரமும் வெளியாகும் புத்தொளி சிறுவர் மலரை பலமுறை விரும்பிப் படிப்பவன். புத்தம் புது படைப்பாளர்களை உருவாக்கும் நோக்கில் தங்களது நாளிதழ் நடத்திய சிறந்த 100 கவிதைகளுக்கான வாசகர் போட்டியில் பங்கு பெற்றதைப் பெருமையாகக் கருதுகிறேன். எனது படைப்பான 'பொதிகைச் சாரலிலே' என்ற கவிதையை தேர்வு செய்து நாளிதழின் இணைப்பு நூலான புத்தொளி சிறுவர் மலரில் மலரச் செய்துள்ளீர்கள். அது மட்டுமின்றி, அம்மலரையும் பாராட்டுச் சான்றிதழையும் எனது முகவரிக்கே அனுப்பி என்னை மட்டற்ற மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டீர்கள். எம்போன்ற வாசகர்களை ஊக்குவித்து நெஞ்சத்து நினைவலைகளை பற்பல புதிய படைப்புகளாக்கி, குன்றிலிட்ட விளக்காக, கோபுர தீபமாக ஒளிரச் செய்யும் உங்கள் சீரிய முயற்சிக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

ராஜன்

(பேரின்ப ராஜன்)
இடம் : மும்பை : 17.
நாள் : 08.12.2022

செயல்

➢ கீழே தரப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி, பேரின்ப ராஜன் சிறுவர் மலரில் தனது கவிதை வெளியானதை தாத்தாவிற்கு மின்னஞ்சல் கடிதம் வழியே தெரியப்படுத்துவது போன்று ஒரு மடல் வரையவும்.

(நாளிதழ் பெயர் - கவிதைத் தலைப்பு - நாள் - பாராட்டுச் சான்றிதழ் - மின் இதழ்)

5. நட்பு

- தி. பரமேசுவரி

பள்ளியின் முதல்நாள்
பக்கத்து இருக்கை மாணவரிடம்
தயக்கத்துடன் கைகுலுக்குகிறோம்!

புதுவீடு செல்கையில்
அடுத்த வீட்டு அன்பர்களை
அதைரியமாகவே வீட்டுக்கு அழைக்கிறோம்!

பேசும் நண்பர்களுடன்
சந்தேகத்துடனே
அரட்டை அடிக்கிறோம்!

நம்மை நோக்கி
நீளும் கரங்களில்
நட்பு நமக்காகக் காத்திருப்பது அறியாமல்!



நூல்வெளி

இப்பாடலின் ஆசிரியர் தி. பரமேசுவரி. இவர், 'எனக்கான வெளிச்சம்', 'ஓசை புதையும் வெளி', 'தனியள்' ஆகிய மூன்று கவிதைத் தொகுப்புகளையும் 'சமூகம் வலைத்தளம் பெண்', 'சொல்லால் அழியும் துயர்' ஆகிய இரு கட்டுரைத் தொகுப்புகளையும் எழுதியுள்ளார். இவர் அரசு மேனிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

1. அதைரியம் இதன் எதிர்ச்சொல் ________________.

அ) தைரியம் ஆ) விவேகம் இ) ஆவேசம்

2. பக்கத்து + இருக்கை எனும் சொற்களைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ________________.

அ) பக்கத்திருக்கை ஆ) பக்கத்து இருக்கை
இ) பக்கத்துக்கு இருக்கை

3. கைகுலுக்குதல் இதன் அடையாளம் ________________.

அ) மரியாதை ஆ) நட்பு இ) பகைமை

ஆ. வாக்கியத்தில் அமைத்து எழுதவும்.

1. தயக்கத்துடன் 2. அரட்டை 3. அறியாமல்

இ. அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை எழுதவும்.

1. பக்கத்து <u>அபார்ட்மென்ட்டில்</u> கண்ணன் வசிக்கிறான்.
2. கோகிலா <u>ரோபோ</u> போன்று நடக்கிறாள்
3. டேவிட்டின் மாமா <u>இன்ஸ்பெக்டர்</u> ஆக பணிசெய்கிறார்.

ஈ. உனது நண்பர்களோடு உள்ள நட்பில் நீ மகிழும் நிகழ்வுகளைக் கதையாக எழுதவும்.

....

....

....

....

உரையாடி மகிழ்வோம்

அமித் : ஹலோ சுந்தர், நலமாக இருக்கிறாயா?

சுந்தர் : ஹே! நான் நலம் நண்பா. தீபாவளி விடுமுறைக்கு நீ எங்காவது சென்றாயா?

அமித் : ஆமாம் சுந்தர். நான் என் தங்கை மற்றும் அப்பா, அம்மாவுடன் புனேயிலுள்ள என் அத்தை வீட்டிற்குச் சென்றிருந்தேன். நீ எங்கு சென்றிருந்தாய்?

சுந்தர் : ______________________________

அமித் : உங்கள் வீட்டில் நீங்கள் எத்தனை பேர்?

சுந்தர் : ______________________________

அமித் : சுந்தர்! என் தங்கைக்கு இன்று பிறந்தநாள், வீட்டிற்கு வருவாயா? என் பெற்றோருக்கும் உன்னை அறிமுகம் செய்கிறேன்.

சுந்தர் : கண்டிப்பாக வருகிறேன், அவளுக்கு என்ன பரிசு பிடிக்கும்?

அமித் : ______________________________

சுந்தர் : நன்றி நண்பா! மாலை சந்திப்போம்.

அமித் : ______________________________

செயல்

➢ **பள்ளியின் முதல் நாள்** உனது அனுபவத்தைக் குறித்து எழுதுக.

➢ உன் வீட்டின் அருகில் உள்ள நண்பர்களைக் குறித்தும் அவர்களோடு உனக்கு ஏற்பட்ட நட்பு குறித்தும் வகுப்பறையில் பேசவும்.

செயல்திட்டம்

➢ நட்பு எனும் தலைப்பில் கவிதை எழுதி வரவும்.

தெரிந்து கொள்வோம்

உலகில் கவிதைகளை விரும்பாதவர்களே இல்லை எனலாம். கவிதைகளின் ஒரு வடிவம் எளிய மொழி நடையில் அமைவது, அனைவராலும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியது, நவீன தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்கு சான்று எவ்வித யாப்பிலக்கணக் கட்டுப்பாடுகளும் இல்லாதது. அனைவராலும் விரும்பக்கூடியது, அதுவே புதுக்கவிதை ஆகும். 'புதுக்கவிதையின் தந்தை' எனும் புகழுக்குரியவர் தேசியக்கவி பாரதியார் ஆவார்.

6. பாகப்பிரிவினை

(நாடகம்)

(இராஜஸ்தான் மாநிலத்தில் பாலைவனத்திற்கு அருகில் இராஜ்கர் என்ற சிறிய கிராமம். அந்த கிராமத்தில் கன்ஷியாம் ஜகத் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு அங்குஷ், ஆயுஷ், கனிஷ்க் என்று மூன்று மகன்கள். கன்ஷியாம் ஜகத் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்துக் குடும்பத்தை நடத்தினார். மகன்களை நன்றாக வளர்த்தார். இறுதிக் காலத்தில் அவரது சொத்துகளை மகன்களுக்கு பிரித்துக் கொடுத்தார். அவர் அன்புடன் பராமரித்து வந்த பதினேழு ஒட்டகங்களை மூன்று மகன்களுக்கும் எவ்வாறு பிரித்துத் தர வேண்டும் என்று ஓர் உயில் எழுதி வைத்தார். அவர் மறைந்த சில நாட்களுக்கு பிறகு அப்பாவின் உயிலை மூன்று மகன்களும் படிக்கிறார்கள்...)

காட்சி 1

(உறுப்பினர்கள் : அங்குஷ், ஆயுஷ், கனிஷ்க்)

அங்குஷ் : அப்பாவின் உயிலைப் படிக்கட்டுமா? 17 ஒட்டகங்களில் மூத்த மகனுக்கு சரிபாதி, மூன்றில் ஒரு பங்கு இரண்டாவது மகனுக்கு, ஒன்பதில் ஒரு பங்கு மூன்றாவது மகனுக்கு.

ஆயுஷ் : என்ன இது? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! 17 இல் சரிபாதி என்றால் எப்படி பிரிப்பது? வீடு, நிலம் என்றால் என்ன அளவில் வேண்டுமானாலும் பிரிக்கலாம். உயிருள்ள விலங்குகளை, அதுவும் ஒற்றைப்படை எண்ணிக்கையை எப்படி பிரிப்பது?

கனிஷ்க் : ஒட்டகங்களோ 17. அது ஒரு பகா எண். நாம் மூவர் சமமாக பிரிக்க முடியாது. அப்பா, நன்றாக ஏதோ யோசித்துத்தான் இப்படி எழுதி இருப்பார்.

அங்குஷ் : தம்பிகளே! நம் ஊரில் எந்தச் சிக்கலாக இருந்தாலும், அதற்கு தீர்வு தருவது கௌரவ் கோத்தாரி ஐயாதான். அவரிடம் சென்று அதற்குத் தீர்வு காணலாம்.

கனிஷ்க் : ஆமாம் அண்ணா! நீங்கள் சொல்வது சரிதான். வாருங்கள்! போகலாம்.

காட்சி 2

(உறுப்பினர்கள் : கௌரவ் கோத்தாரி, மூன்று சகோதரர்கள்)

மூன்று சகோதரர்கள் : வணக்கம், ஐயா!

கோத்தாரி : வாங்க! வணக்கம். அனைவரும் நலம் தானே! உங்கள் அப்பா மிகவும் எளிமையான, நல்ல மனிதர். எனக்கும் நல்ல நண்பர். அவரை இழந்தது எனக்கு மிகவும் வருத்தம்.

அங்குஷ் : ஆமாம் ஐயா! அப்பா இல்லாதது எங்களுக்கு மாபெரும் இழப்புதான்.

கோத்தாரி : உண்மைதான். சரி, என்ன விஷயம்? மூவரும் ஒன்றாக வந்திருக்கிறீர்கள், ஏதாவது உதவி வேண்டுமா?

அங்குஷ் : ஐயா! எங்களுடைய தந்தை ஓர் உயில் எழுதி வைத்துள்ளார். அதில் கூறியுள்ளபடி ஒட்டகங்களை எவ்வாறு பிரிப்பது என்று தெரியவில்லை. ஒரே குழப்பமாக இருக்கிறது. அதற்குத் தீர்வு காணவே உங்களை நாடி வந்துள்ளோம்.

கோத்தாரி : அப்படியா, சரி, அந்த உயிலைக் கொடுங்கள் (உயிலை வாசிக்கிறார் புன்னகையுடன்) சற்றே யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயம் தான். நாளைய தினம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். சரியான தீர்வைக் காண்போம்.

காட்சி 3

(உறுப்பினர்கள் : மூன்று சகோதரர்கள், கோத்தாரி, ஊர் மக்கள் சிலர்)

(அடுத்த நாள் கோத்தாரி ஓர் ஒட்டகத்தோடு கன்ஷியாம் வீட்டிற்கு வருகிறார்)

ஊர் மக்கள் : இந்த விசித்திரமான பாகப்பிரிவினைச் சிக்கலை கோத்தாரி ஐயா எவ்வாறு தீர்க்கப் போகிறார்!

கோத்தாரி : தம்பிகளே! வாருங்கள், ஒட்டக லாயத்திற்குச் செல்வோம். நான் கொண்டு வந்திருக்கும் ஒட்டகத்தையும், அவற்றோடு சேர்த்து நிற்க வையுங்கள்.

மூன்று மகன்கள் : அப்படியே ஐயா. (அப்படியே செய்தார்கள்).

கோத்தாரி : (உயிலைப் படிக்கிறார்) 17 ஒட்டகங்களில் மூத்த மகனுக்கு சரிபாதி அங்குஷ், இந்த ஒட்டகங்களில் சரிபாதி உனக்கு என்றால், உன் பங்குக்கு எத்தனை?

அங்குஷ் : ஒன்பது ஐயா!

கோத்தாரி : மூன்றில் ஒரு பங்கு இரண்டாவது மகனுக்கு. அப்படி என்றால் ஆயுஷ்! உன் பங்கு எத்தனை?

ஆயுஷ் : ஆறு ஐயா.

கோத்தாரி : மிகச் சரி. ஒன்பதில் ஒரு பங்கு மூன்றாவது மகனுக்கு என்றால், கனிஷ்க்! உன் பங்குக்கு எத்தனை ஒட்டகங்கள்?

கனிஷ்க் : இரண்டு ஐயா.

கோத்தாரி : மீதம் எத்தனை ஒட்டகங்கள்?

மூவரும் : ஒன்று ஐயா.



கோத்தாரி : அந்த ஒன்று யாருடையது?

மூவரும் : (ஆச்சரியமாக) தங்களது ஐயா. தாங்கள்தானே கொண்டு வந்தீங்க. ஐயா! உங்க புத்திசாலித்தனத்தால் எங்க அப்பா எழுதிய உயில்படி ஒட்டகங்களை பிரிச்சி கொடுத்தீங்க. மிக்க நன்றி ஐயா!

கோத்தாரி : உங்கள் அப்பா கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த அனைத்து சொத்துகளையும் பிரித்துக் கொடுத்த விதத்திலிருந்து, ஒட்டகங்களின் எண்ணிக்கையில் வேறுபாடு இருந்தாலும், உங்களுக்கு கிடைத்த சொத்துகள் பாரபட்சமின்றி சமமாக பங்கிடப் பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. எனவே, அனைவரும் சந்தோஷமாகவும் ஒற்றுமையாகவும் இருங்கள்.

ஊர் மக்கள் : கோத்தாரி ஐயாவின் புத்திசாலித்தனம் இன்னும் ஒருமுறை நிரூபணம் ஆயிற்று.

(மகிழ்வுடன் பாராட்டிக் கொண்டே சென்றனர்)

சிந்திப்போம், செயல்படுவோம்!

அ) பொருள் அறிவோம்.

தீர்வு - முடிவு, நிரூபணம் - உறுதி, பாகம் - பங்கு,
பாலைவனம் - மணற்பாங்கான இடம், சிக்கல் - குழப்பம்.

ஆ) யார் யாரிடம் கூறியது?

1. தம்பிகளே! நம்மூரில் எந்தச்சிக்கலாக இருந்தாலும் அதற்கு தீர்வு தருவது கௌரவ் கோத்தாரி ஐயாதான்.
2. மூவரும் ஒன்றாக வந்திருக்கிறீர்கள். ஏதாவது உதவி வேண்டுமா?
3. ஐயா! எங்களுடைய தந்தை ஓர் உயில் எழுதி வைத்துள்ளார்.

இ) வினாக்களுக்கு விடையளிக்கவும்.

1. வலைப்படத்தை நிறைவு செய்வோம்.

கன்ஷியாம் ஜகத்

மாநிலம்	கிராமம்	மகன்களின் பெயர்கள்	பராமரித்து வளர்த்தவை
__________	__________	__________ __________ __________	__________

2. உயிலில் எழுதப்படிருந்தது யாது?
3. கன்ஷியாம் ஜகத் குறித்து கௌரவ் கோத்தாரி கூறியது யாது?
4. உயிலின்படி சகோதரர்களில் ஒவ்வொருவருக்கும் எத்தனை ஒட்டகங்கள் கிடைத்தன?

ஈ) **அடைப்பு குறிக்குள் கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி சொற்றொடரை விரிவு படுத்தி எழுதவும்.**

எ.கா. நான் வாசிப்பேன்.

(பாடம், வகுப்பறையில், தமிழ்)

நான் பாடம் வாசிப்பேன்.

நான் வகுப்பறையில் பாடம் வாசிப்பேன்.

நான் வகுப்பறையில் தமிழ் பாடம் வாசிப்பேன்.

1. மழை பெய்தது.
   (இன்று, காலை, வேகமாக)
2. நான் வரைந்தேன்.
   (படம், அழகிய, மயில்)
3. நான் செல்வேன்.
   (ஊருக்கு, நாளை, தொடர்வண்டியில்)

செயல்

- ➢ நாடகத்தை வகுப்பில் குழுவாக சேர்ந்து நடித்துக் காட்டவும்.
- ➢ நீங்கள் நேரில் மேடையில் பார்த்த நாடகத்தைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடவும்.

செயல்திட்டம்

- ➢ வேறுசில சமூக, வரலாற்று நாடகங்களை இணைய தளம் மூலம் அறிந்து, எழுதி, வகுப்பறையில் குழுவாக நடித்துக் காட்டவும்.

நாடகம் எழுதுவோம்; நடிப்போம்

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை வாசிக்கவும். அவற்றைப் பயன்படுத்தி நாடகம் எழுதவும், அந்நாடகத்திற்கு ஏற்ற தலைப்பினை எழுதவும். அதனை நடித்துக் காட்டவும்.

1) சங்ககாலப் புலவர் மோசிகீரனார் - சேர நாடு செல்லுதல் - தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை - பரிசில் பெற நினைத்தல் - களைப்பு, பசி மயக்கம் அடைதல் - ஓய்வெடுக்க நினைத்தல் - சுற்றும் முற்றும் பார்த்தல் - ஒரு கட்டிலில் படுத்து உறங்குதல் - காவலர்கள் மன்னனிடம் புகார் கூறுதல் - மன்னன் சினம் கொள்ளுதல் - புலவரைக் காணல் - கவரி வீசுதல் - முரசுக் கட்டில் என அறிதல் - மன்னிக்க வேண்டுதல் - தமிழுக்கு அல்லவா கவரி வீசினேன் எனல் - மன்னனைப் போற்றிப் புகழுதல்.

2) மொகலாய பேரரசர் அக்பர் - அறிவாற்றலும் திறமையும் மிகுந்தவர் பீர்பால் - அமைச்சர்கள் பொறாமை கொள்ளல் - மன்னரிடம் முறையிடல் - மன்னர் சோதிக்க முடிவெடுத்தல் - நாட்டில் எத்தனை காகங்கள் உள்ளன எனக் கேட்டல் - பீர்பால் பதில் அளித்தல் - அமைச்சர் ஒருவர் எண்ணிக்கை குறைவாக இருந்தால் என வினவுதல் - உறவினரைக் காண சென்றுள்ளன - அதிக எண்ணிக்கை இருந்தால் - உறவினரைக் காண வந்துள்ளன - அனைவரும் கைதட்டி பாராட்டுதல்.

इयत्ता १ ली ते ८ वी साठीची पाठ्यपुस्तक मंडळाची वैशिष्ट्यपूर्ण पुस्तके

- मुलांसाठीच्या संस्कार कथा
- बालगीते
- उपयुक्त असा मराठी भाषा शब्दार्थ संग्रह
- सर्वांच्या संग्रही असावी अशी पुस्तके
- स्फूर्तीगीत
- गीतमंजुषा
- निवडक कवी, लेखक यांच्या कथांनी युक्त पुस्तक







पुस्तक मागणीसाठी www.ebalbharati.in, www.balbharati.in संकेतस्थळावर भेट द्या.

साहित्य पाठ्यपुस्तक मंडळाच्या विभागीय भांडारांमध्ये विक्रीसाठी उपलब्ध आहे.

ebalbharati

विभागीय भांडारे संपर्क क्रमांक : पुणे - ☎ २५६५९४६५, कोल्हापूर- ☎ २४६८५७६, मुंबई (गोरेगाव) - ☎ २८७७१८४२, पनवेल - ☎ २७४६२६४६५, नाशिक - ☎ २३९१५११, औरंगाबाद - ☎ २३३२१७१, नागपूर - ☎ २५४७७१६/२५२३०७८, लातूर - ☎ २२०९३०, अमरावती - ☎ २५३०९६५

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் பாடத்திட்ட ஆய்வுக் கழகம், புனே - 411004.

बालभारती इयत्ता ७ वी (तमिळ माध्यम)

₹ 46.00